# மாரியும் உண்டு

MADURAI UNIVERSITY LIBRARY.
MADURAI-2.
350

வி. மரிய அந்தோனி, M. A.

தமிழ் இலக்கியக் கழகம்
தூத்துக்குடி.

| | |
|---|---|
| முதற் பதிப்பு | 1952 |
| இரண்டாம் பதிப்பு | 1954 |
| மூன்றாம் பதிப்பு | 1956 |
| நான்காம் பதிப்பு | 1965 |
| ஐந்தாம் பதிப்பு | 1966 |
| ஆறாம் பதிப்பு | 1967 |

85671
031:3N155;11
K7;1

விலை ரூ. 1.75

# முன்னுரை

பாரியின் வரலாறு தழுவிய பாடல்களைக் கற்கவும் கற்பிக்கவும் வாய்ப்பு நேர்ந்தவிடத்து என் உள்ளத்தே ஓர் எண்ணம் உதித்தது. பாரியின் வரலாறு இழை பிரிந்து சிதைந்த ஒரு பட்டாடையாகக் காண்கிறது. சில இழைகள் தகுந்த இடத்தில் உள்ளன; சில மாறிக் கிடக்கின்றன; சில மறைந்து விட்டன. இவற்றினை இயன்ற வரையிற் பொருத்தி, இல்லாத இழைகளையும் இயன்றவாறு இடமறிந்து சேர்த்துப் பட்டாடையை உருவாக்க முயன்றுள்ளேன். அறிஞர் பலர் ஆய்ந்து கண்ட உண்மைகளைக் கொள்ளுமட்டும் கொண்டுளேன். புதிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் சிற்சில ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. அவை ஏற்கப்படின், உழைப்பின் உறுபயன் எய்தியதாக மகிழ்வேன். குறை கண்ட விடத்துத் திருத்தியும் நிறை கண்ட விடத்துப் போற்றியும் அறிஞர் என்னை ஊக்குவர் என்னும் நம்பிக்கை உடையேன். இதனை வெளியிட ஏற்றுக்கொண்ட தமிழ் இலக்கியக் கழகத்தாருக்கும், ஆதரிக்கும் அனைவருக்கும் என் நன்றி.

விருதுநகர்,
3—10—1952

வி. மரிய அந்தோனி.

# இந்நூலைப் பற்றிய மதிப்புரைப் பகுதிகள் சில

---

## 'ஆல் இந்தியா ரேடியோ' : திருச்சிராப்பள்ளி

## 27—7—1953

* * * * * * *

"மாரியும் உண்டு" என்ற இந்த நூல் முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பெருந்தகையோனும், கடையெழு வள்ளல்களில் சிறந்தவனுமாகிய பாரியின் பெருமை பற்றிப் பேசுகிறது. * * * ஆசிரியர் தம் முன்னுரையில், இழை பிரிந்து சிதைந்த பட்டாடையாகக் காணும் பாரியின் வரலாற்றைச் சீர்ப்படுத்தி உருவாக்க முயன்றுள்ளதாகக் கூறுகிறார். இந்த நூல் வரலாறு என்ற முறையில் அமையாவிடினும், இலக்கியச் சிறப்பைப் பெற்றுள்ளது. காலத்தின் எல்லையைக் கற்பனையாலும் எட்டிப்பிடிக்க முடியாத நிலைமையினால், பாரியின் வரலாற்று அம்சம் இதில் திறம்படக் காண வில்லை.

பாரியையும் மாரியையும் ஒப்பிட்டும் வேற்றுமைப் படுத்தியும் காட்டும் 'பாரியும் மாரியும்' என்ற அத்தியாயம் மிகவும் நன்றாக இருக்கிறது. மயிலுக்குத் தன் போர்வையை ஈந்த பேகனுக்கும் அவன் இல்லாள் கண்ணகிக்கும் இடையில் விளைந்த ஊடல் பற்றிப் பேசும் பகுதி, பாரியின் வரலாற்றுக்கு ஒட்டியதாக அமையவில்லை என்றாலும், மிகவும் சுவையாக இருக்கிறது. பாரியை இழந்து தவிக்கும் கபிலரும் பாரி மகளிரும் பாடிய பாடல்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூலின் பிற்பகுதி உள்ளத்தைத் தொடு கிறது.

நூலின் பெரும்பாகம் பழம் பாடல்களின் துணையைக் கொண்டே எழுதப்பட்டிருக்கிறது. பாரியின்மீது படையெடுத்த மூவேந்தரைப்பற்றி ஆராய்கிறார் ஆசிரியர். மூவேந்தரின் பெயரை எப்புலவரும் குறிக்கவில்லை. மதுரை மன்னனும், சேர சோழர் கொடி வழியில் தோன்றிய தமிழ் மறம் சாலாத மற்றிரு சிற்றூர் அரசருமே அம்மூவேந்தர்கள் எனக் கூறுகிறார் ஆசிரியர். பறம்புமலையின் இருப்பிடம் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரான்மலையே என ஆராய்கிறார் ஆசிரியர். பாரி வள்ளலின் பெருமையை உணர்த்தும் இந்நூல் வரவேற்கத் தகுந்த நன்முயற்சியாகும்.

**தமிழ் நாடு : மதுரை**

**2—8—1953**

சங்க காலக் கடையெழு வள்ளல்களில் ஒருவராகிய பாரியின் கொடைச் சிறப்பையும் வரலாற்றையும் விளக்கிக் கூறும் நூல் இது.

திருக்குறள், சங்கநூற் பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, காவியங்கள் முதலியவற்றிலிருந்து கொண்ட அகச்சான்றுகளும், ஆசிரியரின் ஆங்கிலப் புலமை தழுவிய ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவும், தெளிந்த வாதங்களும், பீடுநடையிட்டுச் செல்லும் உயர் தமிழ் நடையும் ஒருங்கே இழைந்து இந்நூலை ஒரு தலை சிறந்த இலக்கியமாக இலங்கச் செய்கின்றன.

ஆராய்ச்சித் துறையில் இன்றும் அதிகமான நூல்கள் தேவைப்படும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியுலகிற்கு இவ்வாசிரியர் அளிக்கும் இணையற்ற பரிசு இவ்வரிய நூல் கடின நடையினையுடைய சங்க நூற்களை ஓரளவு தமிழ் அறிவுடையோரும் கற்று இன்புற வசதியளிக்கும் இந்நூல் தமிழ் மாணவர்களின் கையில் திகழுதற்குரியது.

## ‘சுதேசமித்திரன்’ : சென்னை

## 7—9—1953

முல்லைக் கொடிக்குத் தன் தேரினை ஆதரவாகக் கொடுத்த வேள் பாரியின் புகழ் தமிழ் இலக்கியத்தில் பரவி இருக்கிறது. அவன் சரித்திரத்தைப் புறநானூற்றுப் பாடல்களைக் கொண்டு ஸ்ரீ மரிய அந்தோனி இந்நூலில் எழுதியிருக்கிறார் . . . . . . . புறநானூற்றுப் பாடல்களை நுண்ணிதாய் ஆராய்ந்து இந்நூலாசிரியர் சிற்சில விடங்களில் பிறர் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் தம் கருத்தையே இதில் விளக்கியிருக்கிறார். எனவே பாரியைப் பற்றின ஆராய்ச்சியில் இது பயன் படும் ஒரு நூலாகும்.

கபிலர் தம் பாடலில் ‘பாரி ஒருவனு மல்லன்; மாரியும் உண்டீங்கு உலகு புரப்பதுவே’ (புறம். 200) என்று மழையினும் பாரியின் ஈகை சிறப்புடைத்தாக வர்ணிக்கிறார். இதுதான் இந்நூலில் முக்கியமாக விளக்க எடுத்துக்கொண்ட விஷயம். கடையெழு வள்ளல்களில் ஒருவன் எனப் பாரி புகழப்படுபவன். முடிவில் அவன் தன்னிடம் இரந்த மூன்று வேந்தர்களுக்குத் தன்னையும் தன் நாட்டையும் கொடுத்துவிட்டான்! அக்காலத்தில் கொடையின் சிறப்பை அவ்வளவு உயர்வாகப் புலவர்கள் பாடினர். பாரியின் கொடை என்ன பயன் தந்தது என இக்காலத்தவர் ஆராயின் வேறு முடிவுக்கே வருவர். . . . ‘பாத்திர மறிந்து பிச்சையிடு’ என்பதே பிற்கால அறிஞர் உரை. இஃது எப்படியாயினும், இலக்கியத் துறையில் அக்கால மரபினையொட்டிப் பாரிக்குப் பெரு மதிப்பு உண்டு. அதைச் சிதையாமல் இந்நூலாசிரியர் திரட்டியுள்ளார்.

—

# பொருள் அட்டவணை

MADURAI UNIVERSITY LIBRARY, MADURAI-2.


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | மாரிச் சிறப்பு | | ... | 1 |
| 2. | பாரியும் மாரியும் | ... | ... | 11 |
| 3. | பறம்பு நாடு | ... | ... | 19 |
| 4. | பாரி வள்ளல் | ... | ... | 31 |
| 5. | அரசர் அழுக்காறு | ... | ... | 41 |
| 6. | மூவேந்தர் முற்றுகை | ... | ... | 51 |
| 7. | வேந்தர் தோல்வி | ... | ... | 59 |
| 8. | கொடையும் கொலையும் | ... | ... | 74 |
| 9. | கபிலர் துயரம் | ... | ... | 86 |
| 10. | மண மறுப்பு | ... | ... | 101 |
| 11. | நட்புக் கடன் | ... | ... | 116 |

MADURAI UNIVERSITY LIBRARY.
MADURAI-2.

# மாரியும் உண்டு

## 1. மாரிச் சிறப்பு

இருபது ஆண்டுகளின் முன்னர்ச் சிற்றூர்களில் ஒரு விழா என்றால் அதன் இறுதி நாள் இரவில் நாடகம் நடைபெறும். இந்நாடகம் ஓர் இரவோடு முடிவு பெறுவதும் உண்டு; இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து நாடகங்கள் நடைபெறுவதும் உண்டு; ஒரு வரலாறே இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தொடர்ச்சியாக நடிக்கப் பெறுவதும் உண்டு.

அக்காலத்திற் சிற்றூர்களில் வாழும் மக்களுக்கு இந் நாடகங்களைத் தவிர இன்பப் பொழுது போக்கிற்கு வேறு வழி இல்லை. அதுவும் ஆண்டிற்கு ஒரு முறையே வாய்ப்பது. ஆதலின் அம் மக்கள் அவற்றை ஆர்வத்தோடு பார்த்து மகிழ்ந்தனர். படிப்படியாக நாடகக் குழுவினர் நகரங்களில் நடிக்கும் நாடகங்கள் சிற்றூர் நாடகங்களுக்கு உலை வைத்தன. திரைப் படம் நடைமுறையில் வந்ததும் சிற்றூர் நாடகங்கள் மடிந்து ஒழிந்தன.

நிகழ்ச்சிகளை இயற்கைக் காட்சிகளுடன் இணைத்து, உண்மை நிகழ்ச்சிகளாக்கி உவகை ஊட்டும் ஒலித்திரைப் படத்தின் முன்னிலையில், தக்க பின்னணித் திரைகளும் இல்லாத சிற்றூர் நாடகங்கள் சிதைந்து மறைந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

இச் சிற்றூர் நாடகங்களிற் சில குறிப்பிட்ட அமைப்பு முறைகள் உண்டு. அரசனும் அமைச்சனும் இல்லாத நாடகமே அங்குக் காண இயலாது. ஓர் உழவனின் வாழ்க்கையை விளக்கும் நாடகமாகவே இருப்பினும், அரசனுக்கும் உழவனுக்கும் கதை நிகழ்ச்சிகளில் தொடர்பே இல்லாது போயினும், அரசனுக்கும் அமைச்சனுக்கும் ஆங்கு இடம் உண்டு. அரசனுக்குக் கட்டியங் கூறுவதிலே அரை மணி நேரம் கழியும்; அமைச்சனுக்குக் கட்டியங் கூற இன்னும் ஓர் அரை மணி நேரம். அரசனும் அமைச்சனும் ஆசனங்களில் அமர்ந்த பின்னர் ''தேச விசாரணை'' ஆரம்பம் ஆகும். தன் நாட்டு வளத்தைக் குறித்து அரசன் அமைச்சனை உசாவி அறியும் பகுதி அது. அரசனது வினாக்களுக்கு அமைச்சன் விடையிறுத்தல் வேண்டும். வினாவும்விடையும் பாட்டாகவே மிளிரும். பாட்டின் பொருள் உரைநடையிலும் உரைக்கப்படும். சொற்களின் அழுத்தந் திருத்தங்கள் நாடக மேடைக்கென்றே அமைந்த தனி இயல்பு வாய்ந்தவை. வாய் பாடும்; உடல் உறுப்புகள் அனைத்தும் அசையக் கூடுமான வகைகளிலெல்லாம் அசையும்; கால்கள் நடனம் ஆடி வரும். இவை யாவும் ஒன்றுகூடிய நிகழ்ச்சிக்கே நடிப்பு என்னும் பெயர் அக்காலத்தில் வழங்கி வந்தது.

''மந்திரி!'' என்று விளிப்பான் அரசன். அடிக்க வருபவன் போல் வெடுக்கென்று, ''அரசே!'' என்று மறு மொழி புகல்வான் அமைச்சன். அரசன் பாடுவான்:

''மந்திரி, வாராய்; என்றன் முன் கூறுய்;
மாதம் மூன்று மாரி பெய்து செழிக்குதா சீராய்?''

உடனே வசனம் தொடரும்: ''மந்திரி! நமது நாட்டில், மாதம் மும்மாரி பெய்து, குடிகளெல்லாம் செழிப்பாக வாழ்கிறுர்களா, மந்திரி?''

அமைச்சன் பாடுவான்:

''மாநகரை ஆளும் அரசே!
மாதம் மூன்று மாரி பெய்து செழிக்குது சீராய்.''

வசனம்: ''அரசே! நமது நாட்டில், மாதம் மும்மாரி பெய்து குடிகளெல்லாம் செழிப்பாக வாழ்கிறுர்கள், அரசே!'' இந்த நேரத்தில் கோமாளி குறுக்கிட்டு, ''மும்மாரி பெய்வதாக மந்திரி சொல்கிறுர்; இங்கே மண்மாரிதான் பெய்கிறது'' என்று கிண்டல் செய்வான். நாடகம் பார்ப்பவர் குலுங்கக் குலுங்க நகைப்பர். அரசனின் விஞ தொடரும்:

''மங்கையர் கற்புக்குப் பங்கம் இல்லாமலே வாழு கின்றனரா?''

''மங்கையர் கற்புக்குப் பங்கம் இல்லாமலே வாழு கின்றனரே'' என்று அமைச்சன் விடையிறுப்பான்.

இது வேடிக்கையாகத் தோன்றும் நமக்கு. ''நாட்டில் மழை பெய்வது கூட மந்திரியைக் கேட்டுத்தான் அரசன் அறிய வேண்டுமோ?'' என்று நாம் எண்ணுவோம்.

ஆயினும், தமிழ் இலக்கிய மரபுகளை ஊன்றி உணர்வார்க்கு இதனில் வியப்பு ஒன்றுந் தோன்ருது. வள்ளுவப் பெருந் தகையார் உலகம் போற்றும் தமது நூலில் முதற்கண் கடவுள் வாழ்த்துக் கூறியபின்னர் "அக் கடவுளது ஆணை யான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்பை" வான்சிறப்பு என்னும் இரண்டாவது அதிகார மாக அமைத்துள்ளார். அவ்வதிகாரத்து இறுதிக்குறளில்,

*"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்று அவர் வரம்பு கட்டிக் கூறுகின்ருர். எத்துணைப் பிற மேம்பாடுகள் எய்தியவராகவும் ஒருவர் இருக்கலாம்; அவர்க்கும் நீர் இல்லையாயின் உலக நடப்புக்களை நிறை வேற்றுதல் இயலாது போய்விடும். இந்நீர் நிலத்தின் சுரப்பினின்று பெறப்படுவது. மழை இல்லையாயின் நீர்ச் சுரப்பு அற்றுவிடும். ஆகவே, உலகியல் நடைபெறுதற்கு நீரும், நீரைப் பெறுதற்கு நீர்ச் சுரப்பும் இன்றியமையாதன ஆகின்றன. நீர்ச் சுரப்பு இடையருது நிற்பதற்குக் காரண மாய் இருக்கும் மழை முதலிடம் பெறுவதில் வியப்பு என்ன? அரசியல் ஒழுங்காய் நடைபெறவும், குடிகள் இன்பமாய் வாழவும் மழை இன்றியமையாதது என்னும் உணர்வை உட்கொண்டே அரசனது தேச விசாரணையில் மழைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

மழையைப்பற்றி வினவிய மன்னன் அடுத்து மங்கை யர் கற்பைப் பற்றி மந்திரியை உசாவுதல் ஏன் என்ற

---

*குறள் 20.

கேள்வி எழலாம். அதற்கும் இலக்கியம் விடை பகரும். கோவலன் கண்ணகியோடு மதுரைக்குச் சென்றகாலைக் கவுந்தியடிகளும் துணையாக உடன் சென்றார். மதுரையை அடைந்த பின்னர், கண்ணகியை ஒரு சிறந்த மங்கையின் அடைக்கலத்தில் ஒப்புவிக்கும் பொறுப்பு கவுந்தியைச் சார்ந்திருந்தது. ஆயர் குல மங்கை மாதரி அடிகளுக்கு அறிமுகம் ஆனவள். அவள் அருங்குணங்கள் யாவும் நிரம் பியவள். அவளிடமே கண்ணகியை அடைக்கலம் நல்க அடிகள் எண்ணி, முதலிற் கண்ணகியின் சிறப்புக்களை நிரல்படக் கூறி, இறுதியில் பத்தினிப் பெண்டிரின் மேம் பாடுகளை விளக்கலானார்:

•"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடெனும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ?"

என்று அவர் கூறுகின்றார். வானம் பொய்யாது பெய்ய வும், வளம் பிழைப்பு அறியாது செழிக்கவும், வேந்தன் கொற்றம் சிதையாது நிலவவும் பத்தினிப் பெண்டிர் காரணமாவர் என்னும் தமிழ் மரபை உட்கொண்டே, அர சனும் தன் நாட்டில் மங்கையர் கற்புக்குப் பங்கம் இல்லா மல் வாழ வேண்டும் என்று விரும்புகின்றான். ஈண்டும் மழைக்கு முதலிடம் தந்திருப்பது நோக்கத் தக்கது.

கொடுங் கடலும், கனலும், கறையானும் கவர்ந்தன போக எஞ்சியனவாய்க் காவிய உருவில் நமக்குக் கிடைத் துள்ள நூல்களுள் காலத்தால் முந்தியது சிலப்பதிகாரம்

---

•சிலப். அடைக். 145-148

என்பது ஆன்ருேர் ஆய்ந்து கண்ட முடிவு. அந்நூலில் முதற்கண் அமைந்துள்ள மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் பகுதியில் இளங்கோவடிகள் ஞாயிற்றையும் திங்களையும் போற்றிய பின்னர் மழையைப் போற்றுகின்ருர்:

+"மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்;
நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேனின்று தான் சுரத்த லான்."

அச்சந் தரும் அலைநீரை வேலியாகக் கொண்டுள்ள இவ்வுலகினைச் சோழன் தனது மேம்பட்ட அருளினுற் காத்து இன்புறுத்துகின்ருன்; அதுபோலவே மழையும் வானத்தினின்று தானுகச் சுரந்து உயிர்களைக் காக்கின்றது; ஆதலால், அத்தகைய சிறப்பு அமைந்த மழையை நாம் போற்றுவோம் என்று அடிகள் கூறுகின்ருர். மேலே நிற்கும் மழைக்குக் கீழே இருக்கும் மாந்தர்மீது இயல்பாகக் கருணை தோன்றக் காரணம் இல்லை; அன்றியும், மாந்தர் தன் இருப்பிடம் நாடி வந்து போற்றிப் புகழ்ந்து கருணை பிறக்குமாறு செய்தலும் இல்லை; ஆயினும், மழை தானுகச் சுரந்து மன்னுயிரைக் காப்பது அதன் சிறப்பினை உணர்த்துவதாகும் என்ற கருத்து இப்பாடலிற் பொதிந்துள்ளது.

மாந்தரின் ஒழுக்க வாழ்விற்கு வழி வகுத்த வள்ளுவனுர் தமது நூலில் வான்சிறப்புக் கூறிய காரணத்தால், ஒழுக்க நெறிக்கும் மழைக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். மாந்தர்தம் வாழ்க்கையை வள்ளுவர் இரு பெரும்

---

+சிலப். மங். 7—9.

பிரிவினதாய்க் கண்டார். அவை அறவாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் ஆகும். அறவாழ்க்கை இல்லறம் துறவறம் என்னும் இரண்டு உட்பிரிவுகள் உடையது. இல்லறம் பேணுவோன் இன்ப நுகர்ச்சியோடு, உலகியல் செவ்வனே நடைபெறுவதற்கு வேண்டும் வாழ்க்கை வளங்கள் அனைத்தையும் வகுத்து அமைக்கும் கடப்பாடுங் கொண்டோன். துறவு நெறி நிற்போன் உலகினர் ஒழுக்கத்திற்கு அளவுகோலாய் உயர்ந்து நின்று, வாழ்க்கை வளங்களை மாந்தர் முறைப்படி நுகர்ந்து இன்புற்று வீட்டினை எய்துதற்கு வழிகாட்டியாய் அமைபவன். இல் வாழ்பவனுக்குத் தானமும், துறவிக்குத் தவமும் சிறந்த பண்புகளாய் அமையும். இவை இரண்டும் சிறக்க அமைந்த ஒரு நாட்டில் அரசியல் வாழ்க்கை செவ்வனே நடைபெறுதல் ஒருதலை. அரசியலின் அடிப்படை இல்லம். இல்லமே ஊராகி, நாடாகி, அரசாகி, உலகமாகி விளங்குகின்றது. சமூக வாழ்வின் உச்ச நிலையே அரசியல்: சமூக நலத்தைக் காத்தலும் பெருக்கலுமே அரசியலின் கடமைகள். ஆகவே, உலகம் உயர்வு பெறுதற்கு இல்வாழ்வான் அடிப்படை. சமூக வாழ்வு நலம் பெறுவதற்கு அரசனும் துறவியும் துணையாவர். இவர் அனைவரும் சிறக்க அமைவதற்கு மழை அடிப்படை ஆகும்.

* "தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

என்ற குறளின் கருத்து இதுவே ஆகும். இவ்வாறு, மழை ஒழுக்கத்திற்கு உறுதுணை ஆகும் தன்மையாலேயே

---

* குறள் 19

ஒழுக்க நெறி வகுக்கப் புகுந்த வள்ளுவர் வான் சிறப்பை முதற்கண் கூறிப் பின்னர் ஒழுக்க நெறிகளை இல்லறம், துறவறம், அரசறம் என்று வகைப்படுத்தி ஓதினர்.

ஒழுக்க நெறி சிறக்க அமைவது பெரிதும் அவரவர் மனமாட்சியைப் பொறுத்ததே ஆயினும், அதற்கும் ஏற்ற சூழ்நிலை ஒன்று இன்றியமையாதது. குணமென்னும் குன்றேறி நின்ருர் சிலர் எத்தகைய சூழ்நிலையிலும் தம் நிலையில் திரியாது நிற்கும் ஆற்றலைப் பெற்றிருக்கலாம். ஆயினும், மக்களுட் பெரும்பான்மையோர் ஒழுக்க நெறியில் வழுக்கி வீழும் இயல்பினரே ஆவர். இவ்வியல்பு கொண்ட மாந்தர்க்குச் சூழ்நிலையும் உடன்நின்று ஊறு செய்வதாயின், வீழ்ச்சியினின்று அவர் வீடு பெறுவது எங்ஙனம்? "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பது பழமொழியும் நடைமுறை உண்மையும் ஆம். வள்ளுவர் கூறுகின்ருர்:

*"விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி."

ஒரு மழை இரு மழை தவறுமாயின் அத்துணைத் தீங்கில்லை. மழை தொடர்ச்சியாகத் தவறுமாயின் உலகத்திற் பசி நிலையாக நின்று வருத்தும். பசியால் வருந்துபவர் வயிறு நிரம்ப வழி பார்ப்பதே இயல்பு. பாவம் புண்ணியம், நன்மை தீமை, ஒழுக்கம் இழுக்கம் எல்லாம் பசி என்னும் திரையில் வேற்றுமை இல்லாத உருவங்களாய்

---

* குறள் 13

அமைந்து விடுகின்றன. பசிக் கொடுமையை மணிமேகலை நன்கு விளக்குகின்றது:

†"குடிப்பிறப் பழிக்கும்; விழுப்பங் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி."

பாவங்கள் யாவற்றிற்கும் ஊற்றிடமாய் விளங்கும் காரணத்தால் பசிப்பிணியைப் "பாவி" என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

அமிழ்தம் உண்டவர் சாவாது நிலை பெறுவர். உலகத்தை நிலைபெறுத்துவது மழையாதலின் அதுவும் அமிழ்தம் என்று உணரத்தக்கது. உடலுக்கு வலிவு தருவது உணவு. அவ்வுணவினை ஆக்குவதற்கு உறுதுணையாய் இருத்தலோடு, தானும் உணவாக அமைவது மழை. உலகம் என்னுந் தேருக்கு அச்சாணி போன்றவர் உழவர். மழை வளம் குன்றினால் உழவர் உழுதலும் உலகோம்பலும் ஒன்றாய் நின்று விடும். உழுவார் கை மடங்கினால் நெல்லைக் காண்பது அரிது. நெல் மட்டுமா? மழைத் துளி வீழாது போமாயின் பசும்புல்லின் தலையைக் காண்பதும் அரிது. அளக்கலாகா அளவும் பொருளும் உடையது கடல். மழை வளங் கரப்பின் அங்நெடுங் கடலும் நீர்வாழ் உயிர்கள் பிறவாதும், மணி முதலாயின படாதும் தன் இயல்பு குன்றும். மழை வறந்தால் தேவர்க்கும் விழாச் சிறப்புக்கள் வழிபாட்டுச் சிறப்புக்கள் நடைபெறா. இவ்வாறு அறம்பொருள்

---

† மணிமே. 11.

இன்பம் வீடு என்னும் நற்பயனும் மழை வளத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ளன. வள்ளுவரது வான் சிறப்பு என்ற அதிகாரத்தின் திரண்ட பொருள் இது.

மேலும் மழையின் சிறப்பு மேற்கோள்களால் நிறுவப் படவேண்டிய ஒரு பொருளும் அன்று. ஆண்டுதோறும் அதன் அருமையை நாம் அறிந்தே வருகின்றோம்.

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி—என
மேவிய யாறு பல ஓடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு"

வானம் பார்த்த பூமியையும் நிரம்பப் பெற்றுள்ளது. அவற்றில் மழை குன்றுதலாற் பட்டினிப் படை வந்து ஆற்றங்கரை ஊர்களை முற்றுகையிடுதல் அடிக்கடி நிகழ் கின்றது. கரை புரண்டோடும் ஆறுகளும் மழை இல்லையேல் மணல் புரண்டோடவும் அனல் புரண்டோடவும் ஆரம்பித்து விடும். அப்பொழுது உயிர்களுக்கு நிலை ஏது?

---

# 2. பாரியும் மாரியும்

ஏழு வள்ளல்களுட் பாரி ஒருவன். அவன் அவருள் தலை சிறந்தவன் என்று கூறினுங் குற்றம் இல்லை. அவரெல்லாம் பொருளே கொடுத்தார்; பாரி உயிருங் கொடுத்தான். *"பேகன், கொடைமடம் படுத லல்லது, படைமடம் படான்" என்று பரணர் பாராட்டினர். அப்பாராட்டுரை பாரியின் பெருமையை நோக்கின் சிறுமைப்பட்டுத் தோன்றும். படைமடம் இல்லாப் பாரி கொடைமடங் காரணமாகப் படைமடமுங் கொண்டு பெரும்புகழ் நிறுவினன். கொடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அன்று முதல் இன்று வரையில் அவன் நின்று நிலவுகின்றான். சுந்தரமூர்த்தி நாயனர் பாரி வாழ்ந்த காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகளின் பின்னர் வாழ்ந்தவர். அவர் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலைமை நின்று பொருள்களை ஆய்ந்து கூறும் தன்மை வாய்ந்தவர்.

$"கொடுக்கி லாதானைப் பாரியே என்று
கூறி னுங்கொடுப் பாரிலை"

என்று கூறுமுகத்தான் பாரியின் தன்னேரில்லாக் கொடைச் சிறப்பினை அவர் வியந்து பாராட்டுகின்றார்.

---

* புறம். 142
$ சுந். தேவா.

மாரியும் கொடைமடம் கொண்டுள்ளது என்று பேகனைப் பாராட்டிய பாடலிற் பரணர் குறிக்கின்றார்:‡ "நீரின்றி வறண்டு கிடக்கும் குளத்தின்கண் மழை தனது நீரைச் சொரிந்து நிரப்புகின்றது; அகன்ற வயலிடத்தும் நீரைப் பொழிந்து வளம் பெருக்குகின்றது. இவ்விடங்களில் மழை பொழிவதனால் மாந்தர் உறுபயன் எய்துகின்றனர். உவர் நிலத்தில் மழை பொழிவதனால் யாருக்கு என்ன பயன்? அந்நிலத்தும் மழை நீரைச் சொரிந்து செல்கின்றது. சில வேளைகளில் விளைநிலத்துப் பெய்யாது உவர் நிலத்து மட்டுமே பெய்து செல்வதும் உண்டு. இவ்வாறு இடவரையறை இன்றி எங்கும் நீரைச் சொரிந்து செல்லும் மழை கொடைச் சிறப்பில் அறியாமை தோன்ற ஒழுகுகின்றது." பாரியும் தக்கார் தகவிலர் என்று வரையாது, வந்தவர்க்கெல்லாம் வாரி வாரி வழங்கினான். ஆகவே, கொடைமடத்திற் பாரியும் மாரியும் நிகராவர். ஆயினும் விளைநிலத்துப் பெய்யாது களர்நிலத்துப் பெய்யும் மாரியின் இயல்பு பாரிக்குப் பொருந்துவதன்று. தகவிலர்க்கும் ஈயும் தகவுடைய பாரி தக்காருக்கு ஈய என்றும் தவறியதில்லை.

மாரியின் மற்றொரு தன்மை குறளிற் குறிக்கப் பெறுகின்றது:

*"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை."

---

‡ புறம். 142.

* குறள். 15.

பெய்ய வேண்டிய இடத்தும் காலத்தும் அளவிலும் பெய் யாதிருந்து நிலத்து வாழ்மக்களைக் கெடுத்தலும், அவ் வாறு கேடுற்ற மக்களை முறைப்படி பெய்து வாழ்விப் பதும் எல்லாம் வல்லது மழை. கொடைப் புகழ் பெற்ற மழைக்குக் கெடுத்தல் என்னும் குறை ஒரு கறை ஆகும்.

வறுமையால் வாடிய பெருஞ்சித்திரனுர் பரிசில் பெறும் நோக்கத்தோடு வெளிமான் என்ற சிற்றரசனை அடைந்தார். உயிர் பிரியும் வேளையில் தன்னை வந்து அடைந்த புலவர்க்கு உறுவன செய்தற்கு இயலாத நிலை யில், அவன் தன் தம்பியை நோக்கிப் புலவர்க்கு வேண்டு வன நல்கிப் பேணுமாறு குறிப்பித்து உயிர் துறந்தான். இளவெளிமான் அகம் நகாது சிறிதளவு பரிசில் நல்கினுன். $''பெரிதே உலகம்; பேணுநர் பலரே'' என்று கூறிப் பெருஞ்சித்திரனுர் வெளியேறி, அதியமான் நெடுமானஞ் சியை அடைந்தார். அவன் அவரை வந்து காணுது, பரி சில் மட்டுங் கொடுத்து அனுப்பினுன். ⁘'' தரம் அறிந்து மதியாது நல்கிய பரிசிலைப் பெற்றுச் செல்வதற்கு யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்'' என்று கூறி, அதனைப் பெருது சித்திரனுர் சினந்து சென்ருர். சித்திரனுர் குமணனை அடைந்தார்; அவனைப் பாடி யானை ஒன்றினைப் பரிசிலாகப் பெற்ருர்; இளவெளிமான் இருந்த ஊரை அடைந்தார்; அவனது காவல் மரத்தில் யானையைப் பிணித்தா; உள்ளே சென்று அவனை நோக்கிப் பாடினுர்: $''நீ இரவலரைப் புரக்கும் பான்மையன் அல்லை: அத

---

$ புறம். 207.

⁘ புறம். 208.

$ புறம், 162.

ணுல் இரவலர்க்குப் புரவலரே இல்லாது போய்விடுதல் இல்லே. இரப்போர்க்கும் மானம் அழியாப் பெருந்தன்மை உண்டு என்பதை என்னே நோக்கி அறிந்து கொள்; இரவலர்க்கு ஈவோரும் உண்டு என்பதனே யான் பெற்ற பரிசிலேக் கண்டு அறிந்துகொள். நின் ஊரிலுள்ள காவல் மரம் வருந்துமாறு யாம் பெற்று வந்து பிணித்திருக்கும் யானேயே எமக்கு உகந்த பரிசில். விரைந்து செல்லும் குதிரையை உடைய தலேவனே! யான் சென்று வருகின்றேன்."

இவ்வாறு ஒரு வள்ளல் தமக்கு வேண்டுவன உதவாது மறுப்பின், இரவலர் வேறு வள்ளல்களே அடைந்து வாழ்வு பெறவும் வழி உண்டு. மழை உதவாது கெடுப்பின் யாரை அல்லது எதனே அடைந்து வாழ்வு பெறுவது? இரவலர்க்கு வேறு வள்ளல்களே நாடி அலேயும் தொல்லேயே இல்லாது வேண்டியன வேண்டியாங்கு வழங்கினுன் பாரி. கொடையால் தன் உயிருக்கு ஊறு விளேவித்ததே யன்றிக் கொடாதிருந்து பிற வுயிர்க்குத் தீங்கு ஒன்றும் புரிந்தறியான் பாரி. ஆகவே, இவ்வகையிலும் பாரி மாரியினின்று வேறுபடுகின்றுன்.

*"ஆ காத்து ஓம்பல் பேரறம். அத்தகைய ஆவினுக்குச் சிறிதளவு நீர் வேண்டும் என்று ஒருவன் இரப்பினும் அவ்விரப்பினேப் போல் அவனது நாவிற்கு இழிவு தருவது வேருென்றும் இல்லே" என்று வள்ளுவர் இரத்தலே விலக்கினுர். ஆயினும், இரவு தவிர்க்க முடியாத ஒன்ருதலின் "இரவு" என்ற அதிகாரத்தில் அதனேச் சில கட்டுப்

---

* குறள். 1066.

பாடுகளோடு விதித்தார். அதனில் ஓரிடத்து, $ "மறைத்தல் இல்லா நெஞ்சும், பிறர் மானத்தை மதிக்குங் கடமை உணர்வும் உள்ள ஒருவர் முன் நின்று இரத்தலும் ஓர் அழகினை உடையது" என்று அவர் குறிப்பிடுகின்றார். இயன்ற பொருளினை எய்துதலும் மானம் அழியாமையும் இரவினை எழிலுடையதாகச் செய்கின்றன. மேற்கூறிய கரப்பிலா நெஞ்சுங் கடனறிவுங் கைவரப் பெற்றவன் பாரி. மாரி கரக்கும் இயல்பினது; ஆதலின் கடனறிவு அற்றது.

ஆறறிவு படைத்த மாந்தர் எய்தும் இன்னலைக் கண்டும், அவர் அலமந்து இரக்கும் மொழியினைக் கேட்டும் இரங்காதிருத்தல் மழைக்கு இயல்பாயிற்று. ஆயின், ஓரறிவுயிர்கட்கு இரங்கல் அதற்கு இயல்பாதல் யாங்ஙனம்? ஓரறிவுயிர்க்கு இரங்கிய தன்மையால் பாரி மாரியினும் மேம்பட்டான். மலர்ப் பொழில் ஒன்றினை அடைந்த பாரி ஆங்கு மலர்ந்த முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படரக் கொழு கொம்பின்றிக் காற்றில் அலமருவதைக் கண்டான். உற்றது உணர்வதன்றி நாவால் அதனை உணர்த்தும் ஆற்றல் இல்லாத அம் முல்லைக் கொடியின் அரந்தையால் அவனது மனம் கரைந்தது. தான் ஏறி வந்த தேரினையே அதற்குக் கொழு கொம்பாக அவன் உதவினான். கொழு கொம்பிற்குத் தேரே வேண்டும் என்பதில்லை. கொடைமடங் கொண்ட பாரி தேரின் உயர்வு நோக்காது, முல்லைக் கொடியின் துயரமே நோக்கி, அது நீக்க அத் தேரும் உதவுமாதலின் உடனே அதனைக் கொடுத்து உதவினான்.

---

$ குறள், 1053.

அச் செயலினைக் கபிலர் என்னும் புலவர் வியந்து பாராட்டு கின்றார்:

*"பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணிநெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி."

இவ்வாறு மாரியினும் சிறந்து விளங்கிய பாரியைப் பற்றிக் கபிலர் சிறப்பித்த மற்றொரு பாடலில், $"செந்நாப் புலவர் பாரி பாரி என்று அவனது புகழ் பலவற்றையும் வாழ்த்தி அவன் ஒருவனையே புகழ்கின்றனர். உலகினைப் புரத்திற்குப் பாரி ஒருவனுமா இருக்கின்றான்? அதற்கு மாரியும் உண்டு" என்று குறிக்கின்றார்.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்:
பாரி ஒருவனு மல்லன்;
மாரியும் உண்டீண் டுலகுப்புரப் பதுவே."

மேலே காட்டிய பாடலிற் புலவரைச் "செந்நாப்புலவர் என்று கபிலர் குறித்த கருத்து ஊன்றி உணரத் தக்கது. செப்பம் என்ற சொல்லிற்குக், ‡ "கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறாகாமை" என்று பரிமேலழகர் உரை வகுத்தார். அத்தகைய செம்மை வாய்ந்தோர் கூற்று பொய்யாதலும் இல்லை. ஆயினும், உலகு புரத் தற்கு மாரியே உண்டு என்பது உலகம் ஒப்பும் உண்மை

---

* புறம். 200.
$ புறம். 107.
‡ குறள் 951, உரை.

இந்நிலையில் எதனைக் கொள்ளுவது, எதனைத் தள்ளுவது? இவ்வாறு மாரியைப் புகழ்வது போல் பாரியின் புகழைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டினர் கபிலர்.

உலகில் உயர்ந்த ஒன்றினை மற்றென்றிற்கு உவமையாகக் கூறுதலே மரபு. ஆகவே, கைம்மாறு வேண்டாது ஈயும் மாரி சிறந்த பொருளெனக் கொண்டு ஈகையாளருக்கு உவமை கூறப்பட்டது. ‡"மாரி ஈகை மறப்போர் மலையன்" என்று மலையமான் திருமுடிக் காரியைப் பெருஞ்சித்திரனர் போற்றினர். × "அடுபோர் ஆனு ஆதன் ஓரி, மாரி வண் கொடை காணிய நன்றுஞ், சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே" என்று வல்வில் ஓரியை வன்பரணர் பாராட்டினர். ○ "மாரி யன்ன வண்மைத், தேர்வேள் ஆயைக் காணிய சென்மே" என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஒரு விறலியை ஆய் என்னும் வள்ளலிடம் ஆற்றுப்படுத்தார். இவை போல்வன எடுத்துக்காட்டுகள் ஏடுகளிற் பரக்கக் காணலாம். ஆயின், கபிலர் மட்டும் இவற்றிற்கு முரணுக உவமை கூறத் தகும் மாரியை உவமேயமாக்கி, உவமேயம் ஆகத் தகும் பாரியை மாரிக்கு உவமை ஆக்கியது ஏன்? மாரியின் ஈகையிற் கண்ட சிற்சில குறைபாடுகளே அதற்குக் காரணம் ஆகும்.

கபிலர் பாரியின் ஆருயிர் நண்பர்; ஆதலின், அன்புப் பேரொளியில் அறிவுக் கண்ணினை இழந்து, இல்லது

---

‡ புறம். 158

× புறம். 152

○ புறம். 133

கூறிப் புகழ்ந்திருத்தல் வேண்டும் என்று கொள்வதற்கும் இடமில்லை. கபிலரின் தன்மை தெரியப் பாராட்டிய புலவர் பலர். •"புலனழுக்கற்ற அந்தணாளன்" என்றும், $"பொய்யா நாவிற் கபிலன்" என்றும் மாறோக்கத்து நப்பசலையார் அவரைப் பாராட்டியுள்ளார். ‡'தாழாது, செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன், இன்றுள ளாயின் நன்றுமன்' என்று சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இரங்கிக் கூறியதாகப் பொருந்தில் இளங்கீரனார் என்னும் புலவர் போற்றுகின்றார். இவ்வாறு, பொய்யா நாவினர் என்று புலவரும் அரசரும் போற்றப் பெற்ற கபிலரது பொருளுரை பொய்யுரை ஆதல் இல்லை. அது பாரியின் வரலாற்றினை ஆய்ந்து கற்பதனால் தெளிவு பெறும்.

---

• புறம். 126
$ புறம். 174
‡ புறம். 53

# 3. பறம்பு நாடு

ஏது நல்ல நாடு என்ற வினாவிற்கு ஔவையார் விடையிறுக்கின்றார்: †"நிலமே! நீ நாடாக இரு; அன்றேல் காடாக இரு. பள்ளமாக இரு; அன்றேல் மேடாக இரு. எவ்விடத்தில் ஆடவர் நல்லவராய் இருக்கின்றனரோ அவ்விடத்து நீயும் நல்லது ஆவாய்" புறநானூற்றுப் பொருள் பொதிந்த குறும்பாடல்கள் சிலவற்றுள் இதுவும் ஒன்று. புலவர் குறித்த கருத்து ஊன்றி உணரத் தக்கது. நிலத்து வாழும் மக்களின் இயல்பால் நல்லது தீயது என்னும் இசையும் வசையும் எய்துதலன்றித் தன் இயல்பால் அவற்றை நிலம் பெறுதல் இல்லை. நல்லவர் வாழும் பேறு பெற்ற தீய நிலம் அவர் உழைப்பு முதலியவற்றால் நன்னிலமாதலும், தீயவர் வாழ்தல் காரணமாக நன்னிலமும் தீய நிலமாதலும் கண்கூடு.

நன்மை தீமை இரண்டற்கும் மக்களுள் இருபாலாரும் சார்பாய் விளங்க, ஈண்டுப் பெண்பாலாரை ஒழித்து ஆண்பாலாரையே குறித்ததன் பொருத்தம் யாது? பெண்பாற் புலவர் தம் பாடலில் தம் இனத்தவர்க்கு அரண் தேடி அறவுரை தந்தனரோ? உழைத்து வளம் பெருக்கல்

---

† புறம்: 187.

ஆடவர் கடமை. அவ்வாறு பெற்ற வளத்தைச் சமைத்துப் படைத்து அன்பும் அறனும் பெருக்கல் பெண்டிர் கடமை. இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகிய அன்பும் அறனும் நிலைபெறுதற்கு ஆடவர் தம் அயரா உழைப்பாற் பெற்ற வளமே காரணமாகும். இத்தகைய கடமை உணர்ச்சி ஆடவர்க்கு இருப்பின் எத்தகைய நிலமும் தன் பருவத்திற்கும் ஆடவர் முயற்சிக்கும் ஏற்ற அளவில் பயன் தருதல் ஒருதலை. ஆகவே, ஆடவர் நல்லவராயின் நிலமும் நல்லதாகும்.

மேலும், ஒழுக்க நெறியினைக் காக்கும் பொறுப்பு இருபாலார்க்கும் ஒருங்கே அமைவதெனினும், ஆடவரே வழுக்கி வீழும் வாய்ப்புகள் மிகுதியாகப் பெற்றுள்ளனர். பரத்தையிற் பிரிவு என்ற வழக்கமும், காமக் கிழத்தியர், காதற் பரத்தையர் என்ற இனத்தவரும் ஆடவரின் ஒழுக்கக் கேட்டினை மறைத்து நாகரிகமாகக் காட்டுதற்கு அமைத்த திரைகளேயாம். உலகியலை உள்ளவாறு எடுத்துக் கூறும் இலக்கண ஆசிரியர் இதற்கும் இடம் தந்தனராயினும், ஒழுக்க நெறி வகுத்துக் கூறிய ஆன்றோர் அனைவரும் இதனை வெறுத்தே ஒதுக்குவர். ‡ பொதுமகளிர் தொடர்பு அறிவிலார் புக்கு அழுந்தும் நிரயம் என்றும், அதுவே கள்ளுங் கவறும் போன்று திருமகளால் துறக்கப் பட்டார்க்குப் பற்றிடம் என்றும் வள்ளுவர் கடுமொழிகளாற் கண்டிக்கிறார். பொருட் பெண்டிர் பொய்மை முயக்கத்தை விரும்பும் ஆடவர் இல்லையெனின், பொது மகளிர் என்ற தனியினம் ஏற்பட இடமில்லை. பெண்டிர்

‡ குறள், 919-920

கற்பு நெறி பெரிதாய்ப் பேணப் பெறுவது போன்றே ஆடவர்க்குங் கற்பு நெறி பேணும் நிலைமை நிலைபெறல் வேண்டும். ஆகவே, ஆடவர் நல்லவராயின் பெண்டிரும் நல்லவர் ஆவர்; நாடும் நலம் பெறும்.

"அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்பது ஆன்றோர் கூற்று. அஃது உண்மையாயின், பாரியின் இயல்பு கொண்டு பறம்பு நாட்டினர் இயல்பினை நாம் வரையறுக்கலாம். பரம்பினை வெல்லுதல் வேந்தர்க்கு அரியது என்று கூறவந்த கபிலர், $"பெரிய கரிய குன்றம் இரங்கத்தக்கதோ! அதனை வேலின் ஆற்றலால் வெல்லுதல் வேந்தர்க்கும் அரிது. ஆனால், இணைக் குவளை மலரை நிகர்த்த மைபுண்ட கண்ணையுடைய கிணைமகள் மாடிக் கொண்டுவரின் அதனைப் பெறுதல் எளிது" என்று குறிக்கின்றார். "பாடினளாய் வரின் என்ற கருத்து, அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்றுகோடல் அரிதென்பதாம்" என்று அப்பாடலின் அடிக்குறிப்பில் உரையாசிரியர் குறிக்கின்றார். தான் நுகர்தற்கு உரிமையற்ற மையுண்ட கண்ணுக்கு மயங்காத தகவும், எவரும் பொதுவின் நுகர்தற்கு உரிமையுள்ள பாடலையே நுகர்ந்த பரிசளிக்கும் பண்பும் பாரியின் பண்பட்ட உள்ளத்தைப் பளிங்கெனக் காட்டுகின்றன. இத்தகைய சான்றோனை அரசனாகப் பெற்ற பறம்பு நாட்டிலுள்ள ஆடவரும் நல்லவராய் ஒழுகி நாடு நலமுற வாழ்ந்தனர் என்று கோடலிற் குற்றம் ஒன்றும் இல்லை.

---

$ புறம். 111

குன்றாத விளையுளைச் செய்யும் உழவரும், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டு ஒழுகும் அந்தணராகிய அறவோரும், வழங்கத் தொலையாத வான்பொருளைக் காலினுங் கலத்தினுந் தரும் வணிகச் செல்வரும் சேர்ந்து வாழ்வதே சிறந்த நாடு. மிக்க பெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி இவற்றானும், அண்மை அரசானும் கேடுறுதல் இல்லாததாய், பல்வகைப் பண்டங்களும் மிக விளைவதனாற் பிற நாட்டவரும் விரும்பத்தக்கதாய் விளங்குவது நாடு. அண்டை நாடுகளிற் பகைவர் வந்து தங்குதல், அரசு கோல் கோடுதல், உணவின்மை என்ற காரணங்களால் ஆங்குள்ள மக்கட்டொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குகளுந் தன்னை வந்து அடையின், அவற்றின் பாரத்தை இனிதே தாங்கி நின்று, அதன்மேலும் அரசனுக்கு உரிய இறைப்பொருளை விரும்பிக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தது நாடு. உழவர் தொழிலாலும் விளைவு நிறைவாலும் மிக்க பசியற்றதாய், தீக்காற்று மிக்க குளிர் வெப்பம் இவற்றால் வரும் நீங்காத நோய் அற்றதாய், புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகை அற்றதாய் நாடு விளங்க வேண்டும். சாதி சமயம் முதலியன பற்றிய காய்வினால் மாறுபட்டு நிற்கும் பல்வேறு கட்சிகளும், உடனிருந்தே பாழ் செய்யும் உட் பகையும், வாய்ப்பு நேரின் வந்த மன்னனோடு கூடிக்கொண்டு இருந்த வேந்தனை இழுத்து அலைக்கும் கொலைத் தொழில் கொண்ட குறுநில மன்னரும் இல்லாத நாடே இனிய நாடு. அரசனது ஆற்றலாலும் அறத்தாலும் கேடு அறியாதது நாடு; அரிதிற் கெட்ட விடத்தும் வளங் குன்றாதது நாடு; அத்தகைய நாடே தலையாய நாடு. நிலைநீரும், பொழிநீரும், வறப்பினும் வளந்தரும் வண்மை வாய்ந்த மலையும், மலையினின்று வருநீரும், அழியாத அரணும் சிறந்த நாட்டின்

உறுப்புக்களாம். பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், காவல் என்ற ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகாய் அமைவன. முயற்சியின்றியும் சிறு முயற்சியாலும், பெருவளந் தருவதே நாடு. பெருமுயற்சியான் வளந்தருவது சிறந்த நாடன்று. குடிகள் மாட்டு அருளுடைமையான் அவரது அன்பைப் பெறும் வேந்தனைப் பெறாத நாடு எத்துணைச் சிறப்பினதாயினும் எட்டுணையும் பயன் இன்று.

+இவ்வாறு குறிக்கோள் நாடு ஒன்றின் பெரு வளங்களை வள்ளுவர் குறித்துச் சுட்டினர். அவர் கூறியனவெல்லாம் நடைமுறையில் எந்த நாட்டிலும் அமைதல் அரிது. ஆயினும், மிகை நாடி மிக்க கொளல், கூறியன கொண்டு கூறாதன குறிக்கொளல் என்னும் விதிகளைத் துணைக் கொண்டு ஆராயின், பாரியின் பறம்பு நாடு அத்தகைய குறிக்கோள் நாட்டினை அணுகுந் தன்மையது என்று உணரலாம்.

$உழுவார் துணையின்றியே நான்கு பயன்கள் இயல்பாகப் பறம்பு நாட்டில் இயைந்துள்ளன. அங்குச் சிறிய இலையை உடைய மூங்கிலின் நெல் தானாக விளையும்; இனிய சுளையை உடைய பலாவின்பழம் முதிர்ந்து தொங்கும்; கொழுவிய கொடியை உடைய வள்ளிக் கிழங்கு நிலத்தினுள் ஆழ்ந்து கிடக்கும்; கனத்த நெடிய மலையில் இருக்கும் தேனடை முதிர்ந்து நீலநிறம் பெற்று, அடையின் மெழுகு அழிய, அதினின்று தேன் சொரியும்.

---

+ குறள். 731-740
$ புறம். 109

‡பாரி செங்கோல் நெறியினன்; ஆதலின், பரம்பு நாட்டிற் சான்றோர் பல்கினர். எனவே, உலகிற்கு உறும் பெருந் தீங்குகளை உணர்த்துங் குறிகளாகக் கருதப்பெறும் சனிமீன் புகைதல், வால்மீன் தோன்றுதல், வெள்ளி தெற்குத் திசைக்கு ஓடுதல் இவற்ருலும் பறம்பு நாட்டிற் பெயல் பிழைத்தல் இல்லை. ஆதலால் அங்கு எப்பொழுதும் வயலிடத்து விளைவு மிகும்; புதலிடத்துப் பூக்கள் மலரும்; ஆவினங்கள் நல்ல புல்லை மேயும். புன்செய்ப் பயிரும் எஞ்சாது விளையும். †பாரி பறம்பில் தெண்ணீர்ப் பனிச் சுனைகள் வானத்து மீன்கள் போன்று தொகையானும் தெளிவானும் சிறந்து விளங்கும். §பரந்த சுனையின்கண் தழைத்த கரிய இதழ்களை உடைய குவளையின் வண்டு மொய்க்கும் புதுமலரில் துளிகள் கலக்குமாறு மழை பெய்யினும் பெய்யாதொழியினும், கொள்விதைத்தற்கென்று உழுத பரந்த நிலத்திடை அவ்வழுகாலே நீரோடு காலாக அமைய, நெடிய பறம்பு மலையின் குடுமிகள் தோறும் இனிய அருவிநீர் வழிந்து ஓடும். பாரி அந்நீரினும் இனிமையும் மென்மையும் உடையன்.

*வேங்கை மரத்தை உடைய வெப்பத்தால் முதிர்ந்த சிவந்த மேட்டு நிலத்தில் கார்காலத்து மழைமிகுதியால் ஏற்பட்ட பெரும்பாட்டு ஈரத்தில் புழுதி கலக்குமாறு பல சால்பட உழுது உழவர் வரகினை விதைப்பர்; விதைகள் முளைத்துப் பல கிளைகளாகக் கிளைத்து எழும் செவ்வி

---

‡ புறம். 117.
† புறம். 109.
§ புறம். 105.
* புறம். 120.

நோக்கித் தாளியடித்துக் களைகளை அடியினின்று களைவர். அப்பொழுது வரகுப் பயிர் இலை தழைத்துப் பெருகி, மெல்லிய மயிலின் ஈன்றணிய பேடையைப் போன்று ஓங்கிக் கரிய தண்டு நீண்டு, கிளைகள் எல்லாம் ஒன்றாகப் பொதியவிழ்ந்து, கதிரின் அடியும் தலையும் ஒருப்போல நெருங்கக் காய்த்துச் சீரிதாக விளையும். விளைந்த புதிய வரகை ஒரு புறம் அறுக்க, மற்றொரு புறம் தினைக்கதிர் விளைந்து கொய்யும் செவ்வியின் விளங்கும். வேறொரு புறம் எள்ளிளங் காய் முதிர்ந்து கருக்கும். இன்னொரு புறம் கொழுவிய அவரைக் கொடியில் வெள்ளிய காய்கள் அறுக்கும் பருவம் அடையும். இவ்வாறு பல்வகை விளைவுப் பயன் கொள்ளும் மாந்தர் நிலத்தடியிற் புதைக்கப் பெற்று முதிர்ந்த மதுவின் தெளிவைப் புல் வேய்ந்த சிறுமனைக்கண் வாழும் ஊர் மக்கள் அனைவருக்கும் உவந்து கொடுப்பர். கொதிக்கும் நறுநெய்யில் கடலை துள்ளும்; அதனோடு சோற்றை அட்டு ஊட்டுதற்குப் பெரிய தோளையுடைய மனையாள் கலம் பூசுதலில் முனைந்து நிற்பாள். இவ்வாறு வருந்தி முயறல் வேண்டாத புது வருவாயினை உடையது பறம்பு நாடு. அதனை ஆள்வோன் புலவர் பாடியானுப் பண்பினன்; பகைவர் புறமுதுகிட்டு ஓடும் கழல் ஒலி கேட்க, விரும்பிப் போர் செய்யும் முருகனை நிகர்வோன்.

மேலே கூறியவற்றான் பறம்பு நாட்டின் நீர்வளம், நிலவளம், காவற் சிறப்பு, சான்றோர் நிறைவு முதலியன நன்கு விளங்கும். மூவேந்தரும் முற்றிய காலத்துப் பறம்பு வீழ்ச்சியுறாது போர் தாங்கி நின்ற தன்மையை நோக்கின், பறம்பு நாட்டில் மாறுபட்ட பல்வேறு கட்சி

களும், பாழ் செய்யும் உட்பகையும் இடம் பெற்றில என்பது தெற்றென‌ விளங்கும். பறம்பின் தோலா வென்றிக்கு அதன் அரண் சிறப்பும் ஒரு காரணமாகும்.

‡ஆற்றல் மிக்கு மாற்றார்மேற் செல்லும் வேந்தர் தம் உரிமை பொருள் முதலியவற்றைப் பிறன் வெளவாது வைத்துச் செல்வதற்கும், பகைக்கு அஞ்சிய வேந்தன் பதுங்கித் தற்காத்தற்கும் அரண் உதவும். அகழியாம் நீரரணும், வெள்ளிடை நிலமாம், நிலவரணும், மலையரணும் செறிந்த காட்டரணும் மதிலரணுக்குக் காவலாக அமைத்தல் வேண்டும். ஏணி எய்தாத உயர்வும், புறத்தோர் அகழலாகா அடியகலமும், அகத்தோர் நின்றுவினை செய்ய வாய்ந்த தலையகலமும், இடித்தற்கரிய திண்மையும், பொறிகளின் சிறப்பால் அணுகுதற்கு அருமையும் உடையது சிறந்த மதிலரண் ஆகும். காக்கவேண்டும் இடம் சிறிதாய், அகத்தோர் நலிவின்றி இருத்தற்கு உள்ளிடம் பரந்தாய், முற்றிய பகைவரது மனவெழுச்சியைச் சிதைப்பதாய் அரண் விளங்க வேண்டும். பகைவர் பற்ற அரியதாய், அடைத்திருக்கும் அகத்தோர்க்கு வேண்டும் உணவு முதலியன மிக்கதாய், புறத்தார் ஏவிய படை முதலியன தம்மை வந்து தாக்காது தாம் ஏவியன புறத்தாரை எளிதின் எய்துதற்கு ஏற்ற வகையில் அகத்தார் நின்று வினைசெய்ய எளிதாய் விளங்குவது அரண். புகலொடு போக்கொழிய முற்றுகை செய்து அரணைக் கைப்பற்ற எண்ணும் புறத்தோர் முயற்சி அகத்தோர்க்கு வேண்டும் பொருளெல்லாம் அகத்தே மிக்கிருத்தலான்

‡ குறள்-741-747.

வீணாகும். அப்பொழுது பகைவர் நெகிழ்ந்த இடம் நோக்கி ஒரு முகமாகப் பொருதும், அகத்தோரை வஞ்சனைக்கு உட்படுத்தி வாயில் திறப்பித்தும் வெற்றிகாண முயல்வர். தம் அரசன் மாட்டு அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் அமைந்த நல்ல வீரர் அகத்தே இருப்பின் பகைவரது இம் முயற்சிகளும் வீணாகும்.

பறம்பு மலையே பாரியின் பற்றற்கரிய அரணாக விளங்கியது. *உழவர் உழாதன நான்கு பயன் உடைமையால் பறம்பினை முற்றியிருந்து கைப்பற்றுதல் இயலாது. அகலம் நீளம் உயரத்தால் வான் பரப்பினை நிகர்த்தது அவன் மலை. மரந்தோறும் கட்டக்கூடிய யானைப் படை மிகுதியாலும், இடந்தோறும்பரப்பப்பட்ட தேர்ப்படை மிகுதியாலும், பறம்பினைப்பற்ற இயலாது. அழித்தற்கு வேண்டும் கருவி முதலியன இயற்றல், உட்படையினரை வஞ்சனைக்கு உட்படுத்தல் முதலிய முயற்சிகளாலும் அது வெல்லப்படுவதன்று. முற்றுதல் விடுத்துக் களங் குறித்து வாட்போர் மேற்கொள்ளினும் பாரி பறம்பு மலையைத் தாரான். ஆகவே, பறம்பு மலையை இரந்து பெறுவதன்றி வலிந்து பெறுதற்கு வழியே இல்லை.

இத்தகைய சீருஞ் சிறப்பும் வாய்ந்த பறம்பு நாடு யாண்டு உளது? தமிழகத்தில் தமிழரசு ஓங்கியிருந்த நாளில் தமிழகம் முழுவதுந் தமிழ் மணமே கமழ்ந்தது. சங்க காலத்தில் ஆரியம் தமிழகத்தில் தலைகாட்டத்

---

* புறம். 109.

தொடங்கியது. தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்.

$ "வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்று

விதி வகுத்தாரெனின், தமிழகத்தில் வடசொற் கலப்பு குறிப்பிடத் தக்க அளவில் ஏற்பட்டிருந்தது என்று கருதுவதில் தவறு இல்லை. வடசொல்லை 'எடுத்தாளுகையில் வடமொழிக்கே தனியாக உரிய எழுத்தொலியைத் தமிழொலிக்கு ஏற்ற வகையில் உறுமாற்றி வழங்குதல் வேண்டும் என்று தொல்காப்பியர் குறித்தார். இவ்வாறு உருமாற்றி வழங்கிய சொற்களும் சங்க நூல்களிற் சிறு தொகையினவாகவே கண்டன. நாட் செல்லச் செல்ல வடசொல் வழக்கு தமிழகத்தில் மிக்கது. பல முறைகளில் வடசொல்லைத் தமிழோடு கலந்து அதன் தனித் தன்மையைச் சிதைக்க முயற்சிகள் நடந்தன. கன்னடமும் களி தெலுங்கும் வடமொழியை வாரி வாரி உண்டு தமிழுக்கும் அவற்றிற்கும் தொடர்பு உண்டோ என்று அறிஞரும் ஐயுறத்தக்க அளவில் உருமாறின. கொடுந் தமிழாய் இருந்த சேர நாட்டு மொழி வடமொழியின் கூட்டுறவால் கவின் மலையாளம் என்னும் புதியதொரு மொழியாயிற்று. தமிழ் மட்டும் தன் தனித் தன்மையை இழந்து விடவில்லை. சில சில சொற்களை ஏற்றுக் கொண்டபோதிலும் தன் இயல்பிற் குன்றாத தகவுடன் தமிழ் விளங்குகிறது.

அறிவு, ஆட்சி, வாணிபம், சமயம் முதலிய துறைகளில் வளம் பெற்று விளங்கும் ஒரு மொழி மக்களின்

$ தொல், சொல், 401.

மனத்தினைக் கவர்தல் இயல்பு. அம்மொழியினைக் கற்ற லும் பேசுதலும் எழுதுதலும் நாகரிகம் என்று மக்கள் கருதுவர். அவ்வாறே சமயத் துறை காரணமாகத் தமிழ் மக்கள் வடமொழியினைப் போற்ற முற்பட்டனர். தமிழகத் தில் பெயர்கள் வடமொழியில் அமைந்தன. புதிய பெயர்கள் வடமொழியில் அமைந்ததோடு, பழைய தமிழ்ப் பெயர் களும் வடமொழியிற் பெயர்த்து எழுதப்பெற்றன. மறைக் காடு வேதாரண்யம் ஆயிற்று; திருநாவற்கா ஜம்புகேஸ் வரம் ஆயிற்று; மயிலாடுதுறை மாயூரம் ஆயிற்று. இவ்வாறே ஆட்சி வேறுபட்டாலும் பல பெயர்கள் சிதைந்தன. அவற்றின் விரிவெல்லாம் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் "ஊரும் பேரும்" என்ற நூலிற் காணலாம்.

மற்றொரு வகையிலும் பெயர்கள் சிதைவது உண்டு. முயற்சிச் சுருக்கத்தை முன்னிட்டுப் பெயர்கள் மருவி வழங் கும். எறும்பியூர் எறும்பூர் ஆகும்; திருச்சேறை திருச்சிறை ஆகும்; பந்தணைநல்லூர் பந்தநல்லூர் ஆகும். சில ஊர் களின் பெயர்கள் பொருள் அறிய இடமின்றி மாறி அமை வதும் உண்டு. இவ்வாறு பல்லாற்றானும் பெயர்கள் மாறி அமைந்துள்ள தமிழகத்தில் பண்டையில் வழங்கிய பெயர் களை வைத்துக்கொண்டு இடங்களை ஆராய்வது பல்லாற் றானும் இடர் தருவதேயாகும்.

பாரி ஆண்டநாடு பறம்பு நாடு; அவன் மலை பறம்பு மலை. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட் டத்தைச் சார்ந்த கொடுங்குன்றம் இப்பொழுது பிரான் மலை என்று வழங்குகின்றது. பறம்புமலை>பறம் மலை> பரம் மலை> பரன் மலை என்று ஆகிப் பின்னர் பரன் என்ற

இறைவனைச் சுட்டும் பெயர் பிரான் என்னும் அதே பொருளுள்ள பிற பெயர்ச் சேர்க்கையால் களையப்பட்டிருக்கலாம். பறம்பு மலை>பறம்ப மலை>பறம மலை>பரம மலை>பரம் மலை>பரன் பலை> பிரான் மலை என்றும் அமைந்திருக்கலாம். *"இப்பிரான் மலையே பறம்புமலை என்றும், அங்குள்ள பாரீச்சரம் என்ற தேவாரப் பாடல் பெற்ற சிவன் கோவில் பாரியோடு தொடர்பு உள்ளது என்றும் திரு. சேதுப் பிள்ளை அவர்கள் குறிப்பது பொருத்தமாகவே காண்கின்றது. பாரி சிவநேசச் செல்வனா என்பது சங்க நூல்களாற் புலப்படுமாறில்லை. பாரி மீது அன்புகொண்ட பறம்பு மக்கள் அவன் கொலையுண்ட இடத்தோ உடல் அடைவுண்ட இடத்தோ கல்லை நட்டு வழிபாடு ஆற்றியிருப்பர்; பின்னாளில் அதுஒரு கோவிலாக எழுந்திருக்கும்; சிவப்பற்று தழைத்த நாளில் பாரி கோவில் சிவபெருமானோடு தொடர்புற்றுப் பாரி வழிபாடு செய்த சிவன்கோவில் என்ற முறையில் பாரீச்சரம் என்று மாறியிருக்கும். பிரான் மலையைச் சுற்றிலுமுள்ள நாடே பாரிக்கு உரிய பறம்பு நாடாகும்.

---

* ஊரும் பேரும். பக். 132.

# 4. பாரி வள்ளல்

வரலாற்றுக்கு எட்டாத பண்டைக் காலந்தொட்டுத் தமிழகத்தைச் சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் ஆண்டு வந்தனர். 'பழங்குடி' என்ற தொடரை விளக்கப் போந்த பரிமேலழகர், ✦"பழங்குடி =தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்; தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டியரென்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று குறித்தார். மூவேந்தர் அறிவும் திருவும் ஆற்றலும் மிக்கவராய் நெறிநின்று குடிகளைப் புரந்து நீடுபுகழ் எய்தினர். நாடும் மொழியும் அவர்க்கு இரு கண்களாய் விளங்கின. சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமை சிறப்பாகப் பாண்டியர்க்கே உரியதெனினும், பிற வேந்தரும் தமிழ் பேணும் பெற்றியிற் பாண்டியர்க்குப் பின்னவர் அல்லர். தமிழறிவும், உலகியலறிவும், ஆட்சிக் கலையும், அறநெறி வாழ்வும் கைவந்தவராக அவர் விளங்கினர்.

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம். அக்கால வேந்தர் புலவர் பாடும் புகழுடையோராய் விளங்கியது

---

✦ குறள்: 955 உரை.

மன்றிச் சிற்சிலர் தாமும் பாடும் புலவராய் விளங்கினர். புலவரும் பொருள் பெறல் ஒன்றே குறிக்கொள்ளாது, அரசர் கோல் கோடியவழிச் செவியறிவுறுத்தி நெறிநிறுத்தினர். ''செல்வத்துப் பயனே ஈதல்'' என்னும் செவ்விய நெறி கொண்டு, வேந்தர் நெறியறிந்து இறையாகவுந் திறையாகவுங் கொண்ட பொருளைப் புலவர்க்கும் இரவலர்க்கும் வரையாது வழங்கி வான்புகழ் கொண்டனர். கொடுத்தார் ஏத்தியும், கொடா அர்ப் பழித்தும், புகழ்வன புகழ்ந்தும், இகழ்வன இகழ்ந்தும், நல்லன விதித்தும், அல்லன விலக்கியும் புலவர் பாடிய சொல்லோவியங்கள் அன்றைய தமிழகத்தின் குறையும் நிறையும் நாம் அறிந்து கோடற்குப் பெருந்துணை புரிகின்றன.

குடை கொடி முரசு கொண்ட பேரூர் வேந்தரேயன்றிச் சீறூர் மன்னர் பலரும் தமிழகம் முழுவதும் ஆங்காங்கு விளங்கினர். இக்குறுநில மன்னர் பெரு வேந்தர்க்கு அடங்கியவராய், தத்தம் நிலப்பகுதியில் முற்றுரிமையோடு ஆட்சி புரிந்து, பெருநில வேந்தர்க்கு வினை வேண்டுவழி அறிவு உதவியும், படை வேண்டுவழி வாள் உதவியும் வந்தனர். பேரூர் வேந்தர் வலியிழந்த நாளில் சீறூர் மன்னர் தனியுரிமையுடன் விளங்குவதும் உண்டு. குறுநில மன்னரும் பெருவேந்தரைப் போன்றே நடையிலும் கொடையிலும் சிறந்து விளங்கினர். அவருள்ளும் கொடை மேம்பட்டோர் வள்ளல் என்னும் சிறப்புப் பெயருக்கு உரிமை பெற்றனர். அவர் பேரூர் வேந்தரினும் கொடையிலும் படையிலும் மேம்பட்டு விளங்கிய காலமும் உண்டு.

பெருஞ்சித்திரனுர் என்னும் பெருந்தகைப் புலவர் குமண வள்ளலைப் பாராட்டிய பாடலிற் சங்ககால வள்ளல்களின் பெருமை தொகுத்துக் கூறப்படுகின்றது:

* முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் அருவி கல்லலைத்து ஒழுகும்
பறம்பிற் கோமான் பாரியும், பிறங்குமிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்,
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்,
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும் எனவாங்கு
எழுவர் ...........................”

இவ்வாறு வந்துள்ள எழுவர் வேளிருள் தலைமை சான்றவனுகப் பாரி குறிக்கப் பெறுகின்ருன். சிறுபாணுற்றுப் படை பேகனுக்கு முதன்மை தந்து பாரியை இரண்டாவதாகக் குறிக்கும்.

---

* புறம். 158

மாரியினும் மேலாகப் பாரியைப் புகழ்ந்து பாடிய புலவர் பலர் இருந்திருக்க வேண்டும் என்று கபிலரது பாட்டால் உணரக் கிடக்கின்றது. ஆயினும், பாரியை நேர் நின்று பாடிய பிற புலவர் பாடல் எதுவும் புறநானூற்றுத் தொகுப்பிற் காணப்பெறுமை வியப்பையே விளக்கின்றது. பாரியை வஞ்சித்துக் கொன்ற வேந்தர் அழுக்காறு காரணமாக அவற்றை அழித்தனரோ, அன்றேல், அவனுக்குப் பின்னர் அவன் வழியினர் இல்லாமையால் அவை இயற்கை வழியான் அழிந்தனவோ என்பது தெளியுமாறில்லை. இப்பொழுது உள்ளன கொண்டு ஆராயினும் பாரியின் பண்பாடு பட்டப் பகலென விளங்கும்.

பாரி மகளிரைப் பற்றிய சிற்சில குறிப்புகள் புறநானூற்றிற் காணப்படினும், பாரியின் மனைவியைப் பற்றிய குறிப்பு ஒன்றுமே நமக்குக் கிடைக்கவில்லை. அவள் ''பாவை அன்ன நல்லோள்'' என்று மட்டும் பதிற்றுப் பத்து (61) குறிக்கிறது. அரச மரபில் தோன்றிப் பாடற் புலமை சான்ற நங்கையாராக ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்தேவியாரைப் புறநானூற்றில் நாம் காண்கிறோம்; குறுநில மன்னன் மகளிராகப் பாரி மகளிரைக் காண்கின்றோம். பண்டை நாளிற் பெண்கல்வி போற்றப் பெற்றமைக்கு ஔவையார் முதலிய பெண்பாற் புலவர் சான்றாக விளங்குவர். பண்டைப் பேரரசரும் அவர்தம் தேவியரும், குறுநில மன்னரும் அவர்தம் துணைவியரும் செந்நாப் புலவரின் பாடற் பொருளை உணரும் ஆற்றல்பெற்று விளங்கினர் என்றும், அவருட் சிலர் தாமே பாடும் ஆற்றலும் பெற்றிருந்தனர் என்றும் கொள்ளுதல் தவறாகாது. இத்தகைய அறிவும், அன்பும், அறமும், அருங்கற்பும்

அணிகலன்களாகக் கொண்ட நங்கை ஒருத்தி பாரியின் துணைவியாக அமைந்திருத்தல் வேண்டும்; அவளை இடையில் இழந்த பாரி அவள்மீது கொண்டிருந்த ஈடுபாட்டால் மறுமணம் இன்றி நெறிப்படி வாழ்ந்திருத்தல் வேண்டும்; அன்னையைப் பிரிந்த செல்வ மகளிர் பிரிவுத் துயரால் வருந்தா வண்ணம், கபிலர்பால் கற்றுத் தேர்ந்து புலமை பெற அவன் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். பாரி இறந்த பின்னர் பலபடப் புலம்பிய கபிலர், அவனது மனைவியைப் பற்றி ஒன்றுங் கூறாது விடுத்ததும், பாரி மகளிரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வெளியேறியதும் இவ்வாறு ஊகிக்க இடந்தருகின்றன.

பாரியின் பிறர்மனை நயவாப் பெருந்தகைமையைக் கபிலர் இரண்டு பாடல்களிற் பாராட்டுகின்றார்.* "வாணுதல் விறலி! பாரி வேள்பாற் பாடினை செலின் சேயிழை பெறுகுவை" என்றும், "பேரிருங் குன்று நீலத்து இணை மலர் புரையும் உண்கண் கிணைமகட்குப் பாடினள் வரின் எளிது" என்றும் அவர் குறிக்கின்றார். பாடற் சிறப்பாற் சேயிழை பெறுதலுங் குன்று பெறுதலுங் கூடுமேயன்றி, ஒளிநுதல், உண்கண் இவற்றால் மயக்கி அவற்றைப் பெறுதல் இயலாது என்பது கருத்து.

பாரியின் போராண்மை பாராட்டத் தக்கது. முந்நூறு ஊர்களையே உடைய சிறிய நாட்டை ஆண்ட பாரி ‡"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப், போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறா அது. இடஞ்சிறிதென்

---

* புறம். 105 : 111
‡ புறம். 8

னும் ஊக்கந் துரப்பப்'' படை மேற்கொண்டு பிற நாடுகளை வென்று அடிப்படுத்தும் எண்ணம் சிறிதுங் கொண்டிலன். போராற்றலும் படைவலியும் அரண் சிறப்பும் அமையப் பெற்ற அவன் தன் ஆற்றல் காட்டுதற்காகப் போர் மேற்கொண்டு உயிர்களுக்கு ஊறு விளைக்க எண்ணங் கொண்டிலன். அது அவனது தண்ணளியைக் காட்டி நிற்கும். நீரினும் இனிய சாயலன் என்ற புகழ் அவனுக்கு மிக மிகப் பொருந்துவது. ஆயினும், தன்னை வெல்வது, கருதி வந்த வேந்தரை அவன் வென்று துரத்தினான் அவர்கள் முதுகிட்டு ஓடிய கழலொலி கேட்டுப் பின்செல்ல நாணிச் சீற்றந் தணிந்தான்; அவர் நாட்டை வென்று கைக்கொள்ள அவன் முற்படவில்லை. மூவேந்தரும் பறம்பை முற்றியிருந்த காலத்தும் அவன் வெளிப்பட்டுப் போர் புரியாமைக்கு இத் தண்ணளியே காரணம். பறம்பைப் பகைவர் முற்றியிருந்து பற்றுதல் இயலாது. தாமாகத் தளர்ந்து முற்றுகை தவிர்ந்து திரும்பிச் செல்லும் அவர்களோடு போர் புரிந்து உயிர்களைக் கொல்ல அவனது அன்புள்ளம் இடந்தரவில்லை. ஆகவே, அவன் அடைத்திருந்து அளி சுரந்தான்.

பாரியின் கொடைநலம் இணையற்றது. * ''நல்லவை தீயவை என்று வேறுபாடு காணப்பெறும் சூடும் பூவினத்தைச் சாராத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையும் உடைய எருக்கம்பூவே ஆயினும், ஒருவன் உடையது அதுவேயாயின் தெய்வங்கள் அதனை யாம் விரும்போம் என்று சொல்லா. அதுபோலவே, பாரியும் தன்னை

* புறம். 106

வந்து இரந்தவர் அறிவற்றவராயினும் புல்லிய குணத்தின ராயினும் அவர்தம் தகுதி நோக்காது வழக்குதலைக் கடப் பாடாகக் கொண்டவன்.” இதுவே வரையா ஈகை எனப் படுவது. வரையாமை இரு வகைத்து: ஒன்று கொடுக்கத் தகும் பொருள் இவ்வளவே என்று வரையறை செய்யாமை; மற்றொன்று தக்கார் இவர் தகாதவர் இவர் என்று வரை யறை செய்யாமை. இவ்விரண்டு வகையினும் பாரி வரையா வள்ளலாய் விளங்கினான்.

பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. அம் முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். பாரிக்கு உரிமை என்று சொல்லக் கபிலர் ஒருவர் இருக்கின் றார்; பாரியும் இருக்கின்றான்; பறம்பு மலையும் இருக் கின்றது. கபிலர் நட்பு உரிமையால் மட்டும் பாரிக்கு உரியவராதலின் பிறர்க்குக் கொடுக்க உரியவர் அல்லர். தன்னையும் குன்றையுமேனும் தனக்கென வைத்துக்கொள் ளும் தன்மை பாரிக்கு உண்டா? கபிலர் கூறுகின்றார்: $“குறத்தி எடுத்து மாட்டிய காய்ந்த தீக்கடை கோல் சந்தனமாதலால் அதன் அழகிய புகை அருகிலுள்ள மலைச்சரிவில் நிற்கும் வேங்கையின் அழகிய பூங் கொம்பிற் சென்று பரக்கும் பறம்பு மலை பாடி வருவார்க் குப் பங்கிட்டுக் கொடுக்க உரியது. பாரியும் அறக்கடனே தன் அணியாகப் பூண்டு, தன்னையே பரிசிலர் இரப்பினும் வாரேன் என்னாது அவர் ஏவிய எல்லைக் கண்ணே நிற்கும் இயல்புடையவன்.” தன்னையே ஈதலினும் சிறந்த கொடை யாது? கபிலர் கூறியது புகழுரையா, பொருளுரையா?

---

$ புறம். 108.

வஞ்ச வேந்தர் தன்னையே வேண்டிய போதும் பாரி தடை யில்லாது ஈந்தான்.

"கண்ணோட்டம்" என்ற அதிகாரப் பொருளை விளக்கப் போந்த பரிமேலழகர், "அஃதாவது, தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை" என்று வேறுபடுத்திக் கூறினராயினும், வேறுபாடின்றி எவர்மாட்டுங் கண்ணோடுதலையே வள்ளுவர் குறித்தாராதல் வேண்டும். ‡"தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது" என்று அவர் கூறியுள்ளது காண்க. பிறர் பிழை நோக்காது பேரருள் சுரக்கும் பெருந்தகைமையே ஈண்டுக் கண்ணோட்டம் என்று குறிக்கப்பெற்றது. இதனையே நாகரிகம் என்றும் அவர் குறிப்பார்:

*"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" என்று கண்ணோட்டத்

தின் உச்சநிலையை வள்ளுவர் குறிக்கின்றார். யாவரும் விரும்பத்தக்க கண்ணோட்டம் என்னும் நனிநாகரிகம் தம்மிடத்து உள்ளதென நிறுவ வேண்டுவார், பிறர் தமக்கு நஞ்சு பெய்து தருதலை அறிந்திருந்தும் அதனை மறுக்காது ஏற்று உண்டு, அவரோடு அருள் குறையாது மேவுவர். இக்குறளில் 'அமைவர்' என்ற சொல்லுக்கு அந் நஞ்சின் பயனை நுகரவும் ஒருப்படுவர் என்றும் பொருள் கொள்ளலாம். முற்றுகை முதலிய போராற்றலால் தன்னை வெல்ல

‡ குறள். 579.

* குறள். 580.

இயலாத வேந்தர் தன்னை இரந்து பெற்ற வஞ்சகத்திற் பொதிந்து கிடந்த நஞ்சு பாரி அறியாததன்று. ஆயினும் கண்ணோட்டம் காரணமாகப் பாரி அவர்தம் இரவுக்குத் தன்னையே பரிசாக நல்கினான். அக் கொடையே அவனது உயிரை உண்ணும் நஞ்சாயிற்று. நஞ்சுண்டு அமைந்த பாரி நனிநாகரிகன் ஆயினான்.

பெருஞ் செல்வராகிய மூவேந்தர் கொடையின்றி வாழ்ந்த காலங்கள் புலவரால் ஆங்காங்கு சுட்டப் படுகின்றன. அறப் பயனும் குறிக்காது கொடைப் பயனே குறித்து வழங்கிய ஆய் வள்ளலை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பின்வருமாறு பாராட்டுகிறார்; ‡“களாப்பழம் போன்று கரிய கோட்டினை உடைய சிறிய யாழ்கொண்டு பாடும் இனிய பாடல் வல்ல பாணர் களிறுகளைப் பரிசாகப் பெற்றுச் சென்றனர். ஆகவே அவற்றைக் கட்டியிருந்த தறிகளிற் காட்டு மயில்கள் தம் இனத்தோடு வந்து தங்கியிருக்கின்றன. ஆயின் உரிமை மகளிரும் வழங்குதற்கு அரிய மங்கல அணியையன்றிப் பிறவணிகள்யாவற்றையும் இரவலர்க்கு உரிமையாக்கி னர். ஆகவே அவனது கோவில் பொலிவிழந்து சாய்ந் தது என்று சொல்வாரும் உளர். இனிய சுவையுள்ள தாளித்த உணவைப் பிறர்க்கு உதவாது தம் வயிறே நிரப்பி, உரைசால் ஓங்கு புகழ் நீங்கிய முரசு பொருந்திய செல்வத்தினை உடைய வேந்தர் கோவில்களும் இருக்கின் றன. ஆயினும் அவை பொலிவிழந்த செல்வமற்ற ஆயின் கோவிலுக்கு நிகராகா.”

---

‡ புறம். 127

பாரி வாழ்ந்த நாளில் வேந்தர் கொடை குறைந்து நின்ற தன்மையைக் கபிலர் ஒரு பாடலிற் குறிப்பாகச் சுட்டுகின்றார். $ "நிழலில்லாத நெடிய வழியிடத்து நின்ற தனிமரத்தைப் போல, முரசு கெழுமிய வேந்தர் கொடுப்பதினும் மிகுத்து இரவலர்க்கு ஈயும் வள்ளியோன்" என்று பாரி புகழப் பெறுகின்றான். நிழலில்லாத நெடிய வழி கொடை வறந்த தமிழ் வேந்தரையும், அவ்வழியினின்ற தனிமரம் கொடை சிறந்த பாரியையும், நிழலொன்றே வழங்கியும் அதுவும் வழங்காதும் நிற்கும் பிற மரங்கள் போலாது வந்தவர்க்குக் குளிர் நிழலும் வான்கனிகளும் மிகுத்து வழங்கும் இணையற்ற மரம், இரவலர்க்குச் சிறிது வழங்கியும் அறவே வழங்காதும் இருந்த வேந்தர் போலாது முகமலர்ந்து வரையாது வழங்கிய பாரியின் கொடைத் திறனையும் நன்கு விளக்குகின்றன.

இவ்வாறு நெறியொழுகும் நேர்மையும், படை மறமும் அருள் அறமும், கொடைத் திறமும், அருங் கண்ணோட்டமும், அன்புள்ளமும் அமையப்பெற்ற பாரி அழியாப் புகழ் எய்தினமை வியப்பன்று.

✣"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

---

$ புறம். 119.
✣ குறள். 994.

# 5. அரசர் அழுக்காறு

**பா**ரியின் பறம்பு மலையை முற்றியவர் முடியுடை மூவேந்தரா? இவ்வினாவினை விடுத்தல் முதற்கண் வேண் டற்பாலது. சேர சோழ பாண்டியரின் சிறப்புக்களையே நிரம்பக் கேட்டு நிறைந்த நம் செவிக்குக் குறுநில மன் னன் ஒருவனை மூவேந்தருங் கூடி முற்றுகையிட்டார் என்ற செய்தி இனிமை பயப்பதாய் இல்லை. பேரரசன் ஒருவன் தனக்குக் கீழடங்காச் சிற்றரசன் ஒருவனை முற்றி யிருந்தான் எனவோ, சிற்றரசர் மூவரோ பலரோ ஒன்று கூடி ஒரு சிற்றரசனை அல்லது பேரரசனை முற்றியிருந்த னர் என்றோ கூறுதல் பொருத்தமாகக் காணலாம். இக் கருத்தினை உட்கொண்டே நாவலர் நாட்டார் அவர்கள் தாம் இயற்றிய "கபிலர்" என்னும் அரிய ஆராய்ச்சி நூலில், ‡"அக்காலத்துச் சேர சோழ பாண்டியர்களில் வீரத்தினும் நீதியினும் மேம்பட்ட பேரரசர் சிலர் இருந் தனர். அவருடன் பகைகொண்டு அரசின்றித் திரிந்தா ரும் சிலருண்டு. அங்ஙனம் திரியலுற்றோர் மூவர் ஒருங்கு கூடிப் படைகளைத் திரட்டிச்சென்று, பாரியின் பறம்பென் னும் மலையரணை முற்றுகையிட்டனர்" என்று எழுதியுள் ளார். இஃது ஆராய்ச்சிக்கு உரியதே.

---

‡ கபிலர் பக். 45

பண்டைத் தமிழ்ப் புலவர் சொல்லாட்சியிற் கருத்து ஊன்றியவர் என்பதனை ஐயுற இடமில்லை. வேந்தர், மன்னர், அரசர் என்ற சொற்களை ஒரே பொருளனவாகக் கொண்டு பிற்காலத்தோர் ஆண்டது போன்று பண்டையோர் ஆண்டிலர் என்பது அவர்தம் பாடல்களாற் புலனுகும். மன்னர், அரசர் என்ற பெயர்கள் பொதுவாக அரசுரிமை பெற்ற அனைவரையும், வேந்தர் என்ற பெயர் முடியுடை மூவேந்தரைச் சிறப்பாகவுங் குறித்தன என்பது சங்க நூல்களால் உணரப்படும் செய்தி. இதனைக் கருத்திற் கொண்டு ஆராயின், பறம்பை முற்றியவர் மூவேந்தரே என்ற முடிவு ஏற்படும்.

பறம்பினை முற்றியாரைப் பற்றிப் புறநானூற்றிற் காணும் குறிப்புகளை முதற்கண் நோக்குவோம். "வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே" (புறம்.111), "அண்ணல் யானை வேந்தர்க்கு, இன்னு ஞகிய இனியோன் குன்றே" (புறம். 115), "கூர்வேற் பாரியது, அருமை தெரியார் போரெதிர்ந்து வந்த, வலம்படு தானை வேந்தர்" (புறம். 116), "பணைகெழு வேந்தரை இறந்தும், இரவலர்க் கீயும் வள்ளியோன்" (119) என்று கபிலர் அவர்களை வேந்தர் என்ற பெயரால் குறிக்கின்ருர். மூவேந்தர் முன்னின்று பாடிய இரண்டு பாடல்களிலும் வேந்தர் என்ற பெயரைக் குறிக்காது, "களிகொள் முரசின் மூவிரும்" (புறம். 109), "கடந்தடு தானை மூவிரும்" (புறம். 110) என்று கபிலர் குறிக்கின்ருர். ஈண்டு வேந்தர் என்று குறிக்காவிடினும், களிகொள் முரசினை உடையவர், கடந்தடு தானையை உடையவர் என்ற அடைமொழிகளின் குறிப்பால் அவர்

முடியுடை வேந்தர் என்ற கருத்துப் பெறக் கபிலர் வகை செய்துள்ளார். மேலும், காரியைப் பாராட்டிக் கபிலர் பாடிய பாடலில்,

+"வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே" என்று

குறிப்பிட்டுள்ளதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

மேலும், தந்தையை இழந்த பாரிமகளிர், "வென்றெறி முரசின் வேந்தரெங், குன்றுங் கொண்டார்" (புறம். 112) என்று கூறுவதும், உரையாசிரியர் அப்பாடலின் அடிக் குறிப்பில், "ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ் சித்துக் கொன்றமையின், வென்றெறி முரசின் வேந்தர்' என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பு" என்று வேந்தர்க்கு முற்றும்மை கொடுத்துக் கூறியதும் ஊன்றி உணரத் தக்கன. அன்றியும்,

$"ஆளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட்டு யானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" என்று

நக்கீரருங் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, ஈண்டு வேந்தர் என்றது சேர சோழ பாண்டியராம் முடியுடை மூவேந்தரையே என்க.

---

+ புறம். 122.
$ அகம். 78.

சேர சோழ பாண்டியர்களின் பெயர்களை நோக்கும் போது இலக்கிய ஆராய்ச்சியாளர்க்கு இடர்பாடு ஒன்று நேர்வது உண்டு. சேரமான் அந்துவஞ்சேரல் இரும் பொறை, சேரமான் கணைக்கால் இரும்பொறை, சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும் பொறை, சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை, சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எனச் சில சேர அரசர் பெயர்கள் இரும்பொறை என்ற முடிவு பெற்று வருகின்றன. சில அரசர் பெயர்கள் சேரமான் செல்வக் கடுங்கோ வாழி ஆதன், சேரமான் குடக்கோ நேடுஞ்சேரல் ஆதன், சேரமான் பெருஞ்சேரல் ஆதன், சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரல் ஆதன் என ஆதன் என்ற முடிவு பெற்று வருகின்றன. வேல்கெழு குட்டுவன் என்ற செங்குட்டுவன் பெயரும் வேல்கெழு குட்டுவன் சேரல் ஆதன் என்ற பெயரின் சுருக்கமோ என்று ஐயுற இடமாகின்றது. மற்றும் சில பெயர்கள் சேரமான் குட்டுவன் கோதை, சேரமான் கோக் கோதை, சேரமான் மாக் கோதை என்று கோதை என்னும் முடிவு பெற்றுள்ளன. சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ, சேரமான் மாரி வெண்கோ என்று சில பெயர் கள் கோ என்ற முடிவு கொண்டுள்ளன. அவர் அனைவ ரும் சேரர் கொடிவழியில் ஒருவர்பின் ஒருவராய்த் தொடர்ந்து வந்த வேந்தரா, சேரர் கொடிவழியில் தொடர்புகொண்டு வெவ்வேறு இடத்திலிருந்து ஆண்ட தனித்தனி மரபினரா என்பது ஆராயத்தக்கது.

*கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய வள்ளல் வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகியைத் துறந்திருந்த காலத்து, அவளை ஏற்று இன்புற்று வாழுமாறு கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் நால்வரும் அவனுக்கு அறிவுறுத்தி வேண்டினர். ஆகவே, இந்நால்வரும் ஒரே காலத்தவர் என்பது போதரும். இவருள் இளையரும் முதியரும் இருந்திருப்பராயினும், அவர்தம் அகவை வேறுபாடு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்கு உட்பட்டதாகவே இருத்தல் கூடும். இவர் நால்வருமே பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்துப் பாடியவர். பரணர் செங்குட்டுவனை ஐந்தாம் பத்தாற் பாடினூர்; கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனை ஏழாம் பத்தாற் பாடினூர்; பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் எட்டாம் பத்தாற் பாடினூர்; பெருங்குன்றூர் கிழார் ஒன்பதாம் பத்தால் இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடினூர்.

இவ்வாறு இப்புலவரின் பாடல் பெற்ற சேரர் நால்வரும் ஒருவர் பின் ஒருவராய் ஒரே இடத்தில், சேர நாட்டின் அரசுரிமை தாங்கி ஆண்டனர் என்று கொள்ளுதல் அவ்வரசர் ஆண்டதாகக் குறிக்கப்பெறும் கால வரையறையோடும், ஒரு காலத்தினராக அறியப்பெறும் இந்நாற் புலவரும் வாழ்ந்திருக்கலாகும் மிஞ்சின அளவு கால வரையறையோடும் பொருந்துவதாய் இல்லை. ஆகவே, சேரமான் செல்வக்கடுங்கோ வாழி ஆதன் முதலிய ஆதன் மரபினர் வேறு; பெருஞ்சேரல் இரும்பொறை முதலிய இரும்

---

*புறம். 143—147.

பொறை மரபினர் வேறு. அவ்வாறே கோதை மரபினர் வேறு; கோ மரபினர் வேறு. இவரெல்லாம் சேரர் கொடி வழியில் தொடர்பு கொண்ட வெவ்வேறு மரபினர்; வெவ் வேறு இடத்திலிருந்து ஆண்டவர். இவருள் வஞ்சியில் இருந்து ஆண்ட சேரமான் மிக்க சிறப்பினனுய்க் கருதப் பெற்ருன்; பிறர் அத்துணைச் சிறப்புப் பெற்றிலர் என்று கோடலே சாலும். "சேரன் செங்குட்டுவன்" என்ற சிறந்த ஆராய்ச்சி நூலே வெளியிட்ட திரு. மு. இராகவை யங்கார் அவர்களும் இதற்கொத்த கருத்தினர் என்பது அந்நூலால் இனிது விளங்கும்.

இது போன்றே சோழருள்ளும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலிய கிள்ளி மரபினரும், கிள்ளி வள வன் முதலிய வளவன் மரபினரும், நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி முதலிய சென்னி மரபினரும் பிற ரும் சோழர் கொடிவழியில் தொடர்பு கொண்ட வெவ் வேறு மரபினர் என்று கொள்ளலாம். கரிகால் வளவன் சென்னி மரபில் தோன்றியவன். இவன் உருவப் ப.்றேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். ஆயின், இவன் வள வன் என்ற மரபுப் பெயரினே எவ்வாறு பெற்ருன்? கரிகா லனேப்பற்றி வழங்குங் கதைகள் பல. அவற்ருல், அரசு ரிமை பெற்ற கரிகாலனுக்குத் தாயத்தாரால் இடையூறு கள் பல நேர்ந்தன என்ற உண்மை புலனுகின்றது. பெரு வீரனுகிய கரிகாலன் தனது தாயத்தாரை வென்றதோடு நில்லாமல், அவருக்குத் துணையாய் நின்ற வளவன் மரபி னரையும் வென்று, தன் வெற்றியின் அடையாளமாக வள வன் என்ற மரபுப் பெயரையுந் தனக்கு உரிமையாக்கினுன் என்று கோடல் பொருந்தும். ஆயினும், இ.்து ஆராய்ச்

சிக்கு உரியது. வளவன் என்ற பெயர் சோழ மரபினர் அனைவருக்கும் உரிய பொதுப்பெயராயின், புறநானூற்றுப் பாடல்களில் வளவன் என்ற முடிவுபெறும் அரசரைப் பற்றிய பாடல்களில் மட்டும் வளவன் என்ற சொல் வழங் கப்படுவதன் காரணம் என்ன?

இவ்வாறே பாண்டியருள்ளும் பல்வேறு மரபினர் இருந்தனர். பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ் சிய நன்மாறன் முதலியோர் மாறன் மரபினர்; பாண்டி யன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலியோர் செழியன் மரபினர்; பாண்டியன் உக்கிரப் பெருவழுதி முதலியோர் வழுதி மரபினர். இவரெல்லாம் பாண்டியர் கொடிவழியில் தொடர்புகொண்ட வெவ்வேறு மரபினர். ஈண்டும் பாண்டியன் என்ற பெயர் பாண்டிய மரபினர் அனைவர்க்கும் பொதுவின் வழங்குதலும், மாறன் முதலிய பெயர்கள் அவ்வம் மரபினர்க்கு மட்டும் வழங்குதலும் நோக்கத் தக்கன. சேரர் போன்ற சோழ பாண்டிய ருள்ளும் உறையூரிலும் மதுரையிலும் இருந்து ஆண்டவர் மிக்க சிறப்பினராய்க் கருதப்பெற்றனர்; பிறர் அத்து ணைச் சிறப்புப் பெற்றிலர் என்க.

இனி, பாரியோடு பொருத மூவேந்தர் இவருள் யாவர்? இவ்வேந்தரது பெயரை எப்புலவருங் குறித்தா ரல்லர். கபிலரும் அவர் காலத்தவராக அறியப்பெறும் பரணரும் பெருங்குன்றூர் கிழாரும் பாண்டியர் எவரை யுமே பாடிற்றிலர். அக்காலத்தவரான அரிசில்கிழார் உக் கிரப்பெருவழுதியைப் பாடியுள்ளார். உக்கிரப் பெரு வழுதி பறம்புப் போரில் ஈடுபட்டவனாகத் தோன்றவில்லை.

இந்நாற்புலவரது பாடல் பெற்ற சேர சோழ அரசரும் அப்போரில் ஈடுபட்டவராகக் குறிக்கப் பெறவில்லை. பாரியின் காலம் 'பாண்டிய நாடு புலவர் பாடும் புகழ் பெற்ற சிறந்த அரசன் இல்லாது வறந்திருந்த காலம் போலும்! இப்பாண்டி மன்னனே பறம்புப் போர் தொடக்கத்திற்குக் காரணமாய் இருந்திருத்தல் வேண்டும்.

பாண்டி நாட்டுச் சிற்றரசருள் பாரி ஒருவன். அவன் கொடைச் சிறப்பால் அறிஞர் உள்ளத்தில் அரசு வீற்றிருந்தான்; படைச் சிறப்பால் அரசர் உள்ளத்தில் அச்சம் விளைத்திருந்தான்; நடைச் சிறப்பால் குடிகள் உள்ளத்தில் குடி புகுந்திருந்தான். பாண்டியர் பழங்குடியில் தோன்றிய பேரரசன் ஒருவன் மதுரையில் இருந்தான். பேரரசன் என்ற பெயர் அவனளவில் பெரிய அரசன் என்று பொருள்படாது பெயரளவில் அரசன் என்றே பொருள் பட்டது. கொடுக்கும் ஆற்றல் இல்லாமையாலோ கொடை உள்ளம் இன்மையாலோ அவனை அறிஞர் அணுகிலர்; படைச்சிறப்பின்மையால் பிற மன்னரும், நடைச் சிறப்பின்மையால் நாட்டு மக்களும் அவனை நன்கு மதித்திலர். தன் குறைகளை உணர்ந்து திருத்திப் பீடு பெறும் பண்பாடும் அவனுக்கு இல்லை. ஆகவே திருச் செற்றுத் தீயுழி உய்க்கும் அழுக்காறு என்ற ஒப்பற்ற பாவி அவனது இருள் உள்ளத்தில் குடி கொண்டான். தனது கீழ்மையே தன் இழிவுக்குக் காரணம் என்பதனை அறியும் ஆற்றல் அவனுக்கு இல்லை. பாரியின் மேன்மையே தனது கீழ்மைக்கும் இழிவுக்கும் காரணம் என்ற திரிபுணர்ச்சி அவன் உள்ளத்தில் உறுதிகொண்டது. இத்தகைய மேன்

மையோனைக் கொன்று ஒழித்திடின் தனது கீழ்மை மேன்மையாகும் என்ற மயக்கம் அவனைச் செயலாற்றுமாறு பிடர் பிடித்து உந்தியது.

பாண்டியன் தனது கருத்தினை முற்றுவிக்கும் பேராண்மை அற்றவன். புலவர் பாடும் புகழ் பெறாத தோடு, கபிலர் முதலிய பெரும் புலவரால் தன் பெயர் தானும் குறிக்கும் பேறு பெறாத இப்புரவலன் எத்துணைவீரனாய் விளங்கியிருத்தல் கூடும் என்பது நம் ஊகத்திற்கு உட்பட்டதே. தானே படையெடுத்து வெற்றி விளைக்கும் ஆற்றல் அற்றிருந்த அவன் அந்நாளிற் சிறந்து விளங்கிய சேர சோழப் பேரரசரை அணுகித் தன் கொள்கைக்கு ஆதரவு தேடி அவர்தம் துணையைப் பெற முயன்றான். அவரெல்லாம் இவனது ஏழ்மையை எள்ளி நகையாடினர். பாரியின் நிறை கண்ட அப்பெருவேந்தர் போர் தொடுத்து வெல்லவும் கொல்லவும் தக்க குறை ஒன்றும் பாரிபால் இல்லாமையை இக்கல்லாக் களிமகனுக்கு எடுத்து உணர்த்தினர். களித்தானைக் காரணங் காட்டுதல் இயலுமா? அது நீரின் அடியில் மூழ்கியிருக்கும் ஒருவனைத் தீயொளியால் தேடுவதனை நிகர்க்கும் அன்றோ? அவ்வாறே அழுக்காறு கொண்ட ஒருவனும் அதனால் அழிவு பெறுந்துணையும் அறிவு பெறான். வேந்தர் மறுப்பால் தலையிறக்கம் கொண்ட பாண்டியன் தன் தலை இறங்கிய அளவுக்கு அழுக்காறு மீதூரப் பெற்று மதுரையை அடைந்தான்.

பாரியின் புகழ் பரந்து ஓங்கியது. மதுரை மன்னனின் மனம் பொறாமையால் புழுங்கி வீங்கியது. பெருவேந்தரின் அறவுரை அவனுக்குப் பிறவுரையாய்ப் பட்டது. சேர சோழர் கொடிவழியில் தோன்றித் தமிழ்

மறம் சாலாத பிறவேந்தரைப் பாண்டியன் அணுகினுன். என்றும் சான்ருேர் சான்ருேர் பாலராதலும், சாலார் சாலார் பாலராதலும் இயல்பே அன்ருே? சால்பிலாச் சேரன் ஒருவனும் சோழன் ஒருவனும் பாண்டியனுக்குத் துணை நிற்க உடன்பட்டனர். இருவரும் புலவரால் பெயர் தானும் குறிக்கப் பெருத பெருமையினரே. மூவேந்தரும் ஒன்றுகூடித் திட்டமிட்டனர். வளம் மிக்க பறம்பினைப் பெறுதலும், தனிநின்று தாக்க இயலார் துணைநின்று தாக்கி வெற்றிப் புகழ் எய்துதலும், யாவினும் மேலாகத் தம்புகழெல்லாம் விழுங்கி மிளிரும் பொன்ருப் புகழினனைக் கொன்று வஞ்சம் தீர்த்தலும் அறம் பாழ்பட்ட மூவேந்தரின் மறத்திற்கு ஊக்கம் உதவின. மூவரும் படையுடன் பறம்பு மலையை நோக்கிச் சென்றனர்.

# 6. மூவேந்தர் முற்றுகை

வையாவிக் கோப்பெரும் பேகனிடம் சென்றிருந்த கபிலர் பறம்பு நாட்டிற்குத் திரும்பி வந்திருந்தார். அவரை வரவேற்கப் பாரி தன் மகளிருடன் விரைந்து வந்தான். புலவரும் புரவலனும் அன்பு கெழுமத் தழுவிக் கொண்டனர். மகளிர் இருவரும் மகிழ் சிறந்து நின்றனர். சின்னாட் பிரிவெனினும் பன்னாட் பிரிவுபோன்று நால்வரும் பருவரல் கொண்டிருந்தனர். உள்ளத்தாற் பேசி உரையாடாது நால்வரும் சிறிது நேரம் நின்றனர். பாரியே முதன்முதல் அம்மோனத்தைக் கலைத்தான். கண்ணகியைத் துறந்திருந்த பேகனின் நிலையைப் பற்றிப் பாரி உசாவினன். நால்வரும் இருக்கைகளில் அமர்ந்தனர். கபிலர் கூறலுற்றார்:

"பேகனின் ஆருயிர்த் துணைவி கண்ணகி நல்லாள் கற்பு மேம்பட்ட காரிகை. பேகனும் பிற மாதரைச் சிந்தையாலுந் தொடாத செவ்வியோன். இருவர்க்குமிடையே எவ்வகையில் வேறுபாடு எழுந்ததென்பது இன்னும் மறைபொருளாகவே உள்ளது. வெறுப்புற்ற பேகனும் அதனை வெளியிட்டுக் கூற விருப்பிலன் ஆயினன். கண்ணகி நல்லாளும் கண்ணீர் வெளிப்படுத்தலன்றிக் காரணம் வெளிப்படுத்திலள். அவர் தம் நிறையும் பொறை

யும் இருந்தவா றென்னே! சென்ற யாமும் கண்ணீர் கண்டு காரணம் கேட்க மறந்தனம். யான்சென்ற காலை கண்ணகி தன் சிற்றூர்க்கண்ணே குழல் குலைய விழி நீர் பொழிய வேற்றுருப் பெற்று விம்மி விம்மி இருந்தாள். அருகிருந்து தேற்றுவார் கூற்றெல்லாம் பாலையிற் பெய்த நீரென ஆயின. நீர் நிறைந்து நிமிர்ந்த கண்களுடன் அவள்என்னை நோக்கிய வண்ணம் இருந்தாள். என் உருவம் அவள் கண் களில் காணப்படவில்லை. பேகனின் உருவமே அவள் கண் களில் நிறைந்து நின்றது. அவள் எழுந்ததுமிலள்; அசைந் ததுமிலள். அவள் கண்ணீர் என் உள்ளத்தை உருக்கியது. யானும் பேகனைக் காண நல்லூருக்கு விரைந்துசென்றேன்.

''பேகன் என்னை எழுந்து வரவேற்றான். அவன் முகத்திற் புன்னகை தவழ்ந்தது. பனி மூடிய நிறைமதி போன்று அவன் முகம் இருந்தது. நான் அவனை நோக் கிப் பாடினேன். •''மலையை முகில் வந்து சூழ்க என்று சிறந்த பலியைத் தூவி, மழை மிகுதியாகப் பெய்தமை யால் முகில் மேலே போவதாக என்று தெய்வத்தைப் போற்றிய குறவர்கள் மழை மாறிய மகிழ்வினால் மலைச்சார லில் புனத்து விளைந்த தினையை உண்ணும் நாட! சினப் போர் ஆற்றலும் கைவள் ஈகையும் விரைந்து செல்லுங் குதிரையும் உடைய பேக! நேற்றுச் சுரத்திடை நடந்து வருந்திய என் சுற்றம் பசித்ததாக, கடிப்பினால் அறைந்த முரசொலி போன்று அருவி ஒலிக்கும் உயர்ந்த மலைப்பக் கத்து அமைந்த சிற்றூரில் ஓர் இல்லத்து வாயிற்கண்

• புறம். 143.

வந்து நின்று, நின்னையும் நின் மலையையும் வாழ்த்திப் பாடினேன். அப்பொழுது, துன்புற்றுச் சொரியும் தன் கண்ணீரை நிறுத்த மாட்டாதவளாய், அக்கண்ணீர் தன் மார்பகம் நனைப்ப, இரங்கி ஒலிக்குங் குழலொலி போன்று விம்மி அழுதாள் ஒரு பெண். 'இரங்கத் தக்க அவள் யாரோ?' என்று நான் பாடி, குறவர் தெய்வம் பேணி விரும்பியாங்கு மழை பெற்று இன்னுணவு நுகர்ந்து இன்புறுதல் போன்று, உன்னையே பேணும் இவளும் உன் அருள் பெற்று இன்புறுதல் வேண்டும் என்ற கருத்தையுங் குறிப்பாக உணர்த்தினேன். பேகன் என் மொழிகளை உணர்ந்து போற்றினான். அவன் உள்ளத்தில் எழுந்த பூசலை அவன் முகக்குறியால் உணர்ந்தேன். ஆயினும், அவன் கண்ணகிக்கு அருள் செய்தானல்லன்.

"அப்பொழுது பரணர் அங்கு வந்தார். $'பேக! வரும் வழியில் இரவு குறுக்கிட்டது. யாம் சிறிய யாழில் செவ்வழி என்னும் பண்ணை அமைத்து முகில் தவழும் நினது கானம் பாடினேம். அப்பொழுது, ஓர் இளையோள் நீல நறுநெய்தல் போன்று மையுண்டு பொலிந்த தன் கண்கள் கலங்க இடைவிட்டுச் சொரியும் துளிகள் பூண் புனைந்த மார்பை நனைக்க வருந்துதல் ஒழியாளாயினாள். "இளையோய், எம் கேண்மையை விரும்புவோனுக்கு நீ உறவினளோ?" என்று யாம் அவளைத் தொழுது வினவினேம். அவள் எதிரொன்றும் மொழியாளாக, ஆயத்தார் காந்தள் முகைபோலும் விரலால் அவள் கண்ணீரைத் துடைத்து, "யாம் அவனுக்கு உறவினர்

$ புறம். 144.

அல்லேம். இன்னும் கேள்: புகழ் விளங்கு பேகன் முல்லை வேலியை உடைய நல்லூரின்கண் எம்மைப்போன்ற ஒருத்தியின் அழகை விரும்பி ஒல்லெனா ஒலிக்குந் தேரோடு எந்நாளும் வருவான் என்று பலரும் சொல்வர்'' என்றனர். இவ்வாறு இளையோளும் ஆயத்தாரும் உறும் துன்பம் தீர்த்து அருளா திருத்தல் கொடிது' என்று பரணர் பாடினர். ஊரார் உரைத்ததைக் கண்ணகி கொண்டு கூறியதன்றி, அவர் கூற்றை நம்பிக் கூறியதும் அன்று என்ற குறிப்பும் அவர் பாடலிற் பொதிந்து கிடந்தது. பேகன் அதற்கும் அசைந்தானல்லன்.

''பரணர் மேலும் தொடர்ந்தார். ‡'மெல்லிய தன்மையுள்ள சிறந்த மயில் குளிரால் நடுங்குமென்று அருள் சுரந்து போர்வையை ஈந்ததனால் எய்திய கெடாத நற்புகழும், மத யானையும், மனஞ் செருக்கிய குதிரையும் உடைய பேக! யாம் பசித்து வருவதும் இல்லை. சுற்றத்தை ஓம்பும் பாரமும் எமக்கில்லை. களாப்பழம் போலும் கரிய கோட்டினை உடைய சிறிய யாழினை இசை நலம் விரும்பி வாழ்பவர் தம் தலையசைத்து மகிழுமாறு வாசித்து, ''அருளை விரும்புவோய்! அறஞ் செய்வாயாக'' என்று கூறிச் செல்லும் இஃதே எம் தொழில். இன்றிரவு பல்வகை மணிகளும் பாங்குற அமைந்த நெடிய தேர்மீது ஏறிச் சென்று, துன்பத்தில் தோய்ந்து உறையும் நின் மனைவியின் பொறுக்கரிய மனத்துயரைத் துடைப்பாயாக என்று வேண்டும் அஃதே யாம் இரந்த பரிசில்' என்று அவர் வேண்டினர். துன்பம் அல்லாத ஒன்றினைத் துன்ப

‡ புறம். 145.

மென உட்கொண்டு ஒரு பறவைக்கே அருள் சுரந்த நீ, உன் காரணமாக வருந்தும் ஆருயிர்த் துணைவிக்கு அருளாதிருத்தல் தகாது என்றும் அவர் குறிப்பித்தார். ஆயினும் பேகன் கருத்து மாறிற்றிலன்.

"பரணர் கூற்றை அரிசில் கிழார் ஆதரித்துப் பேசினார். *'அவ்வண்ணமே ஆகுக. நின்னிடம் அருங் கலமும் செல்வமும் பெறுதலை யாம் விரும்பேம். போரிற் பகைவரைக் கொல்லும் பேக! சிறிய யாழில் செவ்வழிப் பண்ணை அமைத்து நின் வன்மலை நன்னாட்டைப் பாட, நீ என்னை நயந்து பரிசில் நல்க விரும்பினையாயின், தலைவனே! நீ அருளாமையாற் கண்டார் இரங்க மெலிந்து அருந்துயரால் வருந்தும் நின் திருந்திழை அரிவை, தழைத்த மயிலினது பீலியைக் காலொன்றக் குவித்தாற் போன்ற தழைத்த மெல்லிய கூந்தலில் நறும்புகை ஊட்டிக் குளிர்ந்த மணங் கமழும் மாலையைச் சூடும் வண்ணம், வளம்படச் செல்லும் தேரில் நின் குதிரைகள் பூட்டப்படுக' என்று அரிசில் கிழார் பாடியும் பேகன் பெயர்ந்தானல்லன்.

"பேகனின் அசையா நிலைகண்டு யாமெல்லாம் அயர்ந் திருந்தோம். அவன் மனத்தே பெரும்போர் நிகழ்வதனை அவன் முகக்குறி உணர்த்தியது. அப்பொழுது பெருங் குன்றூர் கிழார், ‡'ஆவியர் கோவே! யாம் அருவி இழி தரும் மலை பல கடந்து சிறிய யாழில் செவ்வழிப் பண் அமையப் பாடிவந்தேம். கார்காலத்து மழையின் இனிய

---

*புறம். 146,
‡புறம். 147,

துளி வீழும் ஓசையைத் தனிமையிற் கேட்டு, அரி பரந்த மதர்த்த கண்கள் நீர் துளிப்ப ஒரு பக்கத்தே நேற்று இருந்த அழகிய மாமை நிறத்தினை உடைய அரிவையின் நெய் துறந்த மைக் கருங் கூந்தல் மண்ணிய மணி போன்று மாசறக் கழுவிப் புதுமலர் புனையும் வண்ணம் இன்று வருவையாயின் அதுவே எம் பரிசல் ஆகும்' என்று பாடினர். பேகன் நீர் நிறை கண்ணோடு நெடிது நினைந்து இருந்தான்."

பாரி இத்துணையும் பொறுமையாய்க் கேட்டுக்கொண் டிருந்தான். பேகனின் பெருங்குணத்தை நன்கு அறிந் திருந்த பாரிக்கு நால்வர் பெரும் புலவர் அறிவுரையின் பின்னரும் பேகன் இரங்காத தன்மை வியப்பை அளித் தது. உற்ற நோய் நோன்றலும் உயிர்க்குறுகண் செய் யாமையும் தவமாக் கொண்ட தகையோன் பிழையில்லா ஒன்றினைப் பெரிது பாராட்டி நாவலர் கூறியும் நடுங்காத தன்மை பாரியின் உள்ளத்தைப் பதறச் செய்தது. அவன் அவரை நோக்கி, "நண்பரே! கண்ணகி தன் கணவன் உயிரையன்றித் தனக்கெனப் பிறிதுயிர் இல்லாத தனிக் கற்பினள். ஆடல் வல்ல மகளிர் எவரேனும் பேகன் அவையை அணுகி ஆடல் அழகு காட்டியிருப்பர். பேகனும் அவர்தம் கலைநலம் கண்டு பெரும் பரிசளித்துப் போற்றி யிருப்பன். அவன் செய்த தண்ணளியைத் தவறாக உணர்ந்த மக்கள் சிலர் அவன் மனந் திரிந்தானாக அடாப் பழி சுமத்தியிருப்பர். இச்செய்தி அலராக ஊரெல்லாம் பரவிக் கண்ணகி நல்லாளின் காதுகளுக்கும் எட்டி யிருக்கும். அவளும் அதனை நம்பிலளாயினும், கணவன் நலத்தினைக் கருத்திற் கொண்டு, அதனைக்

குறித்து அவனிடம் கேட்டிருப்பள். அதனால் வியப்பும் வெறுப்பும் கொண்ட பேகன் அவளைத் தாயகம் ஏகப் பணித்துத் தனித்திருந்திருப்பன். ஆயினும் கண்ணகி யின் மனநிலையை உணர்ந்த பின்னரும் அறிஞர் அறிவுறுத் திய பின்னரும் அவன் இரங்காத நிலைமை எனக்கு வியப்பையே விளைக்கின்றது" என்றான்.

கபிலர் அவனை நோக்கி, "வள்ளலே! நின் ஊகம் முற் றிலும் பொருந்துவதே. இருவரையுங் குறைகூற இயல வில்லை. கண்ணகியின் கற்பு மேம்பாடு உலகிற்கு விளங்க வும், பேகனின் பிறர்மனை நயவாப் பெருந்தகைமைக்கு அரணாகவும் இச்சிறு துயர் இடையில் நுழைந்ததாகவே யாமெல்லாம் கருதினோம். பேகனும் கரையாக் கன் னெஞ்சினன் அல்லன். அறிஞர் உரையை அறியும் ஆற்றல் அற்றவனும் அல்லன். பழிகேட்டு வெம்பிய மனத்தால் வெளியே வெறுப்புத் தோன்றியதேனும், அவன் உள்ளம் அனல்மேல் மெழுகாய் உருகி ஓடியது. இறுதியில் எம்மையும் உடன்கொண்டு தேரேறிக் கண்ணகியை அடைந்து, அவள் கண்ணீர் துடைத்து அளவளாவி அன்புகாட்டினான். எம் உள்ளங்கள் மலர்ந் தன. எமக்கு அவன் காட்டிய நன்றியும் நீட்டிய பரிசி லும் அவன் உள்ளத்திலும் உயர்ந்தவை. நின்னையும் நின் மகளிரையும் பிரிந்திருக்க மனம் கொள்ளாமல் நான் உடனே விரைந்துவந்தேன்" என்று கூறி முடித்தார்.

முடிவை அறிந்து பாரியும் மகளிரும் மகிழ்ந்தனர். "பேகனைப் போன்ற ஒருவனைக் கணவனாகவும், கண்ணகி போன்ற ஒருத்தியை மனைவியாகவும் கொண்டு வாழும்

இல்லறமே நல்லறமாம். அத்தகைய நல்லாரை மருமக்க ளாக அடையப்பெறும் பெற்ருேரும் பெருந்தவம் செய்தவர்களேயாம்" என்று பாரி கூறுகையில், காவலன் ஒருவன் பதறி வந்து பணிந்து நின்ருன்.

அரணுக்கு வெளியே போர் முரசு ஒலித்தது. அரண் வாயில்கள் அடைப்புற்றன. வந்தகாவலன் குழறுமொழிகள் சில புகன்ருன். அவற்றை அரை குறையாய்க் கேட்ட வண்ணம் பாரி விரைந்து சென்று, அரணின் மேற்புறம் ஏறி நின்று வெளியே நோக்கினுன். கபிலரும் தொடர்ந்து சென்ருர். மூவேந்தர் கொடிகள் காற்றில் அசைந்து நின்று தம் தலைவரை உணர்த்தி நின்றன. வீரர் அணிந் திருந்த உழிஞை மாலைகள் முற்றுகை செய்யும் விருப் பினர் அவர் என்பதை விளக்கின. பாரி தன் தோள் களைத் திரும்பி நோக்கினுன். அவை தடித்துத் துடித்து நின்றன. அடியிற் குழுமி நின்ற தன் வீரர்களை அவன் நோக்க, அவரெல்லாம் தோள்தட்டி ஆரவாரித்தனர். எதிரிப் படையினரை இகழ்ந்துநோக்கி வெடிப்படச் சிரித்து, பாரி கபிலரோடு கீழே இறங்கி வந்தான்.

---

# 7. வேந்தர் தோல்வி

**ப**றம்பினுள் எதிர்முரசு ஒலித்தது. தொட்ட தொழிலே அப்படியே விட்டு வீரர் திரண்டு குழுமினர். அவர் தம் தினவு கொண்ட தோள்கள் நிமிர்ந்து எழுந்தன. "நொச்சி சூடுவோம்! அரணினைக் காப்போம்! அதிரப் பொருவோம்! ஆண்மை காட்டுவோம்! பகையை ஓட்டுவோம்!" என்று வீரர் ஆரவாரித்தனர். பாரி கையசைத்தான், அமைதி நிலவியது. "வீரர்களே! ஒருவனை மூவர் பெருவேந்தர் முற்றினர் என்பது தமிழக வரலாற்றிற் புதியதோர் செய்தி. மானமும் மறமும் அற்ற மூவேந்தர் அறிவிப்பின்றி அரணை அணுகிய செய்தியே அவர்தம் தோல்வி மனப்பான்மையைத் தெள்ளிதின் உணர்த்தும். போர் தொடுக்க இவர்க்கு எய்திய காரணம் யாது? வந்தவர் பறம்பின் அரணை எவ்வாறு மதித்தனர்? தோழமை கருதிப் பொராதிருந்த என் வலியினை ஏழைமை என்று கருதினர் போலும்! புறங்காணும் ஆற்றல் நமக்கு உளதெனினும், வேண்டா இடத்து உயிர்களைக் கொல்வது அருள் இலக்கணத்துக்கு அமையாது. ஆதலின், இவர் முற்றியிருந்து பற்ற இயலாமையை முற்ற உணர்ந்து விட்டுச் செல்வர். அரணினைக் காக்கும் வீரர் தவிர, ஏனையோர் தத்தம் இருப்பிடம்

85671
031:3N15...
...AI UNIVERSITY LIBRARY

ஏகலாம். வேண்டியபோது போர்முரசு ஒலிக்கும். அப்பொழுது நீவிர் வருவது போதும்" என்று பாரி கூற, வீரரெல்லாம் திரும்பிச் சென்றனர்.

பாரியும் கபிலரும் தனித்திருந்து போர்க் காரணத்தை ஆராய்ந்தனர். பாதுகாப்புப் பயன் கருதியே படை வைத்திருந்த பாரி பிறர் மண் கொள்ளும் ஆவல் சிறிதும் அற்றவன். இதுவரையில் அவன் தன் படை வலியை அவ்வழியிற் செலுத்தியதும் இல்லை. ஆகவே, போருக்கு எவ்வகையிலும் தான் காரணன் அல்லன் என்று பாரி தெளிந்தான். வந்த வேந்தரும் ஆண்மை அற்றவர். அவர் உள்ளம் நோக ஒன்றும் செய்தறியான் பாரி. ஆகவே, ஆற்றல் காரணமாகவோ பகைமை காரணமாகவோ அவர் படையெடுத்தார் என்று மதித்தற்கில்லை. வேறு என்ன காரணம் இருக்க முடியும்? பாரி கபிலரின் கருத்தை அறிய ஆவல் கொண்டான்.

கபிலர் கூறலுற்றார்: "வள்ளலே! பெருங்குடி மரபில் தோன்றிய இவர் தம் மரபுக்கு ஏற்ற மாண்பு சிறிதும் இல்லாதவர். பெரும் புலவர் பலர் சிறந்து விளங்கும் இந்நாளில் புலவர் எவரும் இவர்தம் நாட்டை எட்டியும் பார்க்கிலர். கொடைநலம் இல்லாரேனும், குணநலமேனும் பெற்றிருப்பாராயின் அவரைப் பாடிப் புகழ அரும் புலவர் செல்வர். இவரோ ஒருவகை நலமும் ஒன்றுதவர். ஆகவே, புலவரெல்லாம் வள்ளியோரை அடைந்து வளமுடன் வாழ்கின்றனர்; இவரை அணுகுவார் எவரும் இலர். ஒழுக்கமிலார் ஒழுக்கமுடையாரைப் பாராட்டும் பண்பு அமையப் பெறுதல் இல்லை. தாமும் ஒழுக்கமுடையோராய் ஒழுகி உயர்வு பெறவேண்டும் என்ற எண்ணம்

அவர்களிடம் உதிப்பதில்லை. தமது தாழ்வை நோக்குந் தோறும், உயர்ந்தோரிடம் அவர்களுக்கு அழுக்காறு தோன்றுதல் இயல்பு. இவ் வேந்தரும் அழுக்காறு காரண மாக அரணினைச் சூழ்ந்தனர் என்று கொள்வதன்றிப் பிறிதொரு காரணமும் எனக்குப் புலப்பட்டிலது'' என்று அவர் குறித்தார்.

அவ்வுரை கேட்டுப் பாரி சினந்தெழுந்தான். ''அழுக் காறு ஒன்றே காரணமாக அமைதியாய் வாழும் நாட்டை அலைக்கழிப்பதா? வையத்து வாழ்வாங்கு வாழும் பிற ரைக் கண்டு, அவ்வாறு வாழுந் தகவிலார் அரும்போர் விளைப்பதா? அறநெறி ஒழுகும் அந்தமிழ் நாட்டில் அழுக் காறு முளைப்பதா? முளைத்துத் தழைப்பதா? தழைக்க விடுவதா? ஆண்மை பெற்றவன் அடங்கி வாழ்வதா? அறிவிலார் இந்த அருமண்ணை மிதிப்பதா? தொகை கண்டு மருளும் படையா நம் படை? வழியின்றி வணங்கி வாழ்வதா நம் குலம்? கொடையில் மடமை எமக்கு இயல்பே; ஆனால், படை மடம் படுதல் என்றும் அறிந் திலேம். வந்தவரை முதுகிடச் செய்வேம். அன்னவர் நாட்டில் ஒரு மண்ணும் யாம் விரும்பேம். படையுடன் எழுவேம்; பகைவரைச் சிதைப்போம்'' என்று பாரி பொங்கி எழுந்தான். கபிலர் அவனை உற்று நோக்கினர். ''வள்ளலே! அறிவிலார் பிழை இது. ஆறுக சினம். பொருதலும் வேண்டுமோ? அரண் முடிப்பதை ஆள் முடிப்பது ஏன்? முற்றியவர் வெற்றி பெறல் இயலாமை உணர்ந்து விரைவில் மீள்வர். நம்முடன் பொருதற்குத் தகுதியே இல்லாதவர் என்று நாம் அவரைப் பொருட்

படுத்தாது இருப்பதே நலமென எண்ணுகின்றேன்” என்று கபிலர் கூறினர். தண்ணளி கொண்ட பாரியின் உள்ளச் சினம் படிப்படியே தணிந்தது.

மூவேந்தர் முற்றுகை நீடித்து நடந்தது. அரணுள்ளே அசைவு ஒன்றுந் தோன்றவில்லை. வெளியே வேந்தரும் வீரரும் அரிய எதிர்ப்பு எதிர்பார்த்தனர். உள்ளிருந்து போரொலியே கிளம்பவில்லை. அரணில் மெலிந்த இடம் எதுவும் இல்லை. அகழ்தல், இடித்தல், ஏணியால் ஏறுதல் இவற்றிற்கும் அவ்வரணில் இடமில்லை. பொறிகளின் செறிவுந் திறமும் செவ்விய தோற்றமுங் கண்டு, அரண் வாயிலை அணுகவும் எதிரிகள் அஞ்சினர். குறியொன்றின்றி எதிரிகள் மழையாய்ப் பொழிந்த அம்புகளை உள்ளிருந்த அரண் காவலர் ஊறு ஒன்றுமின்றித் தமக்கு உதவியாம் வகையிற் சேர்த்துக் குவித்தனர். எதிரிகளை நோக்கி ஒரம்பேனும் அரணுளார் எய்திற்றிலர். வேந்தர் வியந்தனர். அவர்தம் வீரர் தளர்ந்தனர். அரணுளாரை வயப்படுத்தி வினைமுடிக்கவும் வாய்ப்பில்லை. வாய்ப்பு கிட்டினும் வஞ்சகச் செயலுக்கு இசைபவர் எவரும் இல்லை. முற்றுகை வெறுங் காவலாகத் தோன்றியதே அன்றி, வேந்தர் ஆவலை நிறைவேற்றுவதாய் இல்லை. ஆயினும், நெடுநாள் முற்றுகையில் அரண் வீழ்ச்சியுறுதல் உறுதியென்று வேந்தரும் படைஞரும் வீணே காவல் புரிந்தனர்.

உள்ளே விழாவிற்கும் விருந்திற்குங் குறைவில்லை. பகை வந்து புறத்து இறுத்திருத்தலை மக்கள் மனங் கொண்டிலர். வெளியே போதல் வருதல் இல்லாக் குறை

யொன்றே தவிர, வேறு குறையொன்றும் அவர் உணர்ந்திலர். கடை காத்து நின்ற கடையர் உயிரோம்ப வேண்டுவன இன்றி வருந்துவரோ என்ற வருத்தமே அன்றி, உண்பன உடுப்பன நுகர்வன எவையும் வேண்டியாங்கு அடைந்து வருத்தம் சிறிதும் இன்றிப் பறம்புளார் வாழ்ந்தனர். "படை எடுப்போம்! சினம் முடிப்போம்! வென்று குதிப்போம்! கொன்று குவிப்போம்!" என்று பொங்கி எழுந்த வீரரை அமைவுறச் செய்தலில் பாரியும் கபிலரும் முனைந்து நின்றனர். வீரரும் முடிவில் பாரியின் கருத்தே தம் கருத்தாகக் கொண்டு தணிந்தனர்.

நெடுநாள் வறிதே முற்றியிருந்த வேந்தரையும் வீரரையுங் கண்டு பாரியும் கபிலரும் மிக்க இரக்கம் கொண்டனர். தாமாக அறிந்து அகலாத அவ் வேந்தரிடம் சென்று, அவர் உள்ளம் அறிந்து, அவர்தம் வீண் முயற்சியைத் தவிர்க்கக் கபிலர் விரும்பினர். பாரியும் அதற்கு இசைவு காட்டினன். அரண் வாயில் திறந்து எதிரிப் படையை நோக்கிக் கபிலர் சென்றார். வேந்தர் முரசு முழக்கினர். தம் முயற்சி வெற்றியை நெருங்கியதென்று அவர் கருதினர். அவர் தம் அறியாமையை உணர்ந்து உள்ளத்தே வெறுத்தவராய்க் கபிலர் வேந்தரை அணுகினர். வேந்தரும் தாம் அறிந்த முறையில் அவரை வரவேற்றனர். வெற்றிப் புன்னகை வேந்தர் தம் முகத்தில் மின்னித் தவழ்ந்தது. கபிலரின் வெறுத்த நோக்கு அவர்தம் புல்லிய நகையை இகழ்ந்தது. அவர் வேந்தரை நோக்கி முற்றுகையின் காரணத்தை வினவினர். அரணைக் கைப்பற்றுவதே தம் நோக்கம் என்று வேந்தர் குறித்தனர். கபிலர் அவர்தம் புல்லறிவை நோக்கி வெறுப்புற்றவராய்,

"அரணைக் கைப்பற்ற எண்ணம் எழுந்தது ஏன்?" என்று தெளிவுறக் கேட்டார். "அது எங்கள் விருப்பம்" என்று வேந்தர் விடையிறுத்தனர். கபிலர், "விருப்பம்! உங்கள் விருப்பம் நிறைவேறாதே!" என்று இரக்கத் தோடு கூறினார்.

மூவேந்தர் நகையாடினர். தூது வந்தவர் பொய்யு ரையா நாவினர் என்பதனைப் பொய்மை உருவினர் எவ் வாறு உணர்வர்? முற்றுகையால் உள்ளிருந்தோர் சோர்வு கண்டு, உடன்பாட்டுக்கு இசைவிக்கும் நோக்கத்தோடு கபிலர் வந்துள்ளார் என்றே அவர் கருதினர். "உடன் பாட்டுக்கு வருதல் என்ற எண்ணம் எமக்கில்லை. முற்றி லும் முற்றியிருந்து அரணினைப் பற்றுவதே எம் எண் ணம்" என்று கபிலரின் கருத்தினை அறிந்தவர்போல் முந் திக் கூறிக்கொண்டனர். மேதையர் என்று தம்மை மதித் துக் கூறிய பேதையரின் நிலை கண்டு கபிலர் இரங்கினார். *ஏதங் கொண்டு ஊதியம் போக விடல் என்றும் பேதை மையின் இயல்பே அன்றோ?

மூவேந்தர் தம் முடிவைத் தெரிவித்து முரசு முழக்கி னர். முரசொலி கேட்டதும் கபிலர் அறிவுரை கூற முற் பட்டார். '$பெருமை மிக்க முரசினையுடைய நீவிர் மூவேந்தரும் முற்றியிருப்பினும் பறம்பு பற்றுதற்கு எளி தாம் இரங்கத்தக்க நிலையினது ஆகுமோ? உழவர் உழுது பெற வேண்டாத நான்கு வகை விளைவுச் செல்வம் படைத் தது பறம்பு மலை. முதலாவது சிறிய இலையையுடைய

---

* குறள் 831.
$ புறம். 109

மூங்கிலின் நெல் விளையும்; இரண்டாவது இனிய சுளைகள் பொருந்திய பலாப்பழம் பழுத்துத் தொங்கும்; மூன்றுவது கொழுங்கொடிகளையுடைய வள்ளிக் கிழங்கு நிலத்தினுள் ஆழ்ந்து கிடக்கும்; நான்காவது தேனடைகள் முதிர்தலால் நீலநிறம் பெற்று அடை அழிந்து உறுதியான நெடிய குன்றத்தில் தேனைச் சொரிந்துகொண்டிருக்கும். ஆகவே உணவு வளங் குன்றிப் பறம்பு வீழ்தல் இல்லை. பகைவர் தோண்டலாகா அடியகலமும், குத்தலாகா உறுதியும், ஏறலாகா உயரமும், உள்ளோர் நின்று வினையாற்றுதற்கு உகந்த பரப்பும் உடைய பறம்புமலை வானிடத்தை நிகர்த்து விளங்கும். ஆதலின் அதனை முற்றிப் பற்றுதல் இயலாது. பறம்பின் சுனைகள் தொகையாலும் தெளிவாலும் வானத்து மீன்களை நிகர்ப்பன. ஆகவே உண்ணீர் இன்றி உமக்கு அடிபணியும் தீங்கு பறம்பினுக்கு உறுதல் இல்லை. ஆதலால், பறம்பு நாட்டின் மரந்தோறும் ஒவ்வொரு யானையைக் கட்டும் அளவுக்கு மிகுதியான யானைப் படையை உடையீராயினும், அந்நாட்டின் நிலப்பரப்பு முழுவதும் பரப்பிய தேர்ப்படையை உடையீராயினும் உங்கள் முயற்சியால் பறம்பு மலையைப் பற்றிக்கொள்ள மாட்டீர். முற்றுகை விடுத்து வாள்வலியாற் பெறுவோம் என எண்ணுவீராயின், அதனிலும் பாரி உங்களுக்குப் பறம்பினைத் தாரான்" என்று கபிலர் கூறிக்கொண்டிருந்தார்.

மூவேந்தருள் ஒருவன் இடைமறித்து "எவ்வகையினும் பறம்பினைப் பெற்றன்றி மீளோம்!" என்றுன். கபிலர் அவர்தம் இழிதகைமைக்கு இரங்கி, * "ஆயின், அதனைக்

* புறம். 109.

கைப்பற்றும் வகையை யான் அறிவேன்: வடித்து முறுக் கப்பட்ட யாழிற் பண் அமைத்து, நறுமணம் பொருந்தித் தழைத்த கூந்தலினை உடைய நும் உரிமை மகளிர் விறலியர் போன்று நும்மைத் தொடர்ந்து வர, ஆடியும் பாடியும் செல்வீராயின், நாட்டையுங் குன்றையும் பாரி நுமக்கு ஒருங்கே ஈவான்" என்று கூறினர். மானம் மறந்த மற வேந்தர் கபிலர் கூற்றில் அமைந்துள்ள இகழ்ச்சிக் குறிப்பை உணர்ந்திலர். போருக்கு உரிய காரணம் ஒன்றும் இன்றி, நாடு பெறுதல் ஒன்றே நோக்கமாயின் அதனை இரந்து பெறலாமே! ஆடிப் பாடிப் பெறலாகும் ஒன்றினைப் போராடிப் பெற முற்படுவது ஏன்? போரறம் மறந்து புரியும் செயலையும் பெருமையாகப் பாராட்டும் இவர் தம் எண்ணம் முற்றுப் பெற எத்தகைய இழிசெயலையும் எஞ்சாது நிகழ்த்துவர். தாம் பாணராய், தம் உரிமை மகளிர் விறலியராய், யாழ் வாசித்து ஆடிப்பாடி வருதலால் தம் எண்ணம் ஈடேறு மாயின் அதனையும் இவர் ஆற்ற முற்படுவர் போலுமே! என்ற எண்ணமெல்லாம் ஒன்றக் கபிலர் இவ்வாறு குறிப் பாற் கூறினர்.

கபிலரின் குறிப்பு மொழியை உணராத மூவேந்தர் தம் படைவலியாற் பறம்பினைப் பற்றுதல் உறுதி என்றனர். கபிலர் மூவேந்தரின் படையைத் தமது கண்ணால் அளந் தார்; பறம்பு மலையை நெடிது நேரம் நின்று நோக்கினர். சொல்லியும் அறியார் குறிப்பு நோக்கினை எவ்வாறு உணர்வர்? ஆகவே, கபிலர் மீண்டும் அவர்களை நோக்கி, $"போரிற் பகைவர் ஆற்றலைக் கடந்து எதிர்

---

$ புறம். 110.

நின்று கொல்லும் தானையினை உடைய மூவிரும் கூடிப் பொருதிடினும் பறம்பு கொள்ளற்கு அரியது. அவ்வாறே கொள்ளினும் நீவிர் எய்தலாகும் வளம் என்னை? பறம் பென்னும் குளிர்ந்த நன்னாடு முந்நூறு ஊர்களை உடையது. முந்நூறு ஊர்களையும் பரிசிலர் தம் உரிமையாகப் பெற்றுக் கொண்டனர். யாமும் பாரியும் எஞ்சியுள்ளேம்; குன்றும் இருக்கின்றது. எம்மையும் குன்றையுமே நீர் பெறுதல் கூடும். அவ்வாறு பெறுதற்கும் பாடிச் செல்லுதல் வேண்டுமேயன்றிப் போராடிச் செல்லுதல் பயன்படுவ தன்று" என்று கூறினர்.

மூவேந்தர் அதனைக் கேட்டும் எள்ளற் குறிப்புக் காட் டினர். "குன்றினைக் கொள்ளல் அரிதெனின் கபிலர் தூது வரக் காரணம் என்னையோ? முற்றுகையால் வாட்டம் எய்திய பாரி போரெதிர்ந்து வெல்லும் ஆற்றலின்றிக் கபில ரது சொல்லாற்றலால் வெல்ல எண்ணம் கொண்டான் போலும்! முற்றிய யாம் அரணைப் பற்றுவோம். பற்றுதல் எத்துணை எளிது என்பதனை இன்னுஞ் சில நாட்களில் நீர் எளிதின் உணர்வீர்" என்று வேந்தர் கபிலரை நோக்கிக் கூறினர். கபிலரின் வெறுப்பு அளவுக்கு மிஞ்சியது. ‡"ஆம்; எளிதேதான்! பேரிருங் குன்று பிறர் எளிதிற் பெறலாகும் இரங்கத் தக்க நிலையினதேதான்! யாருக்கு எளிது? அதனை வேலாற்றலால் வெல்லுதல் வேந்தர்க்கும் அரிது. ஆயின், இணை நீலமலர் போலும் மையுண்ட கண்ணினை உடைய கிணைமகள் அதனைப் பெறுதல் எளிது. அவளும் தன் அழகு காட்டிப் பெறுதல் இயலாது. தன் பாடற்

---

‡ புறம். 111.

சிறப்பால் அதனைப் பெறுதல் கூடும்” என்று கபிலர் இடித்துக் கூறினார். மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ? மூவேந்தரும் தமக்குள் மறைவாக ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

கபிலர் போதற் குறிப்புக் காட்டினார். மூவேந்தரும் தம் பேச்சை முடித்துத் திரும்பினர். அவருள் ஒருவன் கபிலரை நோக்கி, “புலவரே! பறம்பினை முற்றிக் கொள்ளுதல் பெரும் பயன் தருவதெனக் கருதி யாம் முற்றினேம் அல்லேம். சிற்றரசனாகிய பாரி பெரு வேந்தராம் எமக்குப் பணியாமை காரணமாகவே யாம் முற்றியிருந்தோம். பறம்பினைப் பற்றுதல் எளிது என்பதனை யாம் நன்கு அறிவேம். பற்றினால் பாரிக்கும் பறம்பிலுள்ளார்க்கும் பெருங்கேடு நிகழ்தல் உறுதி. இவ்வாறு பறம்பினுள் ஒடுங்கி வாழ்தல் ஒரு பெரு வீரனுக்கு அழகும் அன்று. ஆண்மை இருப்பின் அவன் வெளிப்பட்டு எம்மொடு பொருது வெற்றி விழைவானாக. இன்றேல் தம் மகளிர் இருவரையும் எம்முள் இருவருக்கும் மணம் புணர்த்து அமைதி நாடுவானாக. இதுவே எமது முடிவான மறுமொழி என அவனுக்குப் புகல்க” என்று கூறினன். கபிலர் அதனைக் கேட்டதும் எதிர் மொழி கூற விரும்பிலராய் அவ்விடம் விட்டு அகன்றார்.

மூவேந்தர் மணம் வேண்டினர் என்ற கருத்து புறநானூற்றில் தெளிவாகக் குறிக்கப் பெறவில்லை. மேலே காட்டிய கபிலர் பாடல்கள் அனைத்தும் “மகள் மறுத்தல்” என்ற துறைக்கு உரியனவாக அப் பாடல்களின் அடிக் குறிப்பு தெரிவிக்கின்றது. அதனைத் தவிர மூவேந்தர்

மகள் வேண்டியதாகவோ, அதனைப்பாரி மறுத்துக்கூறி யதாகவோ அப்பாடல்களில் ஒரு குறிப்பும் இல்லை. சங்க இலக்கியங்களுக்குத் தொல்காப்பியமே இலக்கண வரம் பாகும். தொல்காப்பியத்தில் "மகள் மறுத்தல்" என்ற துறைக்கே இடமில்லை. மேலும், "அளிதோ தானே பாரி யது பறம்பே" என்ற 109-ம் புறப்பாடலைத் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் *"அகத்தோன் செல்வங் கூறுதல்" என்ற துறைக்கு இலக்கியமாக அமைத்துள் ளார். அவரே "மகள் மறுத்தோன் மதிலை முற்றுதல் மகட்பாற் காஞ்சிக்கண் அடங்கும்" என்று அச்சூத்திர உரை முடிவிற் குறித்துள்ளார்.

தொல்காப்பியத்திற்கு மிகவும் பிற்பட்ட புறப் பொருள் வெண்பா மாலையில் மகள் மறுத்தல் நொச்சித் திணைக்கு உரிய துறையாகவும், மகட்பாற் காஞ்சி காஞ் சித் திணைக்கு உரிய துறையாகவும் கூறப்பட்டுள்ளன. $மகள் மறுத்தலாவது ஒரு வீரன் மணங்கோடற்குத் தம் மகளை வேண்டச் சிற்றரண்களில் உள்ளோர் மறுத்துச் சொல்லுதல்; ‡மகட்பாற் காஞ்சியாவது நின் மகளைத் தருக என்னும் அரசனோடு மாறுபட்டு நிற்றல். இவை இரண்டும் ஒன்று என்று கோடலே சாலும். புறநானூற் றுப் பாடல்களைத் தொகுத்தவரோ, அவற்றிற்கு உரை வகுத்தவரோ அவற்றிற்குப் பிற்கால மரபினையொட்டித்திணை துறை அமைத்திருத்தல் வேண்டும் என்பது இதினின்று தெளிவாகின்றது. அவ்வாறு அமைத்தவர் அகத்தோன்

---

* தொல். புறத். 68 உரை
$ பு. வெ. 94
‡ பு. வெ. 84

செல்வங் கூறுதல் என்ற துறைக்கு இயைந்த பாடலே மகள் மறுத்தல் என்ற துறைக்கு உரியதாகக் காட்டியது ஏன்? புறநானூற்றுல் தொடர்புபட்டுத் தோன்றுத பாரியின் வரலாறு அவர் காலத்துச் செவிச் செய்தியாகத் தமிழகத்தில் நிலவியிருக்க வேண்டும். அவ்வாறு நிலவிய செய்திக்கும் பாடலுக்கும் இடையே அறுந்து நின்ற தொடர்பை நிரப்பிக் காட்டும் நோக்கத்தோடு, அவர் இப் பாடல்களுக்கு மகள் மறுத்தல் என்ற துறைப் பெயர் அமைத் திருக்க வேண்டும். மகள் மறுத்தற் செய்தி முற்றுகைக்கு முந்தியதாயின் போர் விலக்க முயன்ற கபிலர் அதனை எடுத்துக் கூறியிருப்பார் அன்றே? அவர் அவ்வாறு கூருமையின், மகள் வேண்டலும் மறுத்தலும் பின்னர் நிகழ்ந்தன என்று கோடல் பொருந்துவதாம்.

மூவேந்தர் மணம் வேண்டிய காரணம் யாது? பாரி யின் பண்பு மேம்பாட்டை உணர்ந்தோ, பாரி மகளிரின் உருவழகையும் அறிவழகையும் அறிந்தோ அவர் மணம் வேண்டினர் என்று கொள்ளுதற்கில்லை. அவ்வாருயின் போரின்றியே மணம் வேட்டுத் தூது விடுத்திருக்கலாம் அன்றே? அவ்வாறே ஒருவன் மணம் வேண்டியிருப்பின் மூவர் கூடி முற்றுதல் நேருமோ? மூவரும் வேண்டி யிருப்பின் இரு மகளிர்க்காக மூவர் ஒன்றுகூடிப் பொருதல் யாங்ஙனம் இயலும்? முற்றிய பின்னரும் மணக்குறிப்பு அவர்க்கு இருந்திருப்பின், மூவருள் எவ் விருவர் மகளிரைப் பெறுவது, எவன் பெருதொழிவது என்ற முடிவினை அவர் எவ்வாறு எளிதின் எய்துதல் கூடும்? இவற்றைக் கூர்ந்து நோக்குழி மணம் கொள்ளல் அவர் கருத்தன்று என்பது தெள்ளிதிற் புலனுகிறது.

பறம்பினை முற்றிப் பற்றுதல் இயலாது என்பதை மூவேந்தர் முற்ற உணர்ந்தனர். அரண் பெருமையாற் பாரியும் வெளிப்பட்டுப் பொருவானாய்த் தோன்றவில்லை. அவன் வெளிப்பட்டுப் பொரின் தம் படை வலியால் அவனை வென்று விடலாம் என்ற எண்ணம் வேந்தர்க்கு இருந்தது. அடைமதிற் பட்டிருக்கும் பாரியை வெளிக் கொணர வழி யாது? பாரியின் மான உணர்ச்சியைத் தூண்டி விடுதல் வேண்டும்; அவனது ஆறிய சினத்தைக் கிள்ளி விடுதல் வேண்டும். முற்றிய வேந்தர் தன் மகளிரை மணம் வேண்டினர் என்று கூறக் கேட்பின் பாரி சினந்தெழுந்து போருக்கு வருவான் என்று அவர் நம்பினர். ஆகவே, போர் நிறுத்தத்திற்குப் பாரி தன் மகளிரைத் தம்முள் இருவருக்கு மணம் புணர்வித்தலை விதியாகக் குறிப்பிட்டனர்.

சென்ற கபிலர் நிகழ்ந்தவற்றைப் படிப்படியாகக் கூறிக்கொண்டிருந்தார். பாரியும் அமைதியாகப் புன்முறுவல் தவழக் கேட்டுக்கொண்டிருந்தான். இறுதிப் பகுதியைக் கேட்டதும் அவன் சீறிச் சினந்து எழுந்தான். அதனைக்கண்டு கபிலர் வியப்புறவும் இல்லை; தடுக்க முற்படவும் இல்லை. பறம்பினுள் போர் முரசு ஒலித்தது. புற்றிலிருந்து ஈயல் கிளம்புவது போன்று பறம்பு வீரர் தத்தம் படைகளுடன் வந்து குழுமினர். புறத்தே இருந்த வேந்தரும் தம் வஞ்சக முயற்சியின் வெற்றியினை அறிந்து எதிர்முரசு முழக்கி அணிவகுத்து அமருக்கு ஆயத்தம் ஆயினர். வந்து குழுமிய வீரரை அமர்ந்து நோக்கி அமர்க் காரணத்தைப் பாரி விளக்கினான். அறிவிற் சிறந்த மகளிரை அறமும் ஆற்றலும் அற்ற மூவேந்தர்

போர்முகத்து மணம் வேண்டினர் என்று அறிந்ததும் பறம்பு வீரர் பகைத்துச் சினந்தனர்; போர், போர் என்று முழங்கினர்; தோள் தட்டி ஆர்த்தனர்; வெடிபடச் சிரித்தனர். பாரி தன் மகளிரை நோக்கினுன்; கபிலரை நோக்கினுன்; பின்னர் வீரரை நோக்கினுன்; உருவிய வாளுடன் வீரர் வெள்ளம் பின் தொடரப் பரிமீது இவர்ந்து அரண் வாயிலே நோக்கி விரைந்தான்.

அடைத்திருந்த அரண்வாயில் திறந்தது. புறத்திருந்த பகைவேந்தர் படையுடன் ஆர்த்தெழுந்து வாயிலேக் குறுகினர். அகத்திருந்து வந்த வீரரின் தொகையாலும் திறத்தாலும் வாயிலேக் குறுகுதல் அரிது என்று பகைவர் விரைவின் உணர்ந்தனர். அரணிலும் வாயிலிலும் அமைந்திருந்த எந்திரப் பொறிகள் பகைவர் முன்னேற்றத்தைத் தடுத்து அவர்க்கு ஊறு பலவும் விளேத்தன. ஆகவே, அவர் பின் வாங்கி நின்று போர் புரிந்தனர். பாரியின் வீரர் பகை வீரரைப் படிப்படியாக அரணுக்குச் சேய்மையிற் கொண்டு சென்று அரிய வாட்போர் ஆற்றினர். தம்மிடையே பரி ஊர்ந்து நின்ற பாரியை நோக்குந்தோறும் பறம்பு வீரர் மான உணர்ச்சி மீதூர மறப்போர் புரிந்தனர். நெருங்கி நின்று வாளமர் ஆற்றிய பறம்பு வீரரால் எய்திய கேட்டினும் அரணில் மறைந்து நின்று பொறிகளே இயக்கியும் அம்பு மழை பொழிந்தும் அருஞ்சமர் ஆற்றிய வீரரால் எதிரிப் படையினர் எண்ணிலா இன்னலுற்றனர். மூவர் வேந்தரும் தத்தம் படையுடன் முன்னேறச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணுயின. பிணத் திரளே மிதித்தேறிப் பறம்பு வீரர் முன்னேறிக் கொண்டிருந்தனர். எளி

தாக எண்ணிய பறம்புப் போர் மூவேந்தரையும் மருளச் செய்தது. எஞ்சிய வீரரைக்கொண்டு வெற்றி பெறுதல் இயலாது என்பது உறுதியாயிற்று. உயிர் பிழைத்து ஓடுவதற்கும் வழியின்றிச் சிறைப்படுதலாம் சிறுமையும் தமக்கு நேருமோ என்று மூவேந்தரும் தனித்தனியே அஞ்சினர். அவரது கூட்டமைப்பு குலேந்தது. முதுகு காட்டி ஓடுதலில் அவர் மூவரும் ஒருவரின் ஒருவர் முந்திக் கொண்டனர்.

பாரி புறக்கொடா வீரன். அவன் தன் வீரருடன் சென்று ஏந்துகோட்டு யானே வேந்தரை வாளமரில் உழக்கிக் கடந்து ஓட்டிஞன். அவர் ஓடுங்கால் எழுந்த கழலொலி கேட்டான். தனக்கு உரிய நாட்டின் எல்லேயை அவர் தாண்டிச் செல்லும்வரையில் நின்று நோக்கிஞன். படை கொடு வந்து பகைமை விளேத்த பதடிகளேத் தொடர்ந்து சென்று, அவர்தம் முடித்தலே கவர்ந்துவரல் வேண்டும் என்று வீரர் துடித்தனர். பாரி அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக் கழிதறுகண்மையன்; ஆற்றல் காரணமாக அயல் நாடுகளே வென்று அடிப்படுத்தல் வேண்டும் என்று விரும்பாதவன்; பேதையர் பிழையைப் பெரிதென மதியாது, உயிர்கட்கு நேரலாம் உறுதுயர் நினேந்து உள்ளம் உருகுபவன். அவன் இந்த வேண்டாப் போரில் மாய்ந்த வீரரைக் கண்டு விழிநீர் பெருக்கிஞன். வேந்தர் பிழைக்காக மாந்தரை வருத்தும் மறப்போரை அவன் விரும்பவில்லே. பொங்கி எழுந்த வீரரைத் தன் இன்னுரையாற் சினம் தணிவித்து, வெற்றி முரசு வெடிபட ஒலிக்கப் பாரியும் வீரரும் பறம்பினுள் புகுந்தனர்.

# 8. கொடையும் கொலையும்

அரசர் இயற்கை அறிவோடு கல்வி கேள்விகளிலும் வல்லவராய் இருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் வகுத்தார். அரசரது அறியாமையான் எய்தும் பிழை அவர் காலத்தோடு முடிவுருமல், பின்னின்றும் மாந்தரை உடற்றும் தன்மையது. இதனை உணர்ந்தே பண்டை மன்னர் அறிஞரைத் தம் அவையில் வைத்து ஆதரித்துப் போற்றினர். அறிஞரும் அரசர் நன்னெறிச் செல்வுழி ஆதரவு காட்டியும் தீநெறிச் செல்லுங்கால் இடித்துரைத்தும் நலம் புரிந்தனர். அறிவும் அறிவுறுத்துவாரும் இல்லாத அரசன் ஆளும் நாடு காடாவதும் காட்டினுங் கேடாவதும் ஒருதலை. இஃது ஆளுங் குழுவினர் அனைவர்க்கும் பொருந்தும். ஈண்டு நாம் ஆயும் மூவேந்தர் அறிவுப் பயனும் அறிவிப்பார் பயனும் அணுகாதவர். ஆதலின் அவர் தம் செயல் நெறிப்பட இருத்தல் முயற்கொம்பு.

கொலையைக் குற்றமெனக் கருதாது அதனிற் பயின்ற ஒருவன் இருக்கிருன். கத்தியை அறியாத காலம் அது என்று வைத்துக்கொள்வோம். ஒருவன் புதிதாக ஒரு கத்தியினைச் செய்து அக்கொலை மனத்தானிடம் காட்டி, ''இது ஒரு கத்தி. இதனைக் கொண்டு காய்கறிகள் அரியலாம். ஒருவனது கழுத்தையும் அறுக்கலாம்'' என்று

கூறுகிறான். கொலைமனத்தான் கத்தியின் முதற் பயனைக் கருத்திற் கொள்வானா, இரண்டாம் பயனைக் கொள்வானா? அறிவற்ற இவ் வேந்தருக்குக் கபிலர் கூறிய அறிவுரையும் இத்தகைய பயனையே உதவியது. பாரியைப் போரில் வெல்லுதல் இயலாது என்பதனை இவ் வேந்தர் நேரிற் கண்டுகொண்டனர். பொறாமை காரணமாகப் பொருந் தாப் போர் தொடுத்து உள்ள மானத்தையும் போக்கிக் கொண்டனர். மாண்பு இறந்த மான உணர்ச்சி அவர் மனத்தே குடிகொண்டது. தம்மைத் தலையிறங்கச் செய்தவனை எத்தகைய இழிசெயலாலும் பழி முடித்தல் இழந்த மானத்தைப் பெறுதற்கு ஏற்ற வழி என அவர் எண்ணினர்.

பாரியைக் கொல்லுதற்குப் பகைவர் பலப்பல திட்டங் களை ஆராய்ந்தனர். அவையெல்லாம் பயன் விளைத்தல் அரிதெனத் தோன்றியது. "நீவிர் பாணராய் நும் உரிமை மகளிர் விறலியராய் ஆடியும் பாடியும் சென்றீ ராயின் பாரியையும் பறம்பினையும் பெறலாம்" என்று கபிலர் குறித்தது அவர்தம் நினைவிற்கு வந்தது. அவ்வாறு செய்தலால் தமக்கு நேரலாகும் இழிவினை அவர்கள் எண்ணவில்லை. எண்ணிய எண்ணம் எவ்வகையிலும் கை கூடுதல் போதும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. *"உயர்குடிப் பிறந்த ஒருவன் கண்ணே ஈரமின்மை தோன்றுமாயின், அவன் அக்குடியிற் பிறந்தவனேயோ என்று உலகம் ஐயுறும்" என்று வள்ளுவர் கொடுமொழிக ளாற் குறிக்கின்றார். பழங்குடியிற் பிறந்த இப் பண்பி

---

*குறள். 958.

லாரை என்னென்று கூறுவது? ‡ "நாணம் அழிக்குஞ் செயலால் ஞாலமே கிடைப்பினும் அதனைப் பெற ஒருப் படாது, ஞாலம் இழந்தும் நாணம் பேணுவர் மேலோர்" என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். நாணமற்ற இம் மூவேந்தர் ஞாலம் பெறுதல் போன்ற பயனுங் கருதாமல் பழிமுடிக்கத் துணிந்து நிற்கும் பான்மையை என்னென் பது? $ சான்றாண்மையின் தூண்களாய் விளங்கும் அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் பண்பு களுள் ஒன்றும் எய்தப் பெறாத இவர் சான்றோர் மரபில் தோன்றியது எவ்வாறோ? பாணராய்ப் பாடிச் சென்று பறம்பினையும் பாரியையும் பெறுதல் வேண்டும் என்று மூவேந்தரும் முடிவு கட்டினர்.

கபிலரும் பாரியும் மகளிரும் பறம்பின்கண் ஒரு பூங் காவில் உலாவிக் கொண்டிருந்தனர். மூவேந்தர் முற்றிய தும் முதுகு காட்டியதும் பழங்கதைகள் ஆகிவிட்டன. நாட்டில் நல்லறிவு பெருக்கவும் கலை வளர்க்கவும் திட்டங் கள் அமைத்துத் திரம்பட நடத்தும் பொறுப்பைப் பாரி கபிலருக்கு வழங்கினான். பாரி மகளிர் கபிலரது கலைப் பணியில் துணை புரிய முன் வந்தனர். பாரி அவர்கட்கு வேண்டிய பொருளுதவியும் பிற வசதிகளும் வழங்குவ தாக வாக்களித்தான். நால்வரும் சில திட்டங்கள் குறித் துத் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். இவ்வாறு ஒவ்வொரு திட்டமாக நன்கு ஆராய்ந்து, அதனைச் செய லிற் கொணர வழிவகைகள் வகுத்துக்கொண்டிருந்தனர்.

‡ குறள். 1016.
$ குறள். 982.

அப்பொழுது அரண்மனைக் காவலருள் ஒருவன் வந்து பாரியை வணங்கி நின்றான். பாரி செய்தியை வினவ, அவன் பாணர் மூவர் பாரியைத் தனிமையிற் காணும் விருப்பினராய் அரண்மனை வாயிற்கண் வந்து நின்றனர் என்றான். பாணர்க்கு வேண்டுவன நனிநல்கி விரைவின் மீள்வதாகக் கூறிப் பாரி அரண்மனை நோக்கிச் சென்றான்.

தன் முன் நின்ற பாணரைப் பாரி அமர்ந்து நோக்கிப் புன்னகை புரிந்தான். பாணர் அவனை வணங்கிய கைகள் விதிர்த்தன. அவர்தம் இதழில் தோன்றிய புன்னகை மங்கி மடிந்தது. பசிக்கொடுமையின் தோற்றங்கள் அவை என்று கருதிப் பாரி உள்ளம் நைந்தான். உள்ளக்கொடுமையின் உதறல்கள் அவை என்று அவன் எங்ஙனம் உணரக்கூடும்? "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று பாரி உருக்கமாய்க் கேட்டான். பாணர் மூவரும் திருடர் போன்று விழித்தனர். அவரை அழைத்துச் சென்று இன்சுவை உணவும் வடித்த தேறலும் வழங்குமாறு பாரி காவலரை ஏவினான். அப்பொழுது பாணருள் ஒருவன் வாய்திறந்தான். "எங்கள் கலைநலங் கண்டு யாம் வேண்டும் பரிசிலை எஞ்சாது ஈதல் வேண்டும்" என்று குழறு குரலில் அவன் கூறினான். ஏனையர் இருவரும் தம் தலைகளை அசைத்து இசைவு சுட்டினர். தன் கொடைமையைப் பிறர் ஐயுறுதற்கும் இடமாயிற்றே என்று பாரி வருந்தினான். அவரையும் அழைத்துக் கொண்டு பாரி தன் அவையை அடைந்தான்.

பாணர் வணர் கோட்டுச் சீறியாழைத் தடவி இசை எழுப்பினர். இசையிற் பயில்வும் மன இசைவும் ஒன்று

படாமையின் அவர்தம் இசை வசையாகவே முடிந்தது. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் போன்று இசையிலார் கையில் யாழ் தன் இனிமையை இழந்தது. கலையுணர்வு மட்டுமே உடையனுய்ப் பாரி இருந்திருப்பின், அவரை வெறுப்பதுமன்றி ஒறுக்கவும் முற்பட்டிருப்பான். அவனது கொடையுணர்வு அவர்தம் மடமையைப் பொறுக்கத் தூண்டியது. ''பாடல் நலம் கண்டேம்; இனி ஆடல் நலம் காண்பாம்'' என்று பாரி கூறினுன். அவரும் தம் ஆடல் நலம் காட்ட முற்பட்டனர். அதுவும் பேயாட்டமாய் முடிந்தது.

*''நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணேம் என்ன ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே'' என்று கபிலர்

குறித்தது பொய்க்குமோ? ''அவர் தம்மிடம் உள்ளன காட்டினர்; நாம் அவர்க்கு நம்மிடம் உள்ளன கொடுத்தல் வேண்டும். அது நம் கடமை'' என்று பாரி கருதினுன். தமக்கு வேண்டிய பரிசிலைக் குறிக்குமாறு பாரி பாணர்க்குக் கூறினுன்.

பாணர் மூவரும் ஒருவரை ஒருவர் நோக்கினர். பாரி மூவரையும் கூர்ந்து நோக்கினுன். பாணர்க்கு இயல்பாக உரிய உடலமைப்பும் இயல்புகளும் அவரிடம் காணப்படவில்லை. வறுமையில் உழன்று வாடிய உடலம் அவர்க்கில்லை. மழை பனி வெயிலால் மங்கிய மேனி அவர்க்

*புறம். 106.

கில்லை. கல் முள் மிதித்துக் காடு மேடாய் அலைந்து திரிந்த கால்கள் அவர்க்கில்லை. சிக்குப் பிடித்துச் சீர் குலைந்த சிகைகள் அவர்க்கில்லை. பாட்டும் ஆட்டும் பாணர் அவரெனக் கோட ற்கில்லை. "யார் இவர் மூவர்?" என்று பாரி சிறிது சிந்தித்தான். "முற்றிய திருவின் மூவேந்தரோ இவர்?" என்று அவன் ஐயுற்றான். கூர்ந்து நோக்க நோக்க அவரே இவர் என்ற எண்ணம் உறுதி யாயிற்று. இரந்தவர் எவரெனினும் ஈதலே தன் கடன் என்று பாரி குறித்தான். அவரை நோக்கி, "தயக்கம் வேண்டாம்; என்னால் இயலுவது எதனை வேண்டினும் எஞ்சாது ஈவேன்" என்று கூறினான். வஞ்சகர், "பறம்பு மலையையும் நின்னையுமே யாம் பரிசிலாக வேண்டினோம்" என்றனர்.

பாரியின் உள்ளத்திற் பாரம் நீங்கிய மகிழ்ச்சி பொங்கி நின்றது. தன் மகளிரையே பரிசிலாகப் பாணர் உருவில் வந்த வீணர் வேண்டின் என் செய்வது என்ற தயக்கம் நீங்கியது. "பறம்பு மலையையும் என்னையுமே பரிசிலாக ஈந்தேன்" என்று பாரி மகிழ்ந்து கூறினான். "பாரி! யாம் மூவேந்தர்" என்று மூவேந்தர் கூறினர். "பெருங்குடி வேந் தரே! யான் முன்னரே அதனை அறிந்து கொண்டேன். இப்பொழுது என்ன செய்யவேண்டும்?" என்று பாரி கேட்டான். வேந்தருள் ஒருவன் "அண்மையில் எமது படைகள் மறைந்து தங்கியுள்ளன. அவற்றுடன் யாம் வந்து உறுகண் ஒன்றும் இன்றிப் பறம்பின் உரிமை பெற உதவ வேண்டும்" என்று குறிப்பிட்டான். பாரி தன் படைத்தலைவனை வருவித்தான்; முரசொலி எழுப்ப ஏவி னான். பறம்பினுள் முரசொலி எழுந்தது, பறம்பு வீரர்

அனைவரும் நொடியில் வந்து திரண்டனர். கபிலரும் பாரி மகளிருடன் அங்கு வந்து சேர்ந்தார்.

திரண்டு நின்ற மக்கட் கூட்டத்தைப் பாரி அமர்ந்து நோக்கினான். "நாட்டு மக்களே! நலஞ் சான்ற வீரர்களே! பறம்புமலை பாரில் அடைந்துள்ள பெருஞ் சிறப்பைத் தெள்ளிதின் உணரும் திருப்பணி ஒன்றினை நிறைவேற்றும் பொறுப்பு என்பால் சார்ந்தது குறித்துப் பெருமகிழ்வு கொள்கிறேன். இங்கு நிற்கும் இவரை யாரெனக் கருதுகின்றீர்? முடியுடை மூவேந்தர் தம் அடி நோவ நடந்து வந்து இப் பறம்பினை இரந்து பெற்றாரெனின் இதன் பெருமையை என்னென்று கூறுவது? படைக்கு மடங்காப் பறம்பு கொடைக்கு மடங்கியது என்ற புகழ் என்றும் நிலைப்பதன்றோ? அதனைக் கொடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எத்துணைப் பெரும் பேறு? நல்லோரே! இவ் வேந்தர் பறம்பினை வேண்டினர்; என்னையும் வேண்டினர். உங்கள் அன்பினை நம்பி, உங்கள் இசைவைக் கேளாமல், என்னையும் பறம்பையும் இவர்க்கு யான் ஈந்துவிட்டேன். அன்பரே! இரவலர் பறம்பில் இன்னல் உறுதல் இயல்வதோ? என்னையும் பறம்பையும் ஈந்தபோதே என்பால் நுமக்குள்ள உரிமையையும் ஒருங்கே ஈந்துள்ளேன். இனி, இதுவரையில் எனக்குச் செலுத்திய அன்பும் பணிவும் நீவிர் இவர்க்குச் செலுத்துதல் வேண்டும். அஃது உங்கள் கடமை; என் விருப்பம்" என்று பாரி கூறினான்.

வெறுப்பும் முறுமுறுப்பும் மக்களிடையே தோன்றின. மூவேந்தர் நெஞ்சம் நடுங்கினர். பாரி மக்கட் கூட்

டத்தை நோக்கி, ''அன்பரே! அவ்வாருயின் பாரி உங்கள் உள்ளங் கவர்ந்த பண்பினனு என்பதை ஐயுறவேண்டிய தாகின்றது அன்புள்ளம் எதனை ஏவினும் ஏற்கத் தயங் காது. நுமது முறுமுறுப்பு என் கூற்றின் மீது நீவிர் கொண்டுள்ள வெறுப்பினை விளக்குவதாகின்றது. ஆயின், பாரி கொடையிற் குறைபட்டான் என்னும் இழுக்கு என்றும் நின்று நிலவுவதாகும். நன் மக்களே! இக் குறை எனக்கு நேர இசைவீரோ?'' என்று கூறிக் கூர்ந்து நோக்கினுன். அங்கு அமைதி நிலவியது. ''அன்பரே உங்கள் அமைதி எனக்கு ஆறுதல் தந்தது. பாரிக்கு என்றும் துணைநின்ற பண்பட்ட மக்கள் நீங்கள். அத்தகைய பண்பாடு இவ் வேந்தர் ஆட்சியிலும் உங்க ளிடம் விளங்கவேண்டும். அதனை உங்கள் அமைதி தெரி விக்கும்'' என்று பாரி மீண்டும் கூறினுன். கூட்டத்தில் அமைதி குடிகொண்டது. பாரி மூவேந்தரை நோக்கி, ''வேந்தரே! நீவிர் அஞ்சுதற்கு ஏதும் இல்லை. பறம்பு மக்கள் தங்கள் பண்பில் தலைப்பிரிதல் இல்லை. நும் படை யுடன் வந்து பறம்பினையும் என்னையும் பெற்று மகிழலாம்'' என்று கூறினுன். அவரும் பாணர் கோலத்திற் பறம்பினை நீங்கித் தம் படை இருந்த இடத்துக்கு ஏகினர்.

பறம்பு மக்களுடன் பாரி தனியாய் நின்ருன். மக்கள் விம்மி விம்மிப் புலம்பினர். ''ஆருயிரின் தாயே! அறத் தின் பெருந்தவமே! பேரருளின் கண்ணே! பெருமானே! பாரிடத்தை யார் காக்க? போவது நீ யாங்கு?'' என்று தம் கண்ணில் நீர் வார்த்துக் கால் கழுவா நின்ருர். பாரி யின் கண்களில் நீர் பெருகியது. பாரி மகளிர் அவனை இறுகத் தழுவி வீறிட்டுப் புலம்பினர். கபிலர் பொருமிப்

பொருமி அழுதார். பாரியும் தாங்க இயலாது தவித்து அழுதான். "நல்லன்பரே! அன்பிலார் எல்லாம் தமக்கென உரிமை பாராட்டுவர்; அன்புடையார் கண்ணை வேண்டினும், காக்கின்ற மண்ணை வேண்டினும், பொன்னை வேண்டினும், தம்மையே வேண்டினும் ஈவர் அன்றோ? யானும் அதுவே செய்தேன். என்னைத் தடுப்பீரோ? என் அன்பை மறப்பீரோ?" என்று பாரி புலம்பினான். மக்களிடையே ஒரு முதியவர், "வள்ளலே! கொடியவரின் கொடுமை தழைக்க உதவுமாயின் அக்கொடை தகுமோ? நஞ்சனைய வஞ்சகரை நன்கு அறிந்தும் எம்மை அவரிடையே இட்டுச் செல்லுதல் அழகோ? கயவரின் காவலிலே இக் காரிகையரையும் இட்டுச் செல்வாயோ?" என்று இடித்துக் கூறினர். பாரி அவரை நோக்கி, "ஐயா! கொடியவர், வஞ்சகர். கயவர் என்று மூவேந்தரைக் குறித்தீர். அவர் நல்லவர் என்று நான் கருதுதற்கு இது ஒன்றே போதும்: என் ஆருயிர் மகளிரை அவர் மணம் வேண்டின் என் செய்வது என்று நான் திகைத்திருந்தேன். மூவேந்தர் அவரை மணம் வேண்டாதிருந்த ஒன்றே அவர் என்பாற் பேரன்பினர் என்பதனை நிறுவும். கபிலர் இருக்கின்றார் என் மகளிரைக் காக்க, இறைவன் இருக்கின்றான் யாவரையும் காக்க. என் எண்ணத்திற்கு இசையுங்கள். என் கொடையுள்ளத்திற்குத் தடை விதியாதீர்கள். அனைவர்க்கும் என் அன்பு; வணக்கம்:" என்று கூறி முடித்தான்.

மூவேந்தர் முரசு முழக்கிப் பறம்பினுட் புகுந்தனர். பாரி அவரைப் பணிவுடன் வரவேற்றான். மக்களும் அவன் குறிப்பறிந்து அமைதியாய் நின்றனர். பாரி அனை

வர்க்கும் வணக்கம் செலுத்தினுன்; தன் உடைவாளை எடுத்து வேந்தருக்கு வழங்கினுன்; அவர் முன்னிலையில் கைகட்டித் தன்னையுங் கையளித்து நின்ருன். நெஞ்சில் இரக்கமற்ற வஞ்சகரின் கொடுஞ்செயலை என்னென்று கூறுவது? அழுக்காறு என்னும் கொலைக் குழந்தை முழு வளர்ச்சி பெற்று அவர்தம் உள்ளத்தில் உறைந்ததோ? பாரெல்லாம் புகழ் படைத்த பண்டைத் தமிழ் வேந்தரின் மரபில் உதித்தவரா இவர்? உயிர் விடுத்துப் பழி துடைத்தோன் மரபினர் இவர் என்று யார் கருதுதல் கூடும்? வஞ்சகப் பாண்டியன் வாளை ஓங்கிப் பாரியின் நெஞ்சைப் பிளந்தான். தாமும் கொலைத் தொழிலில் அவனினும் மிஞ்சியவரே என்று காட்டுங் குறிப்பாய்ச் சேரனும் சோழனும் தம் கைவாளால் பாரியை வெட்டினர். பாரி இக் கொடுமை கண்டு திகைத்தான். ஆயினும் அவன் தடுப்பும் எதிர்ப்பும் காட்டாது நிமிர்ந்த நெஞ்சினனுய் நின்ருன். மக்கள் குமுறினர். வஞ்சகரைத் தாக்கவும் சிலர் முற்பட்டனர். அவரைத் தடுக்கப் பாரி அப் பக்கமாய் விரைந்தான். ஒழுகி வடிந்த குருதியின் மிகையாலும் எதிர்ப்புக் கண்டு எழுந்த அதிர்ச்சியாலும் பாரி தளர்ந்து தரையிற் சாய்ந்தான்.

தந்தையின் நெஞ்சில் வாள் பாய்ந்ததும் நிலைமறந்து நின்ற பாரி மகளிர் அவன் சாய்ந்ததும் அருகில் ஓடி வந்து, அவனைத் தழுவித் தழுவிக் குழல் விரிய விழிநீர் பெருக அழுதனர். கபிலரும் அருகில் அமர்ந்து அழுதார். எதிரிப் படையினரும் இரங்கி அழுதனரென்ருல் பறம்பு மக்களைப் பற்றிப் பகரவும் வேண்டுமா? மூவேந்தர் தலை கவிழ்ந்தனர். உள்ளத்தின் ஒறுப்பினுல் உந்தப்பெற்ருே,

கருதிய கருமம் முடிந்தது என்ற பேய்மனப் பெருமிதத்தாலோ அவ்விடம் நிற்கலாற்றாராய்க் கொடுவேந்தர் அருகிலிருந்த அறையொன்றினுள் நுழைந்து கதவைத் தாழிட்டனர். கோவென்று அலறிய குரல் அவை மண்டபம் முழுதும் நிறைந்தது. பாரியின் இதழ்கள் அசைந்தன. ஒலியே எழவில்லை. கபிலர் அருளாளனை அகம் நைந்து நோக்கினார். "பேரருளாள! உனக்கு முன்னர் உயிர் வழங்கும் உயர் நட்புப் பெறாத யான் உன் உயிர் பிரிந்த பின்னர் உடலம் சுமந்து வாழேன் வடக்கிருந்து உயிர் வழங்கும் கடை நட்பினர் தொகுதியிலேனும் யான் சேர்வேனாக" என்று அவர் விம்மி விம்மிக் கூறினார். பாரி தன் மகளிரைத் தளர்ந்த கைகளால் தடவினான். அவன் வாய் பேச்சொழிந்தது. அவன் கபிலரை அமர்ந்து நோக்கினான்; வடக்கிருத்தலைத் தன் கைக் குறிப்பால் விலக்கியும், தன் மகளிரை அவர்க்குச் சுட்டிப் பாதுகாப்புக் குறிப்பித்தும் கண்ணீர் துளித்தான். கபிலர் இசைவு தெரிவித்தார். பாரி ஒரு தடவை சுற்றிலும் நோக்கினான். அவன் கண்கள் மூடின. ஆவி நீங்கிய உடல் அமைதியான காட்சி வழங்கியது.

பறம்பு முழுதும் படுதுயர் சூழ்ந்தது. பார்த்தவரும் கேட்டவரும் பதைத்துத் திகைத்தனர். கொடைக்கே கறை தீட்டிய கயவரை அனைவரும் வசைமொழிகளால் வைதனர். அறவோர் அகம் குலைந்தனர். இட்டன இட்டவாறு இருந்தன. செயலற்றவராய் நிலையற்றவராய் மாந்தர் விம்மியும் தேம்பியும் அலைந்தனர். பாரி மகளிர் இப் பேரிடியை எவ்வாறு தாங்கினர்? அவர் கற்ற கல்வியும் கபிலர் அறிவுரையும் அவருக்குச் சிறிது ஆறுதல் தந்

தன. எதிரி வீரருக்கும் பறம்பு வீரருக்கும் இடையே சிறிய கைகலப்புகளும் ஏற்பட்டன. ஆயினும் பாரியின் அகக் குறிப்பை வாய் மொழியாற் கேட்டு உணர்ந்த பறம்பு வீரர் தம் அகத்துணர்ச்சியைப் பாரியின் மனக் குறிப்புக்குக் கட்டுப்படுத்தி வாளா இருந்தனர். அவர்தம் உள்ளக் குமுறல் ஒடுங்குமாறில்லை.

பாரியின் இறுதிக் கடன்கள் நிறைவேறின. மூவேந்தர் அதற்கு இசைவு தெரிவித்தும் வெளிவராது பதுங்கியே உறைந்தனர். பறம்பு மிகச் சிறந்ததே. ஆயினும் பாரி இல்லாத பறம்பு கபிலருக்குப் பறம்பாகவே தோன்றவில்லை. எங்கு நோக்கினும் அப்பேரருளாளனின் உருவமும் கலந்தே அவருக்குக் காட்சி அளித்தது. அவரது நைந்த உள்ளத்தை அக்காட்சி மிகவும் நலியச் செய்தது. தந்தையை இழந்த மகளிரின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும்? கபிலர் பறம்பினை விடுக்க மனங்கொண்டார்; பாரி மகளிரையும் அதற்கு இசைவித்தார்; வேந்தரை நினைக்கவும் அவர் வெறுப்புற்றார்; பறம்பு மக்கள் அறியின் தடுப்பரே என்று அஞ்சினர். ஆகவே, தம் உளக் கருத்தை ஒரு சில பெரியவர்க்கு மறைவாக உணர்த்தி, மகளிரையும் உடன்கொண்டு கபிலர் பறம்பினின்று வெளியேறினர்.

# 9. கபிலர் துயரம்

கன்றினை இழந்த சேதா கதறுதல் காண்கின்றோம். குஞ்சினை இழந்த கோழி கொதித்துக் கொக்கரித்தல் காண்கின்றோம். விலங்கு பறவை இனங்கள் தம் குழவி குஞ்சுகளை இழந்த துயரத்தை விரைவில் மறந்து விடுகின்றன. தாம் அன்பினைப் பதித்திருந்த பொருள்கள் அகன்ற பின்னர், அவற்றை எண்ணி எண்ணி இரங்குதல் ஐயறிவுயிர்களிடம் நீடித்து அமைவதில்லை. ஆறறிவு படைத்த மனிதன் அப்படியா? இழந்த அன்புப் பொருளின் எண்ணம் அவனிடம் படிப்படியாக மங்குமேனும், முற்றிலும் மறைந்து மாறுவது என்றும் இல்லை. உடன் பிறப்பு அன்பும் உயிர்க்குயிர் நட்பும் மனிதப் படைப்பின் உயர்வினை விளக்கும் அறிகுறிகள். ஆழப் பதிந்த அன்பும் நட்பும் இன்பப் பொழுதிற் பெறும் உணர்ச்சியினும் துன்பப் பொழுதில் மிக்க உணர்ச்சி பெறும். அவ்வுணர்ச்சி உடலை அரிக்கும்; உள்ளத்தை உருக்கும்; கண்ணீர் பெருக்கும்; நெஞ்சைப் பிளக்கும்; குரலை நெரிக்கும்; உண்ண மறுக்கும்; உண்டதை மறைக்கும்; காண்பன கேட்பன நினைப்பன எல்லாம் துன்ப மயமாகத் தோற்றுவிக்கும். உயிர் பிரிந்த உடலை மறைப்பதனாலோ, உயிரும் உடலும் ஒன்றித்து உலாவிய இடங்களையும் பயின்ற பொருள்களையும் நீக்குவதனாலோ அத்துயரம்

மறைவதும் நீங்குவதும் இல்லை. ஏன்? துயரம் என்ற சொல்லே துயர்வது, தொடர்வது என்னும் பொருளினை தேயாம்.

பறம்பும் பாரியும் இணை பிரியாப் பொருள்கள். அது போலவே கபிலரும் பாரியும் இணை பிரியாதவர். கபிலர் இருக்கும் இடத்திற் பாரியும் உண்டு; பறம்பும் உண்டு. பாரியின் பிரிவால் விளைந்த துயரைக் கபிலர் பறம்பினை நீங்குதலால் யாங்ஙனம் நீக்குதல் கூடும்? பாரியும் பறம்பும் தம் நெஞ்சினில் உறைதலைக் கபிலர் பறம்பினின்று வெளியேறியதும் உணர்ந்தார். அவ்வுணர்ச்சி நெருப்பில் நெய் வார்த்தல் போன்று பாரி மகளிர் இருந்தனர். பாரியை நீக்கிப் பாரி மகளிரை நோக்குதல் எங்ஙனம்? வெளியேறிய கபிலர் ஓர் இடத்தை அடைந்ததும் நெட்டுயிர்ப்புக் கொண்டார். முற்றியிருந்த மூவேந்தரை அடுத்து நின்று அவர் அறிவுரை கூறிய இடம் அது. அந் நிகழ்ச்சியும் அதன் பின் விளைவுகளும் அவரது அகக்கண்ணில் திரைப்படம் போன்று தொடர்ந்து தோன்றின. வஞ்சக வேந்தர்க்கு மான உணர்ச்சி ஊட்டி முற்றுகை தவிர்க்கும் நோக்கத்தோடு தாம் குறித்த வழி தம் உயிரனையான் உயிர்க்கே உலையாக முடிந்த இயல்பால் அவர் உள்ளம் தளர்ந்தார். அன்பனைக் கொன்ற அரும்பாவி தாமே என்று தம்மை நொந்து கொண்டார்.

கபிலர் பறம்பினைத் திரும்பி நோக்கினர். பிறர்க்கெல்லாம் பறம்பு ஒரு வெறும் மலை. கபிலர்க்கோ அஃது ஒரு வரலாறு. பறம்பின் ஒவ்வோர் அணுவும் அவர்க்கு ஒரு கதை சொல்லும்; அதன் கல்லும் புல்லும் மண்ணும் மர

மும் எல்லாம் பாரியின் புகழைப் பகர்ந்த வண்ணமே இருக்கும். பறம்பினேடு அவர் கொண்டிருந்த பண்டைத் தொடர்பெல்லாம் இன்பந் தருவனவாக இருந்தன. இன்று கொண்டுள்ள தொடர்போ துன்பந் தருவதாய் உள்ளது. துன்பத்தோடு தொடர்ப்படும்போது பண்டை இன்ப நிகழ்ச்சிகளும் துன்பத்தைப் பெருக்குகின்றனவே அன்றிச் சுருக்குவனவாக இல்லை. அடுக்கினும் துன்பம் விடுக்கினும் துன்பம் என்ருல் என் செய்வது? மனத்த கத்து அமைத்து அடக்காது வெளியிட்டுக் கூறின் துன் பத்தின் அழுத்தம் குறைந்து அப்போதைக்கேனும் சிறிது ஆறுதல் கிட்டும். அவ்வாறு வெளியிட்டுக் கூறின் பக்கலில் இருக்கும் பாரி மகளிர் பருவரல் கொள்வர். அதற்கு அஞ்சி உள்ளத்து உணர்ச்சியை எவ்வளவுக்கு அடக்குவது? பறம் பின் பெருமையும் இடையில் அதற்கு நேர்ந்த சிறுமையும் பின்னர் அதற்கு நேரலாகும் வெறுமையும் கபிலரின் நெஞ்சிற் பிறந்து கண்ணீர் பெருக்கி வாயைத் திறப்பித் துப் பாடலாய் வெளிப்பட்டன.

*"பெரும் புகழ் பெற்ற பறம்பே! தேட் கடுப்பன்ன நாட்படு தேறல் கெடாவண்ணம் சாடிகளில் அடைத்து வைத்திருந்து, விருந்தின்போது அச்சாடிகளின் மூடிகள் திறக்கப் பெறும்; ஆட்டுக்கிடாயை அடித்து ஊன் சோறு சமைக்கப் பெறும்; இவற்றிற்குத் துணையாகக் கொழு மையான துவையல் அமையும். இவ்வாறு அளவின்றி அமைந்த உணவையும் மதுவையும் வேண்டியார் வேண்டிய அளவினும் சுவையினும் வழங்கும் பெருவளம்

---

* புறம். 113

முதிர்ந்து, எம்மோடு நட்புரிமை பூண்டு நீ முன்னர் விளங்கினுய். அந்நிலை இன்று மாறியதே! இப்பொழுது பாரி மாய்ந்தான்; அதனுல் யாமும் கலங்கிஞேம்; செயலற்ருேம்; திரண்ட முன்கைகளில் ஒளி பொருந்திய குறுவளையல்களை அணிந்து இம்மகளிரின் கருநறுங் கூந்தலைத் தீண்டும் உரிமை பெறுந் தலைவர் யாண்டுளரோ என நினைந்து, நீரொழுகுங் கண்ணேடு நின்னைத் தொழுது வாழ்த்திச் செல்லுகின்ருேம். நீ வாழ்க!" என்று கபிலர் பாடினுர். பாரி மகளிர் அப் பாடலைக் கேட்டுப் பரிந்து நைந்தனர்.

பறம்பின்மீது வைத்த கண்ணைப் பெயர்த்தெடுக்க மாட்டாது கபிலரும் மகளிரும் சிறிது நேரம் அசைவற்று நின்றனர். அவர்களின் கண்ணீர் மாறி விம்மல் தோன்றியது. விம்மலும் நின்றது. பெருமூச்சு எழுந்தது. பறம்பினைத் திரும்பி நோக்குதலும், பாவையர் மனம் நையப் பாடி இரங்குதலும் இல்லை என்ற முடிவோடு கபிலர் வழி நடையைத் தொடர்ந்தார். மகளிரும் அவரைத் தொடர்ந்தனர். அந்நாளில் விச்சி என்னும் மலைக்குத் தலைவனுகச் சிற்றரசன் ஒருவன் விளங்கினுன். அவன் படையிலுங் கொடையிலுஞ் சிறந்து விளங்கினுன். அவனை நாடிச் சென்ருல் தம் கருத்து முற்றுப் பெறும் என்று கபிலர் நம்பினுர். ஆகவே, மெல்லியல் மகளிர்க்கு நடைவருத்தம் தோன்ரு வண்ணம் இடையிடையே நின்றும் இருந்தும் ஆற்றியும் தேற்றியும் கபிலர் நடந்து சென்ருர்.

மாலைப் பொழுது நெருங்கியது. மகளிர் நடை தளர்ந்தனர். "இன்னும் எத்துணைத் தூரம் செல்லுதல்

வேண்டும்?" என்று அவர் கபிலரை வினவினர். அவ் விஞவின் மென்மையும் அதற்கு உரிய விடையின் வன்மையும் கபிலரின் கனிந்த உள்ளத்தைக் கருக்குப் போல் அறுத்தன. அவர் பறம்பினைத் திரும்பி நோக்கினுர். மகளிரும் நோக்கினர். மலையின் பெரும் பகுதியை மரங்கள் மறைத்துவிட்டன. மரங்களிடையே பறம்பின் ஓர் உச்சி மட்டும் ஓர் ஆள் உயரத்திற்குத் தெரிந்தது. கபிலரின் உள்ளத்தில் எண்ணங்கள் அலை அலையாகக் குவிந்தன. தாம் முன் கொண்டிருந்த முடிவினையும் அருகில் நிற்கும் மகளிரையும் அவர் மறந்தார். பறம்பு மலை உருவிற் சிறியதே; ஆயினும் அது புகழிற் பெரியது; பாரியின் கொடைச் சிறப்பால் கட்புலனுற் காணுதாரும் செவிப்புலனுற் கேட்டு அறியும் அளவிற்கு அது உயர்ந்து தோன்றியது; பாரி மாய்ந்தான்; அதனோடு பறம்பின் புகழும் மங்கி மறைந்தது. இனிப் பறம்பு மலையும் பிற மலைகள் போன்று கட்புலனுகப் பிறர்க்குத் தோன்றும் அளவினதாக ஆயிற்றே என்றெல்லாம் கபிலர் வருந்தினுர். வந்தவர்க்கு மதுவையும் தேரையும் அள்ளி வீசும் பாரியின் கொடைத் திறம் அவர் கண்முன் தோன்றியது. *"பாரியின் முற்றத்தில் இரவலர்க்கு வழங்குமாறு மதுவைப் பிழிந்தெடுத்துப் போகட்ட கோது யானை கவளம் மென்று போகட்ட கோதுபோன்று குவிந்து கிடக்கும். அக்கோதினின்று ஒழுகும் மதுத் துளிகளால் முற்றம் முழுவதும் சேறுபட்டுக் கிடக்கும். மதுவினை வழங்கிய பின்னர் அவன் இரவலர்க்குத் தேர்களைப் பொருட்படுத்தாது வழங்குவான். அதனுல் அவன் குன்று யாண்டு நின்

* புறப். 114

ரூர்க்கும் தோன்றும் புகழ் பெற்று விளங்கியது. இனி அந்நெடியோன் குன்று ஈண்டு நின்ருேர்க்கும் தோன்றும்; சிறிது தொலை சென்று நின்ருேர்க்கும் தோன்றும். இதுவே உறுதி'' என்று அவர் இரங்கிக் கூறினுர்.

இரவு வந்தடுத்தது. சிறிது தொலையிற் சீறூர் ஒன்று தோன்றியது. கபிலர் இரவுப் பொழுதினை அச்சிற்றூரிற் கழிக்க எண்ணங் கொண்டார். ஆகவே மகளிருடன் அவர் விரைந்து நடந்து ஊரை அணுகினுர். ஊரின் தலைப்பிற் சிறு குடிசை ஒன்று இருந்தது. குடிசை வீடாயினும் நாற்கூடமாக அமைந்து நடுவில் நிலாமுற்றம் ஒன்றினைப் பெற்றிருந்தது. இல்லற நெறியில் தோய்ந்து முதிர்ந்து வீட்டு நெறியில் நாட்டமுறும் நரை திரை மூப்புற்ற தலைவனுந் தலைவியும் அவ்வீட்டில் இருந்தனர். கபிலர் அம்முதியோனை அடுத்து இராத் தங்குவதற்கு இடம் வேண்டினுர். முதியோன் தன்முன் நின்ற மூவரையும் கூர்ந்து நோக்கினுன். அவன் உள்ளத்தில் இரக்கமுந் தயக்கமும் ஒன்ருய்ப் பிறந்தன. முதியவளும் அரவம் உணர்ந்து ஆங்கு வந்தனள். முதியவர் இருவரும் புதியவர் மூவரின் வருகைக் காரணம் அறிய விரும்பினர். கபிலரும் பாரியின் பெயரையும் நிலையையுங் குறிப்பிடாது நிகழ்ந்தன யாவும் பொருந்தக் கூறினுர். உண்ண உணவும் உறங்க உகந்த பாயலும் தகுந்த வகையில் வழங்க இயலாமை குறித்து முதியவர் இருவரும் முற்றிலும் வருந்தினர். ''அன்புடன் வழங்கும் கூழும் அமுதமாம்: புல்லணையும் மெல்லணையாம்'' என்று கபிலர் கூறவும் முதியவர் முகம் மலர்ந்து, தம்மிடம் உள்ளன உதவி உளம் மகிழ்ந்தனர்.

உள்ளத்து இருந்த உறுதுயராலும், வழி நடந்த களைப்பாலும் பாரி மகளிர் பாயலின் வன்மையை உணராது கண்ணயர்ந்தனர். கபிலர் விழித்த கண் இமைக்காது பாரியின் இழவினை எண்ணியவராய் இருவிழியும் நீர் பெருக இடைக்கிடையே நெட்டுயிர்த்துப் படுத்திருந்தார். நள்ளிரவில் மகளிர் இருவரும் எழுந்தனர்; ஒருவரை ஒருவர் தழுவினர்; பொங்கி எழுந்த விம்மலை வெளிப்படாது தடுத்துப் பொருமினர். கபிலர் எழுந்து சென்று, "அறிவு படைத்த நீர் இவ்வாறு அரற்றுதல் தகாது. பாரி மகளிர் என்று பிறர் அறியா வண்ணம் நாம் காலையில் எழுந்து நடையினைத் தொடர்தல் வேண்டும் முதியவர் உணர்ந்தால் பெருந்துயர் உறுவர். உதவியவர் உள்ளம் வருந்தும் வண்ணம் நாம் ஒழுகுதல் தகாது" என்று மென்மை மொழிகளால் அறிவுறுத்தினர். பாரி மகளிரும் அது கேட்டுத் தம் துயரத்தை உள்ளத்தே ஒடுக்கினர்.

அன்று முழுமதி நாள். திங்கட் செல்வன் பால் போன்ற தண்ணொளியினைப் பாரெல்லாம் பரப்பிக்கொண்டிருந்தான். கபிலரும் பாரி மகளிரும் துயில்பெறாக் காரணத்தால் நிலா முற்றத்தினை அடைந்தனர். நிலவினை நோக்கிய மகளிரின் நினைவினில் பலப்பல எண்ணங்கள் எழுந்து உலவின. அவர் பறம்பினை எண்ணினர்; பாரியை எண்ணினர்; பறம்பு மாளிகையையும் தாம் தங்கிய குரம்பையையும் ஒப்பிட்டு நோக்கினர்; பஞ்சணையின் மென்மையையும் தாம் படுத்திருந்த பாயலின் வன்மையையும் புன்மையையும் நோக்கினர். அதே பால் மதி; அது போன்ற வெண்ணிலவு; ஆயினும் எத்துணை மாற்றம்? அன்று எந்தை இருந்தான்; எம் குன்றையும் பிறர்

கொண்டிலர்; இன்றோ வெற்றி முரசு முழக்கும் வேந்தர் எம் குன்றையும் கொண்டார்; யாம் எந்தையையும் இழந்தோம்—இவ்வாறு மகளிர் உள்ளம் மறுகியது. கற்றுத் தேர்ந்த உள்ளங்கள் தம் கருத்தைப் பாடல் வடிவில் வெளியிட்டன:

*"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொ
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின் [ளார்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்; யாம் எந்தையும் இலமே."

பாரி மகளிரின் பாடல் அவர்தம் பண்பட்ட உள்ளத்தைத் தெள்ளிதின் விளக்குகின்றது. முந்நூறு ஊரையும் பரிசிலர்க்கு ஈந்த பாரியின் தகவினை இப்பாடலில் மறைமுகமாகப் பாராட்டி, தந்தையும் குன்றுமே இருப்பினும் தாம் மகிழ்வுடன் இருந்த நிலையினைக் குறிப்பிடுதல் கொடைக் குணம் ஊறிய அவர்தம் மேம்பாட்டை விளக்குகின்றது. 'வென்றெறி முரசின் வேந்தர்' என்ற தொடரில் அவலமும் இகழ்ச்சியும் ஆழ்ந்து கிடக்கின்றன. வேந்தர் எம் குன்றினை வென்று கொண்டாரல்லர்; இரந்து கொண்டார். எந்தையையும் அவர் வென்று கொண்டாரல்லர்; இரந்தே கொண்டார். ஆயினும் வென்று கொண்டவர் போல் அவ்வேந்தர் வெற்றி முரசு முழக்குவது எத்துணை அறியாமை! மேலும் எந்தையைக் கொண்டவர் உயிருடன் வைத்திருந்தால் யாம் கண்டு மகிழ வழியில்லாது போயினும், நினைந்து தேறவாயினும் வாய்ப்பு இருந்

---

* புறம். 112

திருக்கும். அவர் எந்தையை எமக்கு இலஞ்சக்கினர். இதனல் இவ்வேந்தர் பெற்ற பயன் யாது? கொடைப் பொருளாகப் பெற்ற ஒருவனைக் கொன்றனர் என்று பிறப்புரிமை பாராட்டுதலும் கொடைக்கு இழுக்கன்றோ? ஆதலின் எந்தையை இலஞ்சக்கினர் என்று கூறுதல் தகாது. யாம் எந்தை இல்லாதவர் ஆயினேம் என்று கூறலே தகவு—இக்கருத்துக்கள் இச்சிறிய பாடலிற் பொதிந்து கிடக்கின்றன.

தம் மாணவியரின் புலமைத் திறத்தினைக் கபிலர் உணர்ந்து மகிழ்ந்தார். அதனல் அவர் எய்திய இன்பம் நீடித்து நிற்பது எவ்வாறு? இத்திறனைக் கண்டு மகிழப் பாரி இல்லையே! பாரி இல்லாமல் கபிலர் மட்டும் மகிழ்தல் எவ்வாறு சாலும்? ஆயினும் அவர் மகளிரின் கவலை போக்கும் கருத்தோடு அப் பாடலின் நயங்களை அவர் கட்கு எடுத்துக் கூறினர். இவ்வாறு அழுவதும் தேற்றத் தேறுவதுமாக இரவுப் பொழுது கழிந்தது. காலையில் எழுந்து கபிலர் அம்முதியவரிடம் வழிக்கொள்ள விடை வேண்டினர். முதியவர் தம்மிடம் இருந்த உணவினை இன் சொல்லுடன் கூட்டிக் கொடுத்து வழிவிட்டனர். பாரி மகளிரும் கபிலருமே அங்குத் தங்கியவர் என்று அறிந் திருப்பின் அவ்வூரை விட்டு இத்துணை விரைவில் அவர் அகன்றிருக்க இயலாது. இதனைக் கபிலர் வழியில் உணர்ந்தார். ஒவ்வொரு வீட்டிலும் பாரியின் பேச்சே பெரும் பேச்சாய்க் கிடந்தது.

சிற்றூரினின்றும் சிறிது தூரம் சென்ற பின்னர்ப் பாரி மகளிர் பறம்பினைத் திரும்பி நோக்கினர். கபிலரும்

நோக்கினர். பறம்பு மலை கண்ணுக்குப் புலப்படவில்லை. பாரி மகளிர் கண் கலங்கி நின்றனர். அவர்தம் வருத்தத்தைப் பெருக்க விருப்பிலராய் கபிலர் தம் வருத்தத்தை மறைத்து நின்றார். பெருமூச்செறிந்த வண்ணம் மூவரும் திரும்பி வழிநடையைத் தொடர்ந்தனர். பாரியின் புகழை எடுத்துக் கூறுவதும் மகளிரின் புண்பட்ட உள்ளத்தை வருத்தலாம் என்று கருதிக் கபிலர் வேறுவேறு பேச்சுகளில் ஈடுபட்டார். பேரறிவு படைத்த மகளிர் கபிலரின் கருத்தினை உய்த்து உணர்ந்தனர். "ஆசிரியப் பெருந்தகையீர்! எந்தையின் புகழை எடுத்துக் கூறுதல் நொந்த எம் உள்ளத்துக்கு முந்த வருத்தம் தருவதாயினும் பின்னர்ப் பெரிதும் ஆறுதல் தருகின்றது. ஆதலின் பாரியையும் பறம்பையும் பாடல்களாற் புகழ்ந்து எம் வருத்தம் களைதல் வேண்டும்" என்று மகளிர் கபிலரை வேண்டினர். பாரி மகளிர் வேண்டிய ஒன்றினைக் கபிலர் மறுக்கற்பாலரோ?

பாரி யாவர்க்கும் இனியவன்; அவன் மூவேந்தர்க்கு மட்டும் இன்னான் ஆயினான். இனியானை இன்னானாய்க் கொண்டு இழிந்தோர் இயற்றிய இன்னல் கபிலரின் உள்ளத்தை ஈர்ந்தது. பல்புகழ்ப் பறம்பு பல்வளம் பெருகிப் பாடல் சான்றமைக்குப் பாரியே காரணம். பறம்பின் பெருமை பாரியைத் தொடக்கிடமாய்க் கொண்டிருந்தது. பாரி மாய்ந்த பின்றை வந்து புகுந்த வேந்தர் பாரி போலும் பண்பினராய் இருப்பின் அதன் பெருமை தொடர்ந்து நிலவும். ஆயின், வந்து புகுந்தவர் எத்தகையார்? கொடுத்தவனைக் கொல்லுங் கூற்றுவரிடம் குணம் ஏது? அடுத்து வந்து இரந்தவரிடம் ஆண்மை ஏது?

கோல் கோடுங் கொற்றவர் நாட்டிற் சான்றோர் ஏது? ஆதலின் பறம்பு பாழாவது திண்ணம் என்று கபிலர் உறுதி கொண்டார். தம் உள்ளக் குமுறலை உயிர் ஓவியங்களாகப் பாடலில் அமைத்துக் காட்டினர்.

•"வேற்படை பலவற்றுடனே தலைமை பெற்ற யானையினையும் உடைய மூவேந்தர்க்குக் கொடியோனுய்த் தோன்றிய இனியோனும் பாரியின் பறம்பு மலையில் ஒரு பக்கம் அருவி ஆர்த்து ஒழுகும். மற்றொரு பக்கம் பாணர் கைப்பாத்திரத்தில் நிறையப் பெய்யுமாறு தேறலை வடித்தெடுக்குங்கால் சிந்திய தெளிந்த மது கல்லை உருட்டி ஒழுகும். அருவி தெளிநீர் பொழிவதும், சிந்திய தேறல் கல் அலைத்து ஒழுகுவதும் பாரியின் வளத்தான் நிகழ்ந்தன அன்றோ? இப்பொழுது அவன் நீங்கினமையின் அத்தகைய வளநிலை கழிந்ததே! அஃது இனித் திரும்பி வாராதே!" என்று கபிலர் இரங்கினர்.

×"கருநிறச் சனிமீன் தன் பகைமீனை அடைந்து புகையினும், வருங்கேடு தெரிவிக்கும் வால்மீன் தோன்றினும், வெள்ளி என்னும் மீன் தென்றிசைக்கண் ஓடினும் பிற நாடுகள் பெயலின்றி வளங்குன்றும். ஆனால், பசிய இலையினை உடைய முல்லைக்கொடி வெருகுப்பிள்ளையின் முட்போன்ற கூறிய பற்களைப்போன்று அரும்பு ஈனும் இந்த ஆய்தொடி அரிவையர் தந்தை நாட்டில் என்றுங் கோல் கோடுதல் இல்லாமையாற் சான்றோர் பல்கி இருப்பர். ஆகவே, இயற்கை அல்லன செயற்கையில் தோன்றி

• புறம். 115

× புறம். 117

னும் ஆண்டுப் பெயல் பிழைப்பு அறியாது. ஆதலின் வயலகம் நீரால் நிறைந்து தோன்றும்; புதர்களும் செழித்துப் பூக்களொடு மிளிரும்; மனையிடத்து மகவை ஈன்ற அமர்ந்த நோக்கினை உடைய ஆமாவின் பெருநிரை யாண்டுச் செல்லினும் வயிறார நன்புல் மேயும்; பறம்பு நாட்டின் பெரும் பகுதி புன்செயே ஆயினும் வளம் பிழையாமையின் செழுமையோடு தோன்றும்" என்று அவர் தொடர்ந்து பாடினார். கோல் கோடாமையாற் சான்றோர் பல்கினர்; சான்றோருடைமையின் பெயல் பிழைப்பறிந்திலது; ஆதலின் இயற்கைக் கெடுகுறிகள் பறம்பினைக் கெடுத்தில. கோல் கோடா நெறியினன் இப்பொழுது மாண்டான்; கோடிய கோலினர் பறம்பினை ஆண்டார்; ஆதலின் அந் நாட்டிற் சான்றோர் அருகுவர்; அப்பொழுது கெடுகுறிகள் தோன்றாமலும் நாடு பெயல்வளம் பிழைத்துக் கெடுநிலை உறுமே என்ற கருத்தினைக் கபிலர் இப்பாடலிற் பொதிந்து தருகின்றார்.

பறம்பினை மறப்பினும் அதன் பனிநீர்ச் சுனையினை மறத்தல் ஒல்லுமோ?

*"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்!" என்ற அடிகள்

அச்சுனையின் குளிர்மையும் இனிமையும் விளக்கும். இச் சுனையினைத்தான் பாரி எத்துணைக் கருத்தோடு பேணினான்!

---

*குறுந். 196.

வந்த மன்னர் அதன் மாண்பினை அறிவரோ? அறியினும் அவன் பேணியது போன்று பேணுவரோ? ‡"கூறிய வேலை ஏந்திய திரண்ட தோளின் வன்மையும் தேரை வழங்கும் கைவண்மையும் படைத்த பாரியின் குளிர்ந்த பறம்பு நாட்டில் சிறுகுளம் ஒன்று உளது. அத் தெண்ணீர்ப் பனிச்சுனை பாறையும் சிறுகுவடும் கூடிய தலையை உடையது; எட்டாம் பக்கத்துப் பிறை போன்று வளைந்த கரைகளை உடையது. பாரி மாய்ந்தமையின் பாதுகாப்பார் இன்றி அச்சிறு குளம் உடைந்து பாழாகுமோ!" என்று கபிலர் மேலும் இரங்கினர்.

அடுத்தபடியாகப் பறம்பு நாட்டின் நந்தா வளம் கபிலரது சிந்தையைக் கவர்ந்தது. $"கார்காலத்து மழை பெய்து மரஞ் செடி கொடிகள் தழைத்துக் காட்சிக்கு இன்பம் பயக்கும்; அக்காலை யானை முகத்தின்கண் காணும் புள்ளிகள் போன்று தெறுழ் என்னுங் கொடி பூத்துப் பொலியும்; பறம்பு மக்கள் செந்நிறப் புற்றினின்று சேர்த்த ஈயல்களை இனிய தயிரிற் கலந்து புளிங்கறி சமைத்து இன்பமாக உண்பர்; ஆண்டு மெல்லிய தினை விளைச்சல் என்றும் புது வருவாயாக வந்து கொண்டிருக்கும். நிழலில்லாத நீண்ட வழியினிடத்து நின்ற தனி மரம் போல முரசினையுடைய வேந்தரினும் மிகுதியாக இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடு முன்னர் இவ்வாறு வளம் மிக்கு விளங்கியது. இப்பொழுது அவன் இறந்த

---

‡ புறம். 118.

$ புறம். 119.

மையின் அது வளம் நந்துங் கொல்லோ!" என்று அவர் கவன்றார்.

§"செம்மண் மேட்டில் கார்காலத்துப் பேரீரத்தில் விதைத்த வரகு கிளைத்துத் தழைத்து ஒரு பக்கம் விளைந்து கிடக்கும். வேறு பக்கங்களில் தினையும் எள்ளும் அவரையும் விளைந்து செழிக்கும். மக்கள் முற்றிய தேறலை மனைதோறும் பகர்ந்து தாமும் அருந்தி இன்புறுவர். மனையறம் கொண்ட மகளிர் சோறு அட்டு, நறுநெய்யிற் கடலை துள்ள, விருந்து படைத்தற்குக் கலம் பூசுவர். இவ்வாறு வருந்துதல் வேண்டாத புது வருவாயும் அசைந்த மூங்கில் ஒலிக்கும் உயர்ந்த உச்சியுள்ள மலையும் பொருந்தியது பறம்பு நாடு. கரிய கூந்தலினை உடைய இம் மடந்தையர் தந்தை புலவர் பாடி ஆறாப் பண்பினன்; பகைவர் ஓடுங்கால் ஒலிக்குங் கழல் ஒலி கேட்க முருகனை நிகர்த்துச் செருவினை விரும்புவோன். அவன் மாண்டமையின் அந்நாடும் தன் வளங் குன்றுமோ!" என்று அவர் மேலும் புலம்பினார்.

இவ்வாறு பாரியின் பரந்த புகழெல்லாம் பறம்போடு கூட்டிப் பாடல்களில் அமைத்துக் கபிலர் பாராட்டினார். பாரி மகளிர் அவற்றைக் கேட்டுத் தம் மனத்துயர் சிறிது மாறியவராய் வழிநடை வருத்தம் களைந்தனர். பகலெல்லாம் வழி நடந்து, வழியிற் கிடைத்தன அமுதென உண்டு, சோர்ந்தவிடத்துச் சிறிது இருந்து இளைப்பாறி, இருள் கண்டவிடத்துச் சிற்றூர்ச் சிறு குடிசைகளில் தங்கி

---

§ புறம். 120.

யிருந்து, பன்ஞள் நடந்து விச்சிக்கோன் நாட்டை மூவரும் எய்தினர். மகளிருடன் விச்சிக்கோனைச் சென்று காண் பதற்குரிய செவ்வியை அறிந்துவரும் நோக்கத்தோடு, ஆங்கிருந்த ஒரு குடிசையில் சில மகளிர் துணையிற் பாரி மகளிரை அமர்வித்து,கபிலர் விச்சிக்கோனின் மாளிகையை நோக்கிச் சென்ருர்.

---

# 10. மண மறுப்பு

பாரி மகளிரை மணத்தற்கு உரிய தலைவரை நாடிப் பறம்பு விடுத்த கபிலர் அந்நாளிற் சிறந்து விளங்கிய வள்ளல்களை நாடாது விச்சிக்கோன் முதலியோரிடம் விரும்பிச் செல்வது ஏன்? இதற்கு முதலில் விடை காண்டல் வேண்டும். பிற வள்ளல்களை விடுப்பினும், வையாவிக் கோப்பெரும் பேகனும் மலையமான் திருமுடிக்காரியும் கபிலர் பால் அளவின் மிக்க அன்பு கொண்டவர் என்பதற்குப் புறநானூறு சான்று பகரும். இவ்விருவரும் பாரியிடத்துச் சிறிதும் பகை கொண்டவரும் அல்லர். ஆயினும் கபிலர் இவரை நாடாது பிறரை நாடியது ஏன்?

பேகனைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றினை முன்னர்க் கண்டோம். ஒருகாலத்து விளங்கிய பெரும் புலவர் நால்வர் எக்காரணத்தை முன்னிட்டு அங்குக் கூடினர்? பேகனைப் பாடிப் பரிசில் பெறும் நோக்கங்கொண்டா அவர்கள் அங்குக் கூடினர்? *அவர்தம் பாடற் பொருள் சுட்டுவது என்ன? உடல் இரண்டு உயிர் ஒன்றாக வாழவேண்டிய பேகனும் கண்ணகியும் ஒரு சிறு வேற்றுமை காரணமாகத் தனித்து உறைந்து தவித்தனர். இல்லற மாண்பினுக்கு எடுத்துக் காட்டாக விளங்கி மக்களை நன்னெறி

---

* புறம். 143–147.

உய்க்கும் கடப்பாடு கொண்ட இருவர் பிரிந்து உறைந்து மக்களுக்குப் பேரிடராக விளங்கினர். அவ்விருவரையும் ஒன்றுபடுத்தும் நோக்கங்கொண்டே புலவர் நால்வர் அங்குச் சென்று பேகனைத் தெருட்டி நெறிப்படுத்தினர். அத்தகைய பேகனிடம் கபிலர் சென்று பாரி மகளிரை மணத்தல் வேண்டின், அவ்வள்ளல் கொடை மேம்பாடு கருதி அதனை ஏற்றலுங் கூடும். அது நிகழுமாயின் அவனது இல்லற மேம்பாடு என்னாகும்? அப்பொழுது கொடை மேம்பாட்டுத் துணைகொண்டு பாரியைக் கொலைபுரிந்த கயவர்க்கும் கபிலர்க்கும் இடையே காணலாகும் வேறுபாடு என்னை? அத்தகைய கொடுமையினைக் கபிலர் துணிந்து இயற்றுவாரோ? இயற்றின், பொய்யா நாவிற் கபிலராகவும், புலன் அழுக்கற்ற அந்தணாளராகவும் அவர் விளங்குதல் யாங்ஙனம்? ஆகவே, கபிலர் பேகனிடம் செல்ல வேண்டிற்றிலர்.

இனி மலையமான் திருமுடிக்காரியை நோக்குவோம். பாரியைச் சென்று அடையும் முன்னர்க் கபிலர் காரியைக் காணச் சென்றிருந்தார். அவன் அவரது தகுதியினை அறியாத குறையினால் ஏனைய இரவலரோடு கபிலரையும் ஒப்ப மதித்திருந்தான். மானம் மிக்க கபிலர் மலையமானின் பொதுநோக்கைக் கண்டு வருத்தமுற்று * "பெருங் கொடைத் தலைவனே! ஒரு திசையில் இருக்கும் வள்ளியோன் ஒருவனை உள்ளி நாற்றிசையினின்றும் பரிசில் மாக்கள் பலரும் வருவர். அவர்தம் வரிசை அறிதல் அரிதே அன்றி ஈதல் மிக எளிதே. இதனை நீ நன்கு அறிந்திருப்பின், அறிஞரிடத்தும் வரிசை கருதாது அனைவரை

---

* புறம். 121.

யும் ஒரு தரமாக நோக்குதல் தவிர்வாயாக” என்று அவனைத் தெருட்டினர். அவனும் தெருட்டத் தெளிந்து கபிலர் தரம் அறிந்து தகுந்த பரிசில்களை அவருக்கு வழங்கினன்.

திருமுடிக்காரியின் கொடைச் சிறப்பினைக் கபிலர் சில பாடல்களாற் பாராட்டினர்: ‡“நாட்காலையில் மதுவை உண்டு நாளோலக்கத்து மகிழ்ந்திருத்தலை நாடித் தேரை ஈதல் யாவர்க்கும் எளிது. ஆனால், அழியாத நற்புகழ் வாய்ந்த மலையமான் மதுவுண்டு மகிழாமலே ஈந்த பொன்னணி நெடுந் தேர்கள் வளம் மிக்க முள்ளூர் மலையின் உச்சியிற் பொழிந்த மழைத் துளிகளிலும் பலவாகும்” என்றும், $“ஒழுங்குபட்ட ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியை உடைய பெருமை பொருந்திய மலையனைப் பாடியவர் நாளல்லா நாளிற் சென்று புள் நிமித்தம் இடையே தடுக்க, செவ்வி அறியாது புகுந்து கூறுபாடின்றிப் பாடினும் பரிசில் பெறாது வறிதே மீளார்” என்றும் அவர் பாராட்டியுள்ளார். இத்தகைய மேன்மையாளன் கபிலர் விரும்பின் பாரி மகளிரை மணக்க மறுப்பனோ? ஆயின் அவர் ஏன் ஆண்டுச் சென்றிலர்?

மற்றொரு பாடலை நோக்குதல் வேண்டும்: •“கழல் புனைந்த திருந்திய அடியினை உடைய காரி! நின் நாடு கடலாற் கொள்ளப்படாது; பகைவரும் அதனைக் கொள்ளும் ஊக்கம் பெற்றிலர். அஃது அழல் பேணும் அந்த

‡ புறம். 123.
$ புறம். 124.
• புறம். 122.

ணர்க்கு உரியது. கெடாத செல்வமும் வெற்றி பொருந்திய படையும் உடைய மூவேந்தருள் ஒவ்வொருவர் ஒவ்வொரு காலத்து நினது துணைவலியை நாடித் தம் ஏவலர் வழியாகப் புகழ்ந்து கொடுத்துவிடும் பொருள் நினது குடியை வாழ்த்தி வரும் இரவலர்க்கு உரிமையாகும். வட திசையில் தோன்றும் மீனுகிய அருந்ததியை நிகர்த்த கற்பும் மெல்லிய மொழியும் உடைய நின் மனைவியின் தோள் ஒன்றினைத் தவிர நினக்குத் தனியுரிமை என்று சொல்லுதற்கு ஒன்றும் இல்லை. ஆயினும் நீ பெருமிதத்துடன் விளங்குகின்ருய்'' என்று கபிலர் இப்பாடலிற் காரியைப் புகழ்கின்ருர். அருந்ததி போன்ற கற்பின் மென்மொழியாள் வருந்துமாறு பாரி மகளிரைக் காரி மணந்து கொள்ளக் கபிலர் விரும்பவில்லை. ஆதலின், அவனையும் அவர் அணுகிற்றிலர்.

ஒருவன் தன் உடல் உயிர் தனக்கன்றித் தன் மனைவிக்கே முற்றிலும் உரியதென்றும், ஒருத்தி தன் உடல் உயிர் தனக்கன்றித் தன் கணவனுக்கே முற்றிலும் உரியதென்றும் கருதிக் கட்டுப்பட்டு வாழுங் கற்பு நெறியினைச் சான்ருேர் யாவரும் புகழ்ந்து பாராட்டுவர். பெண்டிர் தமக்கு உள்ளன எல்லாம் பிறர்க்கு ஈயும் பெற்றியினராயினும், தம் கணவர் அன்பு பிறராற் பகுக்கப்படுதலைச் சிறிதும் விரும்பார். திருவள்ளுவர் இப்பகுதியினை மிக நுணுக்கமாக எடுத்துக் கூறுகிருர். பரத்தையிற் பிரிதல் இலக்கணம் பயின்ற வழக்கமாயினும், ஒழுக்க நெறியே கருதும் வள்ளுவர் தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தான் என்றுகூடக் குறிப்பிடாது, அவன் பரத்தையிற் பிரிந்து வந்ததாகக் கருதப்பெற்ருன் என்ற முறையில் செய்யுட்

செய்துளார். தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்று வந்தான் என்று கருதும் தலைவி புலவி கொண்டு தலைவனோடு ஊடுகிறாள். இருவரையும் உடன்படுத்தக் கருதிய தோழி தலைவனை அணுகி ஊடற் காரணம் வினவு கிறாள். தலைவன் கூறுகின்றான்: •"பிரிந்திருந்த காலத்து இடையீடின்றி உன்னை நினைந்து கொண்டிருந்தேன் என் னும் கருத்தால் 'உள்ளினேன்' என்றேன். அதனை ஒருகால் மறந்திருந்து பின்னர் நினைந்தேன் என்று தவறாகக் கருதி 'என்னை இடையே ஏன் மறந்தீர்?" என்று கூறி முன்னர் என்னை அணுக வந்தவள் அஃதொழித்துப் புலவி கொண் டாள். யான் தும்மவும் எனக்குக் கேடின்றாக இறைவனை வாழ்த்தியவள் மறித்து, 'நும்மை நினைந்து வருந்தும் மகளிருள் யார் நினைத்தலால் தும்மினீர்?" என்று புலந்து அழுதாள். தும்மினால் வருந்துவாள் என்று கருதி, வந்த தும்மலைத் தடுத்து நிறுத்தவும், 'நும்மவர் நினைத்தலை எமக்கு மறைக்கின்றீரோ?' என்று அழுதாள். ஊடல் கண்டு பணிந்து உணர்த்தினால், 'பிற மகளிர் ஊடிய விடத்தும் இவ்வாறு பணிந்து நிற்பீரோ?' என்று வெகுள் வாள். அவள் உருவழகையே உற்று நோக்கினும், 'யாரை நினைந்து என் உருவழகை நோக்கினீர்?' என்று காய்வாள்."

இவ்வாறே பிற புலவரும் கருத்து ஒருமித்த காதல் வாழ்க்கையைப் போற்றியும், பரத்தையிற் பிரியும் பாழ் பட்ட வாழ்க்கையைத் தூற்றியும் உள்ளனர். கபிலரும் இத்தகைய இல்லற மாண்பினை மதிப்பவர். ஆயின்,

---

•குறள் 1316-1320

‡“மலர்ந்த மார்பின் மாவண் பாரி” என்ற கபிலர் பாடல் அடிக்கு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய குறிப்புரையில், ‘மகளிர்க்கு மலர்ந்த மார்பினையும் பெரிய கொடையையும் உடைய பாரி’ என்று குறிப்பிட்டது எவ்வாறு பொருந்தும்? அவர், $“வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம், மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே” என்று செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் குறித்த அடிகளுக்குப் பதிற்றுப்பத்தின் உரையாசிரியர் குறித்த பொருளை உட்கொண்டு அவ்வாறு எழுதினராதல் வேண்டும். ஆண்டும் உரையாசிரியர், “அகலம் மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே என்றது நின்னொடு பொருவாரின்மையின் நின் அகலத்தை நின் மகளிர் போகத்துக்கு இடமாகவல்லது மலர்வித்தலை அறியாய் என, †‘மகளிர் மலைத்த லல்லது மள்ளர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப என்றது போலக் கொள்க” என்று பொது வகையான புனைந்துரையாகக் குறித்திருப்பது உணரத் தக்கது. எவ்வகையினும் பாரியைப் பொறுத்த வரையில் மலர்ந்த மார்பன் என்ற தொடர்க்கு மகளிர்க்கு மலர்ந்த மார்பினை உடையவன் என்று வலிந்து பொருள் கொள்ள வேண்டியதில்லை.

ஆகவே, இல்லற மாண்பினை நன்கு மதித்திருந்த கபிலர் தம் கருத்து முற்றுப் பெறுதற்காகப் பிறர் இன்ப வாழ்வைக் குலைக்க எண்ணங் கொண்டிலர். திருமணம் நிறைவுறுதவன் விச்சிக்கோன் என உணர்ந்தே அவர் அவ

---

‡ பதிற். 61.

$ பதிற். 63.

† புறம். 10.

னிடம் சென்றார். விச்சிக்கோனைச் சென்று காணும் செவ்வியினை வாயிற் காவலர் வாயிலாக அறிந்து, பாரி மகளிரை அழைத்துச் செல்வதற்குக் கபிலர் அக் குடிலைசக்குச் சென்றார். அப்பொழுது அவர் கண்ட காட்சி அவர் உள்ளத்தை உறுத்தியது. மகளிர் இருந்த குடிசை முள் வேலியாற் சூழப் பெற்றிருந்தது. வெளியே உமணர் உப்பு வண்டிகளைச் செலுத்திக் கொண்டிருந்தனர். வண்டிகளின் ஒலி கேட்ட மகளிர் உள்ளிருந்து அவற்றைக் காண இயலாமையால் அருகிருந்த ஈத்திலைக் குவியல்மீது ஏறி, வண்டிகளின் தொகைமிகுதி கண்டு அவற்றை எண்ணலாயினர். முன்னர் மூவேந்தரின் குதிரைகளை மகளிர் எண்ணிய நிகழ்ச்சி கபிலரின் நினைவிற் பாய்ந்தது. வாழ்க்கையின் வாழ்வு தாழ்வுகளை உணர்ந்து அவர் உள்ளம் நொந்தது. அதனை அவர் ஒரு பாடலாக அமைத்து ஆறுதல் காண முயன்றார்.

•"மலர் நிறைந்த சோலையில் மயில் எழுந்து ஆடவும், பழகிய பெரிய மலையிடத்து முசுக்கலை பாய்ந்து உகளவும், முசுக்கலையும் உண்டு வெறுத்திட மரங்கள் காலமன்றியும் பழம் பல உதவும் புது வருவாய் அறாத மலையிடத்துத் தலைமை பெற்ற உச்சியில் ஏறி நின்று, இனிய நீருள்ள ஆழ்ந்த சுனையிடத்து மலர்ந்த செங்கழுநீர் மலரான் இயன்ற தழையினை இடையில் அணிந்து அழகு மிக்க குளிர்ந்த கண்ணும் இனிய முறுவலும் பெற்ற இம்மகளிர், மது ஈயும் வளமும் கூர்வேல் ஆண்மையும் பொருந்திய தம் தந்தையாகிய பாரியின் அருமையை அறியாராய்ப்

---

• புறம். 116.

போரெதிர்ந்து வந்த வெற்றித்தானை வேந்தரது கலம் புனைந்து மனஞ்செருக்கிய குதிரைகளை எண்ணலுற்றனர். இப்பொழுது, புல் மூடிய கவர் வழியும் முள் நெருங்கிச் செறிந்த வேலியும் பஞ்சு பரந்த முற்றமும் உள்ள சிறிய மனையிடத்து, பீர்க்கும் சுரையும் முளைத்துப் படர்ந்த இடத்தில் ஈத்திலைக் குப்பையின் கண் ஏறி நின்று, உமணர் உப்பு ஏற்றிச் செலுத்தும் வண்டிகளை எண்ணுகின்றனர். இதனைக் கண்டு நான் நோகின்றேன்; என் வாழ்நாள் கெடுவதாக!" என்று கபிலர் இரங்கிப் பாடினர்.

பின்னர், கபிலர் பாரி மகளிரை விச்சிக்கோனிடம் அழைத்துச் சென்றார். விச்சிக்கோன் அவரை நன்கு வரவேற்றான். பருவ மங்கையர் இருவர் அவருடன் நிற்பதைக் கண்டு விச்சிக்கோன் வியந்தான். அவர்தம் அழகும், அறிந்து அடங்கிய நிலையும் அவன் மனத்தைக் கவர்ந்தன. பாரியின் படுகொலை அவனுக்கும் எட்டியிருந்தது. அறிவிலும் அழகிலும் மேம்பட்ட மகளிர் இருவர் பாரிக்கு உண்டு என்பதும் அவன் அறிவான். ஆயினும், அம்மகளிர் இத்துணைவழி கடந்து தன் மாளிகையில் இரவலர் போல் வந்து நிற்பர் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. கபிலருடன் அம்மகளிர் நெருங்கிப் பழகுந் தன்மை கண்டு கபிலரது மகளிரே அவர் என்று விச்சிக்கோன் கருதினன். தம் மகளிர்க்கு மணம் புரிவித்தல் வேண்டிச் செல்வம் பெற்றுச் செல்லும் நோக்குடன் கபிலர் வந்திருக்கலாம் என்று அவன் எண்ணினன். அதற்கு மகளிரை அழைத்து வரவேண்டிய தேவை என்ன என்று அவன் அயிர்த்தான். இறுதியில் வந்த காரணத்தைக் கபிலரிடமே வினவினன்.

கபிலர் தம்முடன் நின்ற மகளிரைக் கனிந்து நோக்கினார்; விச்சிக்கோனை அமர்ந்து நோக்கினார். அவர் உள்ளக் குமுறல் ஒரு பெருமூச்சாக வெளிப்பட்டது. ‡"குளிர்ந்த மலையில் நிமிர்ந்து ஓங்கிய பசிய இலையை உடைய பலாவின் பழத்தைக் கவர்ந்து உண்ட கருவிரற் கடுவன் தனது செம்முக மந்தியோடு பொலிவுற்றுச் சேய்மையில் முகிலும் உச்சி அறியாத உயர்ந்த மலைப்பக்கத்து மூங்கிலில் துயிலும் மலைநாட்டுத் தலைவனே! நிணத்தைத் தின்று செருக்கிய நெருப்புப் போலும் தலையை உடைய நெடிய வேலும், களத்தைத் தனக்கு உரியதாக்கி வென்று காயுங் கடுங்கண் யானையும், ஒளிர் மணிகளான் இயன்ற வளைந்த பூண்களையும் உடைய விச்சிக் கோவே! சினப் போரில் அடங்கா மன்னரை அடக்கும் ஆற்றல் பெற்றோய்! விளைவு மடங்காத நாட்டிற்கு உரியவனே! இவர் தாம் தலையில் பூ மாறாத அழகிய முல்லைக்கொடி தன் நாத் தழும்புறப் பாடாதாயினும் மணி ஒலிக்கும் நெடிய தேரினைப் பெற்றுக்கொள்க என்று கொடுத்து, பரந்து மேன்மேலும் ஓங்கும் புகழினை உடைய பாரியின் மகளிர். யானோ பரிசிலன்; மேலும் நிலைபெற்ற அந்தணன். நீயோ பகைவரை முறைப்படி பொருது பணிவிக்கும் வாள் ஆற்றலில் மேம்பட்டவன். நான் நினக்குத் தருகின்றேன்; நீ இவரைப் பெற்று மகிழ்வாயாக!" என்று கபிலர் பாடினார்.

பலாவின் கனியைக் கவர்ந்து உண்ட கடுவன் மந்தியோடு மலை உச்சியிலுள்ள மூங்கிலில் துயில்வதுபோன்று, செல்வம் படைத்த நீயும் இம்மகளிரை மணந்து இன்புற

---

‡ *புறம்*. 200.

வேண்டும் என்பது அடைமொழியின் உள்ளுறைப் பொருளாகும். அடங்கா மன்னரைப் பொருது பணிவிக்கும் ஆற்றல் மூவேந்தரின் பகை கொண்ட பாரி மகளிர்க்குப் பாதுகாப்பாகும் என்று கபிலர் கருதினார். தாம் பரிசிலராதலின் தம் விருப்பினை நிறைவேற்றுதல் புரவலனின் கடமை என்பதும், அவ்வாறு தாம் விரும்பும் பரிசிலும் அம்மகளிரை விச்சிக்கோன் மணந்து இன்புறுதலே என்பதும், தாம் அந்தணராதலின் மகளிரை மணத்தின் ஈய உரிமை பெற்றவர் என்பதும் அப்பாடலின் பிற்பகுதியிற் பொதிந்த பொருளாகும்.

கபிலரின் பாடலைக் கேட்டு விச்சிக்கோன் உள்ளம் உருகினான். கொடைக்கு வரம்பாக விளங்கிய தந்தையை இழந்து தவிக்கும் மகளிரின் தனிமை கண்டு அவன் மனம் இளகினான். பாரி உயிருடன் இருந்திருப்பின் மணம் பேசிவிட்டும் பெற முடியாத மகளிர் எளியராய்த் தன் மாளிகையில் மணம் வேட்டு நிற்கும் நிலை கண்டு அவன் வியப்புற்றான். அறிவும் அழகும் அமையப்பெற்ற மகளிரின் ஏழ்மை நிலை எள்ளத் தக்கதாக அவனுக்குப் புலப்படவில்லை. பெரும் புலவர் கபிலரே தன்னிடம் வந்து மணம் வேண்டிய தகுதி நோக்கி அவன் பெருமிதம் கொண்டான். கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைக்கப் பெற்றும் உண்ண முடியாத நிலையில் இருக்கும் தன்னை நொந்துகொண்டான். அவன் தயங்கக் காரணம் யாது? மூவேந்தர் பாரியிடம் கொண்டிருந்த பகைமையும், பாரி தன் மகளிரை அவர்க்கு மணம் மறுத்த தன்மையும், அம்மகளிரைத் தான் மணத்தலால் நேரலாகும் விளைவுகளும் அவன் மனக்கண்ணில் நின்று தன் விருப்பத்தைத்

தடுப்பன ஆயின. போரை நினைந்து அவன் அஞ்சவில்லை. வேண்டாப் போரைத் தவிர்க்கவே அவன் மனங் கொண்டான். விச்சிக்கோனின் தயக்கத்தைக் கபிலர் உணர்ந்தார்; தன் எண்ணத்தைத் தெளிவாகக் கூறுமாறு அவனை வேண்டினர். அவனும் பணிவுடன் தன் எண்ணத்தை விரித்துக் கூறினன். கபிலர் அவன்மீது சீற்றங் கொள்ளவில்லை. விச்சிக்கோனின் ஆண்மையிடையே மறைந்து கிடந்த கோழைமையைக் கண்டு அவர் இரங்கினர். அவனிடம் பரிசில் பெறவும் விரும்பாது, பாரி மகளிரையும் அழைத்துக்கொண்டு கபிலர் வருத்தத்தோடு வெளியேறினர்.

அந்நாளில் துவராபதியை ஆண்ட வேளிர் குடியில் இருங்கோவேள் எனப் பெயரிய குறுநில மன்னன் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தான் கபிலர் பாரி மகளிரோடு சென்று அவனைக் கண்டார். அவன் மகளிரைச் சுட்டி, ''இவர் யார்?'' என்றான். ஏழ்மைத் திரையில் மறைந்து கிடந்த பேரழகினையும் பிற பல நலங்களையும் பாரி மகளிரிடம் இருங்கோவேள் கண்டான்; மணம் புரிந்து கொள்ளத்தக்க மங்கையரைத் தேர்ந்துகொள்ளும் மனநிலையில் இருந்த இருங்கோவேள் தன் மனத்துக்கு இயைந்த மங்கையர் இத்தகையோரே என்ற எண்ணமும் கொண்டான்; ஆதலின் முதற் கண்ணே அம்மகளிர் யாவர் என்று அறிய அவன் ஆவலுற்றான்.

கபிலர் பாடலானர்: * ''இவர் யார் என்குவையாயின், இவரே தன் ஊர்கள் எல்லாவற்றையும் இரவலர்க்கு

---

* புறம். 201.

வழங்கி, அணிந்த தேரை முல்லைக்கு ஈந்த தொலையாத நற் புகழும் மணி ஒலிக்கும் யானையும் உடைய பறம்பின் தலைவனாகிய பாரி என்னும் பெரியோனின் மகளிர். யான் இவர் தந்தைக்குத் தோழன்; ஆதலால் இவர் என் மகளிர். அந்தணப் புலவன் யான் இவரை நின்னிடம் கொண்டு வந்தேன். நீயோ வடநாட்டு முனிவனது ஓம குண்டத்தில் தோன்றி, செம்பு புனைந்து இயற்றிய நெடுமதிலை உடைய துவராபதியை ஆண்டு, வெறுப்பற்ற ஈகையினராய் விளங்கிய வேளிருள் நாற்பத்தொன்பதாவது தலை முறைக்கு உரிய வேளாய் விளங்குகின்றாய். வெற்றிப் போர்த் தலைவ! தார் அணிந்த யானையினை உடைய பெருமை பெற்ற இருங்கோவே! ஆண்டகைமையைக் கடப்பாடாகக் கொண்டமையின் பாணர்க்கு ஈதலாகிய கடமையை ஆற்றி வருகின்ற தழைத்த மாலையினை அணிந்த புலிகடிமால் என்னும் சிறப்புப் பெயரினோய்! வானாற் கவிக்கப்பெற்றுப் பெருங்கடலால் சூழப்பெற்ற இவ் வையகத்தில் அணுகு தற்கு அரிய திறம் வாய்ந்த பொன் உண்டாகும் பெரிய மலைக்கு உரியவனே! வென்றி வேலும் பகைவர் அஞ்சும் படையும் கெடுதற்கு அரிய நாடும் உடையவனே! யான் நினக்குத் தர இவரைக் கொள்வாயாக!" என்று கபிலர் பாடி முடித்தார்.

தன்முன் நின்றவர் பாரி மகளிர் என்று அறிந்ததும் இருங்கோவேள் கொண்டிருந்த விருப்பு வெறுப்பாய் மாறியது. அவன் சுழித்த முகத்தினனாய்ப் பாடலின் பிற்பகுதியையுங் கேட்டான். பாரி மகளிரை மணந்து கொள்ள வேண்டும் என்ற கபிலரின் வேண்டுகோள் அவ னுக்கு வெகுளியை மூட்டியது. அவன் வெகுண்டு சுடு

சொற்கள் சில கூறினுன். "விரும்பி வேண்டிய மூவேந்தருக்கு இம் மகளிரை மணம் செய்வித்தால் என்ன? குறுநில மன்னனுகிய பாரி அவரினும் உயர்ந்தோருக்குத் தன் மகளிரை மணம் புணர்விக்க எண்ணினனே?" என்று அவன் இடித்துக்கூறினுன். இரவலர்க்குப் பரிசில் வழங்குதல் தன் கடமையாயினும், இரவலரும் இரக்கத் தக்கது யாது என்று ஆய்ந்து கேட்க வேண்டும் என்று அதட்டினுன். எவ்வகையினும் மூவேந்தர்க்கு மணம் மறுக்கப் பெற்றுப் பகை மேற்கொண்ட மகளிரைத் தான் மணத்தல் இயலாது என்று முடித்துக் கூறினுன்.

இருங்கோவேளின் கொடுமொழி கேட்டுக் கபிலர் அனல்மேல் மெழுகாய் உருகினுர். மகளிர்க்கு நேர்ந்த இழிவு நோக்கி அவர் நெஞ்சம் வெடித்தது. மூவேந்தர்க்கு மறைவில் நட்பினனுய் இருங்கோவேள் இருந்தனனே என்று அவர் ஐயுற்றுர். இத்தகைய இழிஞனிடம் இரக்க நேர்ந்தமை குறித்துத் தம்மையே நொந்து கொண்டார். மணத்திற்குக் குணம் வேண்டாது பணம் வேண்டுதலையே குறிக்கோளாகக் கொண்ட அவனது இழிதகைமைக்கு மனம் இரங்கினுர். வரையாது ஈந்த வள்ளல்களைப் பாடிய செந்நா வரையறை வகுத்துக் கூறிய இப்புல்லியோனையும் பாட நேர்ந்ததே என்று ஏங்கினுர். மறுத்துக் கூறியவன் தன் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்க நின்ற கொடுமை அவர் உள்ளத்தைக் கூர்வாளால் அறுத்தது. மறுவுற்ற மதியோனைப் புகழ்ந்து தாம் பாடிய மறுவற்ற பாடல் நிலைபெற்று நின்று பொய்யுரையாகப் புகழ் விளைக்கும் என்று அஞ்சியே அவர் அவனை இகழ்ந்து மெய்யுரையாக மற்ருெரு பாடல் புனைந்தார்.

*"வெட்சி மரம் நிறை காட்டில் வேட்டுவரால் அலைப்புண்டு புகலிடம் காணாத கடமாவின் நல்ல ஏறு மலைச் சாரலில் மணிகள் மேலே கிளம்பவும் சிதறிய பொன் மிளிர வும் விரைவின் ஓடும் நெடிய மலைப்பக்கத்து, வெற்றி நிலை பெற்ற சிறந்த புகழ் பொருந்தி, சிற்றரையம் பேரரையம் என இரு கூறுகப் பெயர் பெற்று விளங்கி, பகைவர்க்கு அச்சந் தருகின்ற பழைய ஊரின்கண் பல கோடி அடுக்கிய பொன்னை நுங்களுக்கு உதவிய நீடிய நிலையை உடைய அரையம் கேடுற்ற விதத்தை இனிக் கூறுவேன், கேள்: நுந்தையின் தாயப் பொருளை நிறைவுற எய்திய தழைத்த மாலையினை அணிந்த புலிகடிமாலே! நும் குடியுள் ஒருவன், நின்னைப் போன்ற அறிவினன் ஒருவன், புகழ்ந்த செய்யுட் செய்யும் கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததன் பயனே அக்கேடாகும். அழகிய தேரை உடைய தலைவ! இவர் எவ்வியின் பழைய குடியிலே மணம் புனைவாராக! மற்று, இவர் கைவண் பாரி மகளிர் என்ற எனது தெளி யாத புன்சொல்லைப் பொறுப்பாயாக! அரைமலையில் முகை யற மலர்ந்த கரிய காம்பும் புறவிதழுங் கொண்ட வேங்கை யின் ஒள்ளிய பூப் பரந்த பொற்றைக்கல் பெரும்புலியின் வரிப்புறத்தினை ஒப்பத்தோன்றும் பெரியமலையிடத்து ஊர் களை உடையோய்! பெருமானே! நான்விடை கொண்டேன்; நின் வேல் வெல்வதாக!" என்று பாடி எதிர்மொழியும் வேண்டாது கபிலர் மகளிருடன் வெளியேறினர்.

மணியும் பொன்னும் மலிந்த அரையம் கழாத்தலையை இகழ்ந்ததனால் அழிந்தது போன்றே இருங்கோவேள்

---

* புறம். 202.

இருந்து ஆளும் நகருக்கும் அழிவு நேருதல் உறுதி என்ப தனைக் கபிலர் ஒருவாறு வெளிப்படையாகவே குறிப்பிடு கிறார். தாயப் பொருளைப் பெற்ற சிறப்பன்றித் தாளில் தந்த பொருள் அவனுக்கு இல்லை என்பதனையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். முன்னொரு புலவனை இகழ்ந்த குடியினன் பின்னொரு புலவனை இகழ்ந்தமை வியப்பன்று என்றும் அவர் தெரிவிக்கிறார். எவ்வி குடி எத்துணைச் சிறப்பினது! ‡ "எவ்வி உலகத்தார் யாவரும் புகும் வண்ணம் திறந்த வாயிலை உடையவன்; பலரோடு உண்டலை வழக்கமாகக் கொண்டவன்." அத்தகைய எவ்வி குடியின ரான மகளிரை இக் கீழ்க் குடியோனுக்கு வாழ்க்கைப் படுத்த எண்ணியமை நினைந்து கபிலர் இரங்குகின்றார். வேங்கைப் பூப் பரந்த பொற்றைக் கல்லை வேங்கை என மருளும் நாட்டினன் நலஞ் சான்ற நல்லாரைப் பொல்லா ராய் மருண்டமை இயற்கையே என்று அவர் தேறுகிறார். பொய்யா நாவிற் கபிலர், "நின் வேல் வெல்வதாக!" என்று குறிப்பு மொழியாற் கேடு பிறக்கக் கூறிச் சீற்றம் தணிந்து செல்கின்றார்.

---

‡ புறம். 234

# 11. நட்புக் கடன்

* "இருவேறு உலகத்து இயற்கை : திருவேறு ;
தெள்ளியர் ஆதலும் வேறு" என்று பொய்யா மொழியார் புகன்றது பொய்யா மொழியே என்பதனைக் கபிலர் காட்சியளவிற் கண்டார். திருவினைப் பெற்றவர் தெளிந்த அறிவினராய் இல்லை. அவரை அண்டியதனால் அம்மகளிர் ஆக்கம் பெறாது அவமானமே கண்டனர். ஆதலின், பாரியின் பெருமையினை நன்கு தெரிந்த எவ்வி குடியினர் இருவர்க்குப் பாரி மகளிரை மணம் புணர்வித்து நட்புக் கடனை கழிக்கக் கபிலர் எண்ணினார். ஏழ்மை கருதி அக்குடியினரும் மறுத்தால் என் செய்வது? ஆதலின், பொருள் திரட்டல் இன்றியமையாதது ஆயிற்று. மேலும், பாரி வாழ்ந்த நாளில் தம் சுற்றத்தார் வருநாட்களிலும் பசியறியாது வாழ்தற்கு வேண்டும் பெரும்பொருளைக் கபிலர் சேர்த்து வைக்கவுமில்லை ; அவ்வாறு சேர்த்து வைப்பது பண்டைப் புலவர் மரபும் அன்று. பொருள் தேடுதற்குப் பாரியைப் போலும் பண்பு மிக்காரையே நாடுதல் வேண்டும். அத்தகையோன் சேர மன்னன் செல்வக்கடுங்கோ வாழியாதனே ஆவான். ஆதலின், கபிலர் அவனிடம் செல்ல ஆவல் கொண்டனர்.

---

* குறள். 134

சேர நாடு செல்ல எண்ணிய கபிலர் பாரி மகளிரைத் தம்முடன் கொண்டு காடு மேடாய் அலைக்க மனங்கொள்ள வில்லை. மணமாகாத மங்கையரை எங்கு விட்டுச் செல்வது என்று அவர் மயங்கினுர். கபிலர் பழகித் தேர்ந்து தெளிந்த பார்ப்பார் சிலர் அறிவு நிறை ஒழுக்கங்களில் ஆன்று அமைந்து விளங்கினர். அவர்தம் பாதுகாப்பு பாரி மகளிர்க்குப் பழுதுவிளைக்காது என்று கபிலர் நம்பினுர். ஆகவே, அவர் அப்பார்ப்பாரை அணுகி, தம் அடைக்கலப் பொருளின் மேம்பாடுகளை விளங்கக் கூறி, செல்லும் செலவுகளைத் திரும்பி வருங்கால் பன்மடங்கு வழங்குவதாக வாக்களித்து, அவரிடம் உறுதிமொழி பெற்றுப் பாரி மகளிரை அடைக்கலமாக ஈந்தார். பாரி மகளிரும் தம் பாதுகாப்பில் உறுதி கொண்டவராய், கபிலரின் பிரிவுக்கும் தம்மால் அவர்க்கு நேர்ந்துள்ள துன்பங்கட்கும் வருந்தியவராய் அவரை வணங்கிப் பிரியாவிடை கொண்டனர்.

புறநானூற்றுக் குறிப்பு ஒன்று இவ்விடத்து ஆராய்தற்கு உரியது. ‘‘கலையுணக் கிழிந்த’’ (புறம்.236) என்ற புறப்பாட்டின் அடிக்குறிப்பில், ‘‘வேள் பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது’’ என்று காண்கின்றது. ‘‘பார்ப்பார்ப் படுத்தல்’’ என்ற தொடர் பார்ப்பார்க்கு உரிமையாக்கல் என்று பொருள்படும். அவ்வாறு பாரி மகளிரைப் பார்ப்பார்க்கு உரிமையாக்கியிருப்பின், ‘‘எவ்வி தொல்குடிப் படீஇயர்’’ என்று வேளிர் குடியினர்க்கு உரிமையாக்க எண்ணிய கபிலரின் கருத்து என்னவாகும்? வேளிர் மர

‡ புறம். 102

பில் தோன்றிய மகளிரைப் பார்ப்பார்க்கு வழங்குதல் நட்புக் கடனே கழித்ததும் ஆகுமோ! தம் நண்பனின் இறுதிநேர வேண்டுகோளை நிறைவேற்ற இயலாத கபிலர் வடக்கிருந்தகாலை, $ "இம்மையில் நீயும் யானும் கூடி இன்புற்றிருந்தவாறு மறுமையினும் நின்னோடு கூடி வாழ்தலை உயர்ந்த திருவருள் கூட்டுவதாக!" என்று யாங்ஙனம் துணிந்து கூறலுற்றார்! பாரியின் விருப்புக்கு மாறாகப் பார்ப்பார்ப் படுத்தமை பற்றி இரங்கியும் கூறாது விடுத்த கபிலரின் செயல் கயமையின் பாற்படும் அன்றோ! ஆதலால், பாரி மகளிரின் மணம் பற்றிய குறிப்பு ஒன்றும் புறநானூற்றுப் பாடல்களில் காணப்பெறாமையின், கபிலர் பாரி மகளிரைப் பார்ப்பார்க்கு அடைக்கலம் ஈந்தது பற்றிய செவிவழிச் செய்தியினையும் அவர் வடக்கிருந்த பாடலையும் வைத்துக்கொண்டு, அடிக்குறிப்பு எழுதிய ஆசிரியர் கபிலர் பாரி மகளிரைப் பார்ப்பார்க்கு ஈந்ததாகப் பிழைபட எழுதினர் என்றலே பொருந்தும்.

கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனை நாடியதற்கு மற்றொரு காரணமும் இருக்கலாம்:

• "சிறியிலை உழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கும் உருமிற் சீறி
ஒருமுற்று இருவர் ஓட்டிய ஒள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே!" என்று

கபிலர் அவனைப் பாராட்டுகின்றார். வாழியாதன் உழிஞை

---

$ புறம். 236.

• பதிற். 63.

மாலே சூடிக்கொள்ளேப் பொருள் மிகக் கொண்டு தமிழ்ப் படையை வளேத்து ஒரு முற்றுகையாற் சோழனேயும் பாண்டியனேயும் ஓட்டிய செய்தி இதனுற் புலனுகின்றது. இவ்வாறு ஓடிய சோழனும் பாண்டியனும் பாரியைக் கொன்ற மூவருள் இருவராய் இருத்தலும் கூடும். அவ் வாறு இருக்திருப்பின், தம் நண்பனேக் கொன்ற பகைவரை வாழியாதன் வென்றதனுற் கொண்ட நன்றியுணர்வும் கபிலரை அவண் செல்லத் தூண்டியிருக்கலாம். செல்வக்கடுங்கோ வாழியாதன் வெற்றிப் போர்களில் ஈடுபட்டிருந்தான். அவன் போர் முடித்துத் தன் கோநகரை அடைவதற்குள் பாசறையிற் சென்று கபிலர் அவனேக் கண்டு பத்துப் பாடல்களால் அவனேப் புகழ்ந்தார். அவை பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாக அமைந்துள்ளன.

செல்வக்கடுங்கோ வாழியாதன் தன் பாசறையில் நாளோலக்கத்தில் அமர்ந்திருந்தான். பாசறையிற் கபிலரின் பாவினுக்குச் செவி சாய்த்த ஒன்றே அவன் அவர்பாற்கொண்டிருந்த நன்மதிப்பை நன்கு விளக்கும். கபிலர் அவனே நோக்கி, ‡ "பழுத்துப் பசும்புண் போன்று பிளந்த பலாப் பழத்தினின்று சொரியும் தேனும் வீசும் காற்றும் பொருந்திய பறம்பு நாட்டினே உடைய பெருவிறலோன், புனே தொழில் மேம்பாட்டாற் சித்திரம் போன்று விளங்கிய நல்ல மனேயின்கண் உள்ள பாவை போன்ற நல்லாளின் கணவன், பொன்னிறப் பூவும் சிறிய இலேயும் புல்லிய அடியும் உடைய உன்ன மரத்துக்குப் பகைவன், எம் தலேவன், பூசிப் புலர்ந்த சந்தனமும் தவிராத ஈகையும்

‡ பதிற். 61.

மலர்ந்த மார்பினையும் சிறந்த வண்மையையும் உடைய பாரி முரசுக் கண்ணின் மண் புலரவும் இரவலர் இனையவும் மீண்டும் வாராத விண்ணுலகம் சென்றனன்; எனக்கு நீ வேண்டுவன அளிப்பாய்' என்று இரப்பதற்கு வரும் இயல்பினேன் அல்லேன். ஆதலின். நின் புகழை வரை கடந்து பொய்யாகக் கூறேன். 'ஈந்த பொருளின் மிகுதி நினைந்து வருந்துதல் அற்றவன்; ஈயுந்தோறும் ஈந்தமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழாதவன்; ஈதல் இடையறாத பெரிய வள்ளல், என்று உலகத்தோர் கூறும் நல்ல புகழை நின்பால் தந்து செல்ல விரும்பினேன். ஆதலால், ஒளி பொருந்திய வாளும் வலிமை மிக்க யானையும் வடுவுண்ட வீரரின் புலால் நாற்றமும் பரந்த நின் பாசறையில், நிலவு போன்ற வெள்ளிய வேலினைப் பாடும் பாடினி முழவொலியின் தாளத்திற்கு இசையத் தன் வெறுங் கையை வீசி நிற்கும் விழாச் சிறப்பும் ஆரவாரமும் மிக்க மகிழ்ச்சி ஊட்டும் ஓலக்கத்தின் கண் நான் வந்தேன்'' என்று முதற் பாடலைக் கூறினர். வாழியாதன் கபிலரின் கவிச்சிறப்பினையும் பாரியின் கொடைச் சிறப்பினையும் கொலையினையும் உணர்ந்து இன்பமும் துன்பமும் ஒருங்கு கொண்டான்.

கபிலர் தொடர்ந்து வாழியாதனின் வென்றிச் சிறப்பினை விரித்துப் பாடினர். * ''ஊழி இறுதி நாளில் ஞாயிறுகள் பலவாகத் தோன்றி மாயம் செய்ய, ஒளி திகழ்ந்து பொல்லா மயக்கமும் முழக்கமும் புரிந்து திரியும் பசிய பிசிருள்ள ஒளி பொருந்திய நெருப்பின் வேங்தாக விளங்கும் வடவைத் தீயினைப் போன்று நின் பகை

* பதிற். 62.

வரிடத்துக் கடிய திறலால் வலிமையின் வகைகள் அனைத்தினும் தேர்ந்த வெற்றி வேந்தே! இழை அணிந்த பல களிறுகளின் கூட்டமும், கார்முகில் என்று மயங்கத் தக்க கரிய பெரிய கிடுகு படைகளின் ஈட்டமும், ஈட்டி முதலியன தாக்கி வடுவுண்ட சேணமும் கத்தரித்த பிடரி மயிரும் உடைய குதிரைத் தொழுதியுங் கொண்ட நின் தானை பகை மன்னரின் வன்மை மிக்க அணுகுதற்கு அரிய அரணினைப் புடைபட வளைத்துப் புறத்தே தங்கியிருக்கும். அப்பொழுது, மதிலைப் பொரும் நீர் நிறைந்த அகழியும், மலைபோன்ற மதிலும், தம் பகைவரை வருத்தும் பெரிய கையும் உடைய நின் பகைவர் பணிமொழி கூறிப்பணிந்து திறை தருவாராயின், அவர் தம் இடம் அகன்ற நாடு புல் நிறைந்த பரந்த வெளிகளில் பல ஆக்களை மேயவிட்டு, வளம் மிக்க வயல்களில் விளைந்த பயிரினின்று உதிர்ந்து களம் சேராத தூற்றுப் பொலியைக் காஞ்சி மரத்தடியில் சேர்த்து, நீரில் மலர்ந்த ஆம்பற் பூவைத்தலையில் அணிந்து கள்ளை உண்ட வலிய கையினை உடைய உழவர் அப் பூவில் தேனுண்ண வரும் ஆடும் சிறகும் கோடும் கொண்டுள்ள வண்டுகளை ஓட்டக்கூடிய பெருமை பெறுவன ஆகும்” என்று, அவனைப் பணிந்தார் நாடு பெறும் நலங்களைச் சுட்டி, பணியார் நாடு பெறுங்கேடுகளைப் பெற வைத்தார்.

பின்னர், செல்வக்கடுங்கோவின் சிறப்பியல்களைத் தொகுத்துக் கூறுகின்றார். $“செல்வக் கோவே! சேரலர் மருக! நீ பார்ப்பார் அல்லாத பிறர்க்குப் பணிதல் அறியாய்; நட்பு நிலையில் தாழ்வுறு உளத்தினராய் அழ

---

$ பதிற். 63.

குறப் பொருந்தி நட்டவர் அல்லாத பிறர்பால் கண்ணேட்டம் கொண்டு அஞ்சாய்; நின்னேடு பொருவார் இன்மையின், வளைந்த வில் தோயும் நின் மணம் கமழ் மார்பினை மகளிர்க்கு அல்லாது பகைவர்க்கு மலர்வித்தலை அறியாய்; நிலம் நிலை பெயருங் காலமாயினும், சொன்ன சொல் பொய்த்தலை அறியாய். சிறிய இலையினை உடைய உழிஞை மாலை புனைந்து, கொள்ளைப் பொருள் மிகுதியாய் எய்தத் தண்டமிழ்ப் படைஞரை வளைத்து, மலையினை நிலை தளர்விக்கும் இடியெனச் சினந்து, ஒரே முற்றுகையிற் சோழ பாண்டியர் இருவரையும் முதுகிட்டு ஓடச்செய்து, ஒள்ளிய வாட்போர் ஆற்றல் மிக்க தானையாற் போர் வென்றேய்! பிறரை வென்று நினக்குத் தோற்ற வீரர் தம் பகைமை விடுத்து, 'யாம் இனி நின்னுல் படைக்கப்பட்டவர் போன்று ஒழுகுவோம்' என்றனர். நீயும் நின் முன்னேரின் வன்மை தொடர்ந்து வரப்பெற்று மேலும் பல போர்களை வென்ருய். ஆதலால், வாழியாத! காற்று அலைகளைத் தோற்றுவிப்பதனுல் முழங்குங் கடலை வேலியாகக் கொண்ட இடமகன்ற இவ்வுலகம் செய்த நல்லறம் உண்டாயின், அடைபெறுதலும் பூவாதலும் இல்லாத ஆம்பல் என்ற எண்ணும், வெள்ளம் என்ற பேரெண்ணின் ஆயிரம் மடங்கும் ஆகிய பல ஊழிக் காலம் நீ வாழ்வாயாக!'' என்று அவர் அவனை வாழ்த்திஞர்.

*''வெற்றி முரசும் வென்றி வாய்ந்த வாளும் பொன் அணிகளும் உடைய வேந்தர் பலர் உளர். அவராற் பயன் என்? அறங் கூறி மேம்பட்ட நாவும் புகழ் நிறைந்த வேள்விகளை நிறைவேற்றும் வேத நெறியும் கொண்டுள்ள அந்

---

* பதிற். 64.

தணர் ஏற்க, அவர்க்கு அருங்கலங்களை நீ நீர் வார்த்துக் கொடுப்பதனுல், பிறர் புகுதற்கு அரிய மணல் மலிந்த முற்றம் சேறுபட்டு, ஆங்குக் கட்டுண்டிருக்கும் களிறு அவ்விடத்தை வெறுக்கும். அதன் புறத்தே கூத்தரைக் கண்ட அளவில், 'குதிரைகளையும் தேரிற் பூட்டுதற்கு உரிய எருதுகளையும் தகுந்த அணிகலன்களால் அலங்கரித்து ஈயுமின்' என்று ஏவும் சிறந்த கொள்கை உடையாய். கழலுந் தொடியை அணிந்த அண்ணலே! கருநிற மலர்க்கழியில் மலர்ந்த நெய்தல் இதழ் போன்று கருநிறம் பொலியும் தோற்றத்தோடு உயர்ந்த மழையினும் சிறந்த பயனை நீ பொழிகின்ருய். இசை மேம்பட்ட தோன்றலே! பெரிய விசும்பிற் பல மீன்களின் ஒளியும் மங்குமாறு கதிரவன் தோன்றுதல் போன்று மாற்ருரின் மாறுபாட்டை அழித்த நினது வலிய முயற்சியை வாழ்த்தி, பசி மிக்க என் சுற்றத்தின் பசியை நீக்குமாறு நின் பாசறையிடத்து நின்னைக் காண வந்தேன்" என்று தம் வருகையின் நோக்கமும் பொருத்தமும் விளங்கக் கபிலர் பாராட்டினர்.

‡ "எறிந்த பிணங்களை இடறிச் சென்றதனுல் குருதிக் கறை படிந்த குளம்பும் விரைந்த நடையும் உள்ள குதிரைக்குப் போர் வேட்கை பிறக்கும் வண்ணம் தலையாட்டத்தைச் சூட்டி, எதிர்த்த பகைவரின் மறம் அழித்து வென்று, நிலையாமையை நினைவிற் கொண்டு பொரும் வீரர்தம் பெருமானே! விற்படை வீரரின் கவசமே! அடைந்தோர்க்குச் செல்வமே! பூண் அணிந்து அழகுக்கு அழகு செய்த உருவமும், மலர்ந்த நோக்கும், மூங்கில்

‡ பதிற். 65.

போன்று அழகிய மூட்டுக்களை உடைய பெரிய தோளும், அருந்ததியை வென்ற கற்பும், நெடுந்தூரம் மணங் கமழும் நுதலும் உடைய சேயிழையின் கணவ! பாணர்தம் புரவலனே! பரிசிலர் செல்வமே! பூண் அணிந்து விளங்கிய புகழ்சால் மார்ப! இனிய நரம்புகள் கட்டுடன் அமைந்த பாலை யாழை இசைக்க வல்ல பாணன் இரக்கம் பிறக்கும் பாலைப்பண்ணைப் பல்வேறு சுவை தோன்ற மாற்றிமாற்றி இசைத்தல் போன்று, சேறுபடப் பெய்யும் மழையினை ஒத்துப் பல்வேறு சுவைப்பட்ட மதுவினை ஈந்து விழவு அயரும் நின் நாளோலக்கத்தை இன்புடன் கண்டோம்" என்று வாழியாதனின் மனைவியின் கற்பு மேம்பாடும் கொடைச் சிறப்புந் தோன்றக் கபிலர் வாழ்த்தினர்.

கபிலர் மேலும் ஐந்து பாடல்களாற் செல்வக்கடுங் கோவின் வென்றி, கொடை, ஆட்சி முதலிய சிறப்புக்களை எடுத்துக் கூறி வாழ்த்தினர். பாடல் பெற்ற சேரன் மிக மகிழ்ந்து முதலிற் கையுறையாக நூறாயிரம் காணம் வழங்கினன். பின்னர், 'நன்றா' என்னுங் குன்றில் ஏறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாங் காட்டி அவர்க்குப் பரிசிலாக வழங்கினன். பரிசில் பெற்ற புலவர் உடனே விடைகொள்ள எண்ணங் கொண்டார். புரவலன் புலவரை உடனே பிரிய உள்ளம் வருந்தினன். கபிலர் தமது ஒக்கலின் நிலையையும், சேரன் பாசறையில் இருக்கும் தன்மையையும் எடுத்துக் கூறி அரிதின் விடை பெற்றார்.

செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலரை வழிவிடச் சிறிது தூரம் தொடர்ந்து சென்றான். பிரியும் வேளையில் அவன் அன்பு மிகுதியால் அவரது கையைப் பற்றினன்.

அதன் மென்மை அவனுக்கு வியப்பு ஊட்டியது. ''நும் கை எத்துணை மென்மையது!'' என்று அவன் வியந்து கூறினன் கபிலர் அவனை நோக்கி, * ''குரிசில்! கொடுங்கண்கொண்ட கொலை யானையால் காப்பு மிகுந்த பகைவர் கதவின் எழு வினை முறித்து, இரும்பாற் செய்த அங்குசத்தால் வேண்டு மளவில் அதனை முன்னும் பின்னும் செலுத்தவும், பாறையை உடைத்துச் சமைத்த அகழியின் நீர்ப்பரப்பும் ஆழமும் கண்டு, நிமிர்ந்து செல்லுங் குதிரையை மேலுஞ் செல்லவிடாது கடிவாளத்தைப் பிடித்து இழுத்து நிறுத்த வும், அம்பறுத்தூணி முதுகிற் பொருந்தத் தேர்மிசை நின்று வில்லின் வலிய நாணை வடுப்பொருந்த இழுத்து அம்பு விடுக்கவும், பரிசிலர்க்கு அரிய கலன்களை அள்ளி வழங்கவும் நினது தாள் தோயும் தடக்கைகள் வலியனவாய் அமைந்துள்ளன. செரு மேம்பட்ட சேயே! புலால் மணங் கமழும் துண்டத்திற்குப் பூமணங் கமழும் புகையூட்டி அமைத்த ஊனும் துவையலும் கறியும் சோறும் உண்டு வருந்துதலே அல்லாது, வருந்திச் செய்யும் பிற தொழில் அறியாவாகலின், நின்னைப் பாடுவோர் கைகள் மெல்லியன வாய் அமைந்துள்ளன'' என்று நயந்தோன்றப் பாடினர். வாழியாதன் பாடலின் மகிழ்ந்தும், பிரிவுக்கு வருந்தியும், மீண்டுங் கூடலை நாடியும் பிரியா விடை நல்கினன்.

கபிலர் நேரே தமது ஊரை அடைந்தார்; தம்மை நம்பியிருந்த சுற்றத்தார் பசியின்றி வாழ்வதற்கு வேண் டிய பெரும் பொருளை அவர்க்கு வழங்கினர்; எஞ்சியிருந்த

---

* புறப். 14.

செல்வத்தை எடுத்துக்கொண்டார்; நேரே பாரி மகளி ரைக் கருதிப் பார்ப்பார் அகம் சென்றார். அரிவையர் என்னென்ன அல்லல்களுக்கு ஆளாயினரோ என்று அகந் துடித்துச் சென்ற கபிலர் ஆண்டுக்கண்ட காட்சி அவ ருக்கு அளவிலா வியப்பு விளைத்தது. பாரி மகளிர் குறை ஒன்றும் இன்றி நிறைமதிபோன்று இன்புற்று நின்றனர். கபிலரைக் கண்டதும் மகளிர் விரைந்தோடி வந்து முகம் மலர்ந்து அகங்கனிந்து வரவேற்றனர். பார்ப்பார் வந்து நிகழ்ந்தன கூறினர். பாரியின் முடிவும், கபிலர் வெளிப் பாடும், மகளிர் மண மறுப்பும், கபிலரின் சேரநாட்டுச் செலவும் அறிந்த மலையமான் திருமுடிக்காரி பாரி மக ளிரை அடைக்கலங் கொண்ட பார்ப்பாரை வருவித்து, மகளிர்க்கும் பார்ப்பார்க்கும் வேண்டிய செல்வங்களை மிகைபட வழங்கி, கபிலர் திரும்பி வந்ததும் மகளிருடன் தன் அவைக்கு வருமாறு அறிவிக்கவும் ஏவி, அவர் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இவற்றை அறிந்த கபிலர் அப்பார்ப்பார்க்கு நன்றிப் பரி சாகச் சிறிது பொருள் வழங்கி, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு மகளிருடன் மலையமானைக் காணச் சென்றார்.

மலையமான் கபிலரை உவப்புடன் வரவேற்றான். பாரி யின் கொலையும் மகளிர் துயரமும் அவர்தம் பேச்சில் நெடு நேரத்தைக் கவர்ந்தன. சிறுமதியாளரைச் சென்று மணம் வேண்டி மறுக்கப்பெற்றமை குறித்து மலையமான் பெரிதும் வருந்தினான். செல்வப் பொருட்டாய்ச் சேர நாடு சென்றமையின் தன்பால் கபிலர்க்கு அத்துணை அன்பு இல்லை என்று அவன் குறை கூறினான். கபிலரின் விருப்பும் ஒத்திருப்பின், பாரி மகளிர்க்கு மணம் நிறை

வேற்றுதல் தன் பொறுப்பு என்று எடுத்துக் கூறினான். கபிலர் அத்துணையும் அமைவரக் கேட்டு, மணச் செய்தி குறித்ததும் வியப்புற்று விழித்து நோக்கினார். மலையனின் மனக் கருத்தினை அறியும் விருப்பம் அவர் முகத்தில் முந்துற்று நின்றது. மலையமான் கூறினான்: “புலவர் பெருமானே! எனது மரபில் வழுவாது தோன்றிய காளையர் இருவர் அறிவிலும் திருவிலும் ஆண்மையிலுஞ் சிறந்து இருக்கின்றனர். பாரியின் பாவையர் இருவரும் அவர்க்கு ஏற்ற துணைவியர் ஆவர் என்பது என் கருத்து. அக் கருத்தினைத் தம் கருத்தாகக் கொண்டு அக்காளையரும் இம் மணத்திற்கு இசைந்துள்ளனர். நுமது கருத்தும் மங்கையர் மனமும் இசைவதாயின் எண்ணிய ஞான்று திருமணம் நிகழலாம். ஆய்ந்து அமர்ந்து தங்கள் விருப்பினை வெளியிட வேண்டுகின்றேன்.”

பாரி மகளிற்கு மலையமான் குறித்த காளையரின் இயல்புகளைக் கபிலர் பன்னாட் பயின்று அறிந்து, மகளிரின் உள்ளமும் உணர்ந்து, மணத்திற்கு இசைவு தெரிவித்தார். மலையமானின் மாளிகையில் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. மலையமான் மணமக்களுக்குப் பரிசுகள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான். சேரமானிடம் பெற்று வந்த செல்வத்தின் எஞ்சிய பகுதியை மகளிர் இருவர்க்கும் பகிர்ந்து அளித்துக் கபிலரும் தம் நட்புக் கடன் நன்கு நிறைவுற்ற பெருமிதத்தால் மகிழ்ந்தார். மங்கையரும் தம் உள்ளம் ஒன்றிய காதலருடன் மனம் ஒருமித்து இல்லறத்தின் நல்லறங்கள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

பாரி மகளிர் திருமணங் குறித்துத் தமிழ் நாவலர் சரிதையிற் காணும் பாடல்கள் பிற்காலத்தவர் புனைவே என்று நாவலர் நாட்டார் அவர்கள் தக்க ஏதுக்களால் நிறுவியுள்ளார். எவ்வகையினும் இம்மண நிகழ்ச்சியினை ஔவையார் நிறைவேற்றினார் என்று கொள்ள இடமில்லை. பாரி மகளிர் இருவரையும் கபிலர் மலையனுக்கு மணம் புரிவித்தார் என்றோ, மூத்தவளை மலையனுக்கு மணம் புணர்வித்து இளையவளைப் பார்ப்பார் பாதுகாப்பில் வைத்து மடிந்தார் என்றோ கொள்வது கபிலர் இயல்புக்கும் நட்பு நேர்மைக்கும் பொருந்துவதன்றாம். விச்சிக்கோனையும் இருங்கோவேளையும் அடுத்து நின்று, பாரி மகளிர் இருவரையும் மணந்துகொள்ளக் கபிலர் தனித்தனியே வேண்டினாராயினும், இருவருள் ஒருத்தியை ஒருவனுக்கு மணம் புணர்வித்து, மற்றொருத்திக்கு மற்றொரு மணமகனை நாடிச் செல்லுதலே கபிலரின் கருத்தாகும். அவ்வாறு அவர் பொதுமையிற் கூறியதற்குப் பாரி மகளிர் இருவரும் அவருடன் இருந்ததே காரணமாகும். ஆகவே, திருக்கோவலூர்ச் சாசனத்திற் காணும், "முத்தமிழ்க் கபிலன் மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப் பெண்ணை மலையற்கு உதவி" என்ற குறிப்பினைப் "பெண்டிரை மலையர்க்கு உதவி" என்று திருத்திப் படித்தல் பொருந்தும்.

செல்வக்கடுங்கோவின் கொடைச்சிறப்பால் ஒக்கலின் பசியும் ஒருவியது. திருமுடிக்காரியின் நட்புச் சிறப்பால் அடைக்கல மகளிரின் திருமணமும் நிறைவேறியது.

ஆயினும், கபிலரின் நட்புக் கடன் இன்னும் நிறைவுற வில்லை. பாரி இல்லாப் பாரில் வாழ்தல் அவர்க்கு ஒரு பாரமாக தோன்றியது. அவர் பாரியோடு உடனுறை வாழ்க்கை விரும்பினுர். வடக்கிருந்து உயிர் துறக்க அவர் உள்ளங் கொண்டார். வடக்கிருத்தலாவது ஆற்றிடைக்குறையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்து உண்ணுது உயிர் துறத்தல். மைந்தரின் தீமை கண்டு சினந்து போர்மேற்கொண்ட கோப்பெருஞ் சோழன் புல்லாற்றூர் எயிற்றியனுர் என்ற புலவர் அறிவுரையாற் போரினை விடுத்து வடக்கிருந்து உயிர் துறந்தான்; அவனோடு உள்ளத்து உணர்வால் நட்புற்றிருந்த பிசிராந்தையார் பாண்டி நாட்டினின்று ஆண்டுப் போந்து அவ்விடத்தே வடக்கிருந்தார்; சோழனோடு வடக்கிருக்க வந்த பொத்தியார் என்ற புலவரை, "நினக்குப் புதல்வன் பிறந்த பின் வா" என்று சோழன் விலக்க, புதல்வன் பிறந்த பின்னர் அவர் வந்து வடக்கிருந்தார். இவ்வாறு, கொண்ட கொள்கையை நிறுவுவதற்கும், நட்புக் கடனைக் கழித்தற்கும் வடக்கிருத்தல் பண்டைத் தமிழகத்தில் நாகரிகச் செயலாகக் கருதப்பெற்றது. அவ்வாறே கணவரை இழந்த மகளிர் உடனுயிர் துறத்தலும், உடன் கட்டை ஏறலும் கருதப்பெற்றன.

கபிலர் பெண்ணையாற்றினை அடைந்தார்; ஆற்றிடைக்குறையில் வடக்கு நோக்கி அமர்ந்தார்; உண்ணு நோன்பு மேற்கொண்டார்; தம் உயிர் அன்பனை உன்னி

உள்ளம் உருகினர். *'முசுக்கலை கிழித்து உண்ட முழவு போலும் பெரிய பலாப்பழம் வில் ஏந்திய குறவர்க்குச் சின்னாள் இட்டு வைத்து உண்ணும் உணவாகும் மலை நாட்டை உடையோய்! வண்மை மிக்க பாரி! யான் நினது உள்ளம் மேவிய உயிரன்பன் அன்மையால், பெருமை மிக்க தலைமை நட்பிற்குப் பொருந்தா முறையில், நின்னோடு கூட வர இயையாது, 'நீ ஈண்டுத் தவிர்க' என்று கூறி, இவ்வாறு வேறுபட்ட தன்மையன் ஆயினை. ஆதலின், நீ என்னைப் புரந்த காலத்தும் கலந்த கேண்மைக்குப் பொருந்த ஒழுகாது என்னை வெறுத்தே இருந்தனை போலும்! ஆயினும், இம்மையில் நீயும் நானும் இடையறாது கூடி இன்புற்றிருந்தது போன்று மறுமையிலும் நின்னோடு உடனுறைதலை உயர்ந்த திருவருள் கூட்டுவதாக!" என்று பாடினர். ஆருயிர் நண்பனை அவாவிய உயிர் அவரது உடற்சிறை விடுத்து உயரப் பறந்தது.

உலகு புரத்தல் மாரியின் சிறப்பியல்பே ஆயினும், உலகு புரத்தற் பொருட்டுத் தன்னையே முற்றக் கொடுத்தல் மாரிக்கு இயல்பு அன்று. முகிலே இனி இல்லை என்னுமாறு மழை பெய்தது என்றேனும் உண்டா? பாரி தனக்கு உரிய யாவற்றையும் தன்னையுமே இரந்தவர்க்கு ஈந்தான். பெய்த நீரை மீண்டும் முகிலாகப் பெறுதலும் மழையாக ஈதலும் மாரியின் இயல்பு. பாரி தன் கொடையால் எதனை நாடினன்? உயிரெனக் கருதிய மகளிர்க்

---

* புறம். 236.

கென்று ஏதேனும் ஒதுக்கி வைத்தாஞ? தன்னையே பரிசிலாகப் பெற்ற வேந்தரிடமேனும் மாற்றுதவி தேடினஞ? தன் கொடையே தனக்குத் துணை என்று அவன் நம்பினன். அவன் எண்ணியவாறே அவன் மகளிர் நல்ல துணைவரைப் பெற்றனர். உலகு புறத்திற்குப் பாரிக்குப் பிற்படவே மாரி உண்டு என்ற புகழுக்கும் அவன் தகுதி எய்தினன்.

—

85671
031: 3N155:11
K7;1
MADURAI UNIVERSITY LIBRARY. ★ MADURAI-2. ★

PRINTED AT
S. R. PRESS, TUTICORIN-1.